பிப்ரவரி 2010
ரூ. 7.00

# புதிய ஜனநாயகம்



## மக்கள் மீது போர் நடத்தும்
# கொலைகார ப.சி.

# "தில்லை நடராசர் கோயிலில் நமது முப்பாட்டன் நந்தனார் நுழைந்த தெற்கு வாயிலை அடைத்து தீட்சிதர்கள் எழுப்பியிருக்கும் தீண்டாமைச் சுவரைத் தகர்த்தெறிவோம்!"

## - மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் (HRPC) பிரச்சாரம்-பொதுக்கூட்டம்



''தில்லை நடராசர் கோயில் சிற்றம்பல மேடையில் தமிழ் ஒலிக்க வேண்டும்; இக்கோயிலை அறநிலைய ஆட்சித்துறையின் பொறுப்பின் கீழ் கொண்டுவந்து தீட்சிதர்களின் ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும்; நந்தனார் நுழைந்த தெற்கு வாயிலை அடைத்து தீட்சிதர்கள் எழுப்பியுள்ள தீண்டாமைச் சுவரை அகற்ற வேண்டும்!'' ஆகிய மூன்று கோரிக்கைகளுடன் கடந்த ஐந்தாண்டுகளாக புரட்சிகர அமைப்புகளும் ம.உ.பா.மையமும் நடத்திய விடாப்பிடியான போராட்டங்களின் விளைவாக முதல் இரு கோரிக்கைகள் நிறைவேறியுள்ளன.

இம்முதற்கட்ட வெற்றியோடு நில்லாமல், ''கொலை-கொள்ளை முதலான கிரிமினல் குற்றங்கள் புரிந்த பார்ப்பன தீட்சிதர்களைக் கைது செய்ய வேண்டும்! நந்தனார் நுழைந்த தில்லை நடராசர் கோயில் தெற்கு வாயிலை அடைத்து நிற்கும் தீண்டாமைச் சுவரைத் தகர்த்தெறிய வேண்டும்!'' என்ற மூன்றாவது கோரிக்கையை முன்வைத்து, புரட்சிகர அமைப்புகளையும் பல்வேறு கட்சிகள் தமிழின உணர்வாளர்களையும் கொண்ட மனித உரிமைப் பாதுகாப்பு மையம் தலைமையிலான கூட்டமைப்பு, கடந்த அக்டோபர் முதலாக தமிழகமெங்கும் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகிறது. கடந்த அக்டோபரில் சிதம்பரம் நகரிலும் சுற்றுப்புற பகுதிகளிலும் தெருமுனைக் கூட்டங்களையும் அதன் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தையும் இவ்வமைப்பினர் நடத்தினர்.

ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகள் ம.உ.பா.மையத்துடன் இணைந்து, கடந்த டிசம்பர் 20-ஆம் தேதி தொடங்கி ஜனவரி 3-ஆம் தேதி வரை கடலூர், சிதம்பரம், விருத்தாசலம், மயிலாடுதுறை பேருந்து நிலையங்களிலும், சிதம்பரம் நகரிலும் தொடர்ச்சியாக 15 நாட்கள் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டன. சிதம்பரத்தைச் சுற்றியுள்ள ஜெயங்கொண்டம், நெய்வேலி, திருமுட்டம், சீர்காழி, விருத்தாசலம், சேத்தியாத்தோப்பு ஆகிய இடங்களில் பொதுக்கூட்டம் -கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

''தீண்டாமைச் சுவரை உடைக்கும் தேதியை அறிவியுங்கள். நாங்கள் 10,20 பேருடன் வந்து போராட்டத்தில் கலந்து கொள்கிறோம்!'' என்று உற்சாகத்துடன் வரவேற்ற உழைக்கும் மக்கள், ''உங்களால்தான் சிற்றம்பல மேடையில் தமிழில் பாட முடிந்தது; உங்களால்தான் தீட்சிதர்கள் குடுமிப்பிடியிலிருந்த தில்லை கோயில் அரசின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது; உங்களால் தீண்டாமைச் சுவர் இடித்து நொறுக்கப்படும் நாள் வெகுதொலைவில் இல்லை'' என்று நம்பிக்கையுடன் வாழ்த்தி, இப்பிரச்சார இயக்கத்தை வரவேற்று நன்கொடை அளித்தனர்.

இந்தப் பிரச்சார இயக்கத்தின் நிறைவாக 3.1.2010 அன்று சிதம்பரத்தில் மாபெரும் பொதுக்கூட்டம்-கலைநிகழ்ச்சி

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்





# விலையேற்றம்: மக்கள் மீதான அரசின் திட்டமிட்ட தாக்குதல்!

அரிசி, கோதுமை, சமையல் எண்ணெய், பருப்பு வகைகள், சர்க்கரை - பால் மற்றும் காய்கறிகள் ஆகிய இன்றியமையாத உணவுப் பொருட்களின் விலையேற்றம் ஏழை-எளிய மக்களின் கழுத்தை நெருக்கிக் கொண்டிருக்கிறது. நாட்டின் பொருளாதாரத்தில் பணவீக்கம் என்பது நேர்விகிதத்தில் விலைவாசி ஏற்றத்தையே குறிக்கிறது. ஆறு மாதங்களுக்கு முன்பு பணவீக்கம் என்பது எதிர்மறையில் அதாவது சுழியத்துக்கு கீழே இருந்தது. பணவீக்கம் இவ்வாறு எதிர்மறையில் இருப்பது தொழில்முறை உற்பத்தியையும் விற்பனையையும் மந்தமாக்கி முடக்கிவிடும் என்பதால் ஆலைத் தரகு-முதலாளிகள், வியாபாரிகள்-வர்த்தகர்கள் நலன்களுக்காக அரசுதான் தக்க நிதிக் கொள்கைகளை மேற்கொண்டு பண வீக்கத்தை ஏற்படுத்தியது.

இப்போது மொத்த விலைவாசி குறியீட்டு எண் அடிப்படையில் பணவீக்கம் ஏழு சதவீதமாகவும், உணவுப் பொருள்களின் பணவீக்கம் 20 சதவீதமாகவும் இருப்பதாக அரசே ஒப்புக் கொள்கிறது. ஆனால், சந்தையில் சில்லரை விற்பனை விலைக் குறியீடு அடிப்படையில் கணக்கிட்டால் இவையே அதிர்ச்சியூட்டும் அளவுக்கு உயர்ந்து நிற்கிறது. விலைவாசி செங்குத்தாக உயர்ந்து கொண்டே போகிறது என்று நாடாளுமன்றத்தின் நிதி அமைச்சக நிலைக்குழு இரண்டு மாதங்களுக்கு முன்பே எச்சரித்திருக்கிறது. அதன் மீது உருப்படியான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாது இப்போது அமைச்சர்கள் நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள். பருவமழை பொய்த்துப் போனது, பொது விநியோகத்துக்கு ஒதுக்கப்படும் உணவு தானியங்களை மாநில அரசுகள் எடுக்க மறுப்பது போன்ற காரணங்களால் விலைவாசி கட்டுப்படுத்தப்பட முடியாமல் போனது என்று இப்போது கூறுகிறார்கள். உணவு தானியக் கையிருப்புகளை விநியோகத்துக்குத் திறந்துவிடுவது, சர்க்கரை, சமையல் எண்ணெய் இறக்குமதி செய்வது ஆகியவை மூலம் விலைவாசியைக் கட்டுப்படுத்தி விட முடியும் என்கிறார்கள்.

இறக்குமதியால் மொத்த விற்பனை விலை குறைந்த போதும் அதன் பலன் சில்லரை விற்பனையில் மக்களைச் சென்றடைவதற்கான வழிவகைகள் எதுவும் கிடையாது. மொத்த வியாபாரப் பெரு முதலைகளும், இடைத்தரகர்களும் கொள்ளையடிப்பதை தடுப்பதற்கான எவ்வித முயற்சியையும் அரசு மேற்கொள்ளவில்லை. பொதுவிநியோகத்துக்கு மத்திய அரசு ஒதுக்கும் உணவு - தானியங்களுக்கான விலை, வெளிச்சந்தை விலையின் அளவுக்கே பெரும்பாலும் இருப்பதால் அதை வாங்கி விற்பதற்கு மாநில அரசுகள் மறுக்கின்றன.

ஒரு தனிநபரோ, நிறுவனமோ 50,000 டன் வரை உணவு தானியத்தைக் கையிருப்பு வைத்துக் கொள்வதற்கு சட்டப்படி தடையில்லை. இந்த உரிமையைப் பயன்படுத்திக் கொண்டு உணவுப் பதுக்கல் வியாபாரிகள் வரைமுறையின்றிக் கொள்ளையடிக்கிறார்கள். சில்லரை விற்பனையலி அம்பானி, பிர்லா போன்ற பெரும் தரகு முதலாளிகள் நுழைந்த பிறகு, பெரு நகரங்களில் அத்தியாவசியப் பண்டங்களை ஏகபோகமாகக் கொள்முதல் செய்வதும் விலைவாசியைத் தாறுமாறாக ஏற்றுவதும் கொள்ளையடிப்பதும் நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்காற்றுகிறது. இது போதாதென்று சாராய உற்பத்திக்கும், உயிரி எரிசக்தி உற்பத்திக்கும் உணவு தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வகைகளைப் பயன்படுத்துவதற்கு மானியங்கள் கொடுத்து அரசே ஊக்குவிப்பதால் அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலையும் பற்றாக்குறையும் விரைவில் எகிறிப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக, பா.ஜ.க. ஆட்சியில் ஆரம்பித்து, காங்கிரசு ஆட்சியில் தொடரும் ஊக வணிகம் மற்றும் முன்பேர வணிகம் காரணமாக விவசாய விளைபொருட்கள் உள்ளிட்ட சரக்கு வர்த்தகத்தில் நிதி மூலதன ஆதிக்கம் பெருகி விட்டது. பங்குச் சந்தையில் நிதி மூலதன ஆதிக்கசக்திகளின் கொள்ளையைப் போலவே விவசாய விளைபொருட்களைக் கட்டுப்படுத்துவதிலும் கொள்ளையடிப்பதிலும் நிதி மூலதன ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டு விட்டது. இதை வீழ்த்தாமல் சில சில்லரைப் பொருளாதார நடவடிக்கைகளினால் விலைவாசியைக் கட்டுப்படுத்தி விட முடியாது.


புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 25 இதழ்: 4
பிப்ரவரி 2010

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: ரூ.750.00



தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561



## காட்டு வேட்டை:

# மக்கள் மீது போர் நடத்தும் கொலைகார ப.சி.

### மாவோயிஸ்டுகளுக்கு எதிரான போர் என்ற பெயரில் தொடுக்கப்பட்டிருக்கும் இந்தப் போர் உண்மையில் மக்களுக்கு எதிரான போர்!

**காட்டு வேட்டை என்ற பெயரில் சட்டவிரோத கொலைகார ஆட்சிதான் சத்தீஸ்கரில் நடக்கிறது.**

என்னெய்க்காக ஈராக் மீது போர் தொடுத்து, ஆக்கிரமித்துள்ள அமெரிக்க பயங்கரவாதிகளின் வழியில், இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள் மற்றும் பன்னாட்டு ஏகபோக முதலாளிகளின் சூறையாடலுக்காக நாட்டு மக்கள் மீதே காட்டு வேட்டை என்ற மிகக் கொடிய போரை நடத்தி வருகிறார், கொலைகார உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம். அடர்ந்த காடுகளும் கனிம வளமும் நிறைந்த சத்தீஸ்கர், ஜார்கண்ட், ஒரிசா மாநிலங்களிலும்; மகாராஷ்டிரா, ஆந்திரா, ம.பி. மாநில எல்லைப்புற பகுதிகளிலும் உள்ள பழங்குடியின மக்களை, அவர்களின் மண்ணிலிருந்து வெளியேற்றிவிட்டு, இப்பகுதியை உள்நாட்டு-வெளிநாட்டு ஏகபோக முதலாளிகளின் சூறையாடலுக்குத் திறந்து விடுவதற்காகவே, ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இராணுவப் படைகளைக் குவித்து காட்டு வேட்டை எனும் இப்போர் நடத்தப்படுகிறது. தரகு முதலாளிகள் மற்றும் பன்னாட்டு ஏகபோக முதலாளிகளின் பகற்கொள்ளையைப் பாதிக்கும் விதத்தில் யார் போராடினாலும், அவர்களுக்கு எதிராக அரசு போர் தொடுக்கும் என்பதே கொலைகார ப.சிதம்பரம் விடுக்கும் எச்சரிக்கை. அண்மையில், சத்தீஸ்கர் மாநிலத்தில் ப.சி. வழிநடத்தும் கொலைவெறியாட்டங்களும், அரசு பயங்கரவாத போலீசும் சல்வாஜுடும் என்ற கூலிப் படையும் நடத்தியுள்ள அட்டூழியங்களும் இதை மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன.

•••



சத்தீஸ்கரில் சீருடை அணியாத கொலைகார போலீசும் சல்வாஜுடும் குண்டர்களும் பயன்படுத்தும் ''நம்பர் பிளேட்'' இல்லாத அரசு வாகனம்.

**ச**த்தீஸ்கர் போலீசின் 'புத்திசாலித்தனமான' சில நடைமுறைகளை கேட்கும் பொழுது, நீங்கள் வியப்படையாமலிருக்க முடியாது. உதாரணமாக, சத்தீஸ்கர் போலீசார் மற்றும் சல்வாஜுடும் எனும் அரசு ஆதரவு கூலிப்படையினர் பயன்படுத்தும் எந்தக் கார்களிலும் நம்பர் பிளேட் கிடையாது. இது ஏன் என விசாரித்தால், அவர்கள் கூறும் காரணம், ''நம்பர் பிளேட்டை வைத்து மாவோயிஸ்டுகள் போலீசு வாகனங்களை அடையாளம் கண்டு கொள்வார்கள்''. சரி, நம்பர் பிளேட் இல்லாமலிருப்பதே ஒரு அடையாளமாகி விடாதா என நீங்கள் கேட்கலாம். சிரிக்கவும் கூட செய்யலாம். ஆனால், இந்தக் கேள்வியை நீங்கள் சத்தீஸ்கரில் கேட்க முடியாது. மாவோயிஸ்டு ஆதரவாளர் என உடன

காந்தி தேசத்தின் கொலைவெறியை வெளிச்சம் போட்டுக் காட்டிய காந்தியவாதி ஹிமான்சு குமார்.



டியாக கைது செய்யப்படுவீர்கள். சத்தீஸ்கரில் போலீசார் சீருடை அணிவதில்லை. பேட்ஜ் அணிவதில்லை. ஒரு போலீசுக்காரன் மக்களைத் தாக்கினால், அவனுடைய வாகன எண்ணையோ, பெயரையோ கூட ஒருவர் அறியக் கூடாது என்பதற்காகவே மேற்கூறிய 'கட்டுப்பாடான' நடைமுறையை போலீசு பின்பற்றி வருகிறது.



அரசு பயங்கரவாத சல்வாஜூடும் குண்டர் படையால் கைவிரல்கள் துண்டிக்கப்பட்ட இரண்டே வயதான 'மாவோயிஸ்ட்' மாத்வி முகேஷ்.

ஆம், இத்தகைய சட்ட விரோதக் காட்டாட்சிதான் அங்கே நடந்து கொண்டிருக்கிறது.

2005-இல் டாடா, மித்தல் போன்ற முதலாளிகள் நிலங்கள், இயற்கை வளங்களை அபகரிப்பதற்காக, மாவோயிஸ்டுகளை வேட்டையாடுவது என்ற முகாந்திரத்தில், சல்வாஜுடும் எனும் அரசு ஆதரவு கூலிப் படை அங்கே துவக்கி வைக்கப்பட்டது. இன்று வரை, சல்வாஜுடும் ஆயிரக்கணக்கான பழங்குடி மக்களை காக்கை, குருவிகளைப் போல சுட்டுக் கொன்று வருகிறது. கணக்கற்ற பழங்குடிப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கான கிராமங்கள் தீ வைத்து கொளுத்தப்பட்டுள்ளன. இலட்சக்கணக்கான பழங்குடி மக்கள் ஒன்று, சத்தீஸ்கரை விட்டு தப்பியோடியுள்ளனர் அல்லது ராய்ப்பூர் நெடுஞ்சாலையின் இரு மருங்கிலுமுள்ள முகாம்களில் அகதிகளாக சிறை வைக்கப்பட்டுள்ளனர். 70 வயது முதிய பழங்குடி பெண்மணியின் மார்பகங்கள் அறுக்கப்பட்டன; நிறை மாத கர்ப்பிணி ஓட ஓட விரட்டியடிக்கப்பட்டார்; 2 வயது குழந்தையின் விரல்கள் துண்டிக்கப்பட்டன. இவை அனைத்தும் எங்கோ தொலைதூர ஆப்பிரிக்க நாட்டில் நடக்கவில்லை. உலகின் மிகப் பெரிய ஜனநாயகமாம், பாரதத் தவத்திரு நாட்டில்தான் நடந்து கொண்டிருக்கிறது. வளர்ந்து வரும் வல்லரசின் ஜனநாயக யோக்கியதையை, காந்தி தேசத்தின் கொலைவெறி முகத்தை, தற்பொழுது சத்தீஸ்கரில் ஒரு காந்தியவாதியே வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறார்.

1992-இல், வினோபாவின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட ஹிமான்சு குமார், உத்தரப் பிரதேசத்திலிருந்து தனது மனைவி, மகள்களோடு, மிகவும் பின்தங்கிய பகுதியான சத்தீஸ்கர் மாநிலத்தின் தண்டேவாடா மாவட்டத்திற்கு வந்திறங்கினார். பழங்குடியினர் மத்தியில் கல்வி, சுகாதாரம் முதலான நலப் பணிகளை, ''வனவாசி சேத்னா ஆசிரமம்'' (வி.சி.ஏ.) என்ற தனது தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மூலமாக, 15 ஆண்டுகளுக்கும் மேலாக செய்து வந்தார். 2005-லிருந்து நிலைமைகள் மாறத் துவங்கின. சல்வாஜுடுமின் அட்டூழியங்களுக்கெதிராக, ஹிமான்சு குமார் குரல் கொடுக்கத் துவங்கினார். பல்வேறு உண்மை அறியும் குழுக்களில் மனித உரிமைச் செயல்பாட்டாளர்களோடு இணைந்து செயல்பட்டு, எண்ணற்ற அடக்குமுறைகள், கொலைகள், பாலியல் வன்முறைகளை வெளிக் கொணர்ந்தார்.

சல்வாஜூடும் குண்டர்படையால் சுடப்பட்டு கால் முடமாகித் தவிக்கும் சோதி சம்போ.





**அரசின் பயங்கரவாதக் கொலை வெறியாட்டத்தை எதிர்த்த காந்தியவாதி ஹிமான்சு குமார், போலிசின் அடக்குமுறைக்கு அஞ்சி தலைமறைவாகி விட்டார்.**



உச்சநீதி மன்றத்தில் சல்வாஜுடுமின் அக்கிரமங்களை அம்பலப்படுத்திய நந்தினி சுந்தர் முதலான அறிவுஜீவிகளுக்குத் துணை நின்றார். ஏறத்தாழ 600-க்கும் மேற்பட்ட குற்றங்களை காவல்துறையில் புகார்களாகப் பதிவு செய்யப் போராடினார். லிங்ககிரி, பசகுடா முதலான கிராமங்களிலிருந்து ஆந்திராவிற்கு உயிர் பிழைக்கத் தப்பியோடிய மக்களை மீட்டு, அவர்களுக்கு நம்பிக்கையூட்டி, மீள்குடியமர்த்தும் பணியில் ஈடுபட்டார். விளைவு, அரசு தனது நெற்றிக் கண்ணைத் திறந்தது.

2009, மே மாதத்தில், எந்த அறிவிப்புமின்றி, புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டது எனக் கூறி ஹிமான்சு குமாரின் ஆசிரமம் இடித்து தரைமட்டமாக்கப்பட்டது. அவரது அமைப்பின் ஊழியர்கள் மிரட்டல்களுக்கு ஆளாயினர். ஆகஸ்டு மாதத்தில் கோபா குஞ்சம் என்ற முன்னணி ஊழியர் கடுமையாகத் தாக்கப்பட்டார். ஜனவரி 8, 2009 அன்று சிங்கராம் எனும் பகுதியில், 15 பழங்குடி மக்கள் கொலை செய்யப்பட்டனர். அதே போன்று, ஜூன் 18, 2008 அன்று மத்வாடா எனும் பகுதியில், காவல் நிலையம் எதிரிலேயே மூன்று பழங்குடி இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த இரண்டு சம்பவங்களிலும், கொலை செய்யப்பட்டவர்கள் மாவோயிஸ்டுகள் என சல்வாஜுடும் கதை கட்டியது. இதனை அம்பலப்படுத்தி, சாட்சிகளுக்கு நம்பிக்கையூட்டி, வழக்குப் பதிவு செய்ய துணை நின்றவர் கோபா குஞ்சம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், அக்டோபர் 1, 2009 அன்று கூம்பட் எனும் கிராமத்தில், ஐம்பது வயது முதியவர், எட்டு வயது சிறுமி உட்பட, ஒன்பது பழங்குடி மக்கள் மாவோயிஸ்டுகள் என சல்வாஜுடும் கூலிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இரண்டே வயதான மாத்வி முகேஷ் எனும் குழந்தையின் மூன்று விரல்கள் துண்டிக்கப்பட்டன. சோதி சாம்போ எனும் பழங்குடிப் பெண் காலில் சுடப்பட்டார். அவர் ஹிமான்சு குமார் ஆசிரமத்தில் அடைக்கலம் தேடினார். கூம்பட் படுகொலை மற்றும் கச்சன்பள்ளி படுகொலையை அம்பலப்படுத்தி உச்சநீதி மன்றத்தில் ஹிமான்சு ரிட் மனு தாக்கல் செய்தார். உச்சநீதி மன்றமும் சத்தீஸ்கர் அரசுக்கு நோட்டீசு அனுப்பியது.

அரசின் தாக்குதல்கள் மென்மேலும் மூர்க்கத்தனமாக அதிகரிக்க துவங்கியது. ''ஆப்பரேசன் கிரீன் ஹண்ட்'' (காட்டுவேட்டை) எனும் உள்நாட்டு யுத்தத்திற்கான அறிவிப்பை அரசு உரத்த குரலில் பேசத் துவங்கியது. நவம்பர் 25-ஆம் தேதியன்று, காட்டு வேட்டை நடவடிக்கை காரணமாக, வி.சி.ஏ. ஊழியர்கள் எவரும் மக்களை சந்திக்கச் செல்லக் கூடாது என அரசு எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்தது. இதனையொட்டி, பி.யூ.சி.எல், என்.ஏ.பி.எம். முதலான மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து, ''டிசம்பர் இரண்டாவது வாரத்தில் தண்டேவாடாவின் 17 கிராமங்களுக்குப் பாதயாத்திரை செல்வது, மாத இறுதியில் அமைதியான முறையில் மக்களைத் திரட்டி சத்தியாக்கிரகம் செய்வது, ஜனவரி முதல் வாரத்தில் மக்கள் கருத்தறிதல் கூட்டம் நடத்துவது'' என ஹிமான்சு குமார் அறிவித்தார். அரசும் தனது இறுதி 'நடவடிக்கையைத்' துவங்கியது.

குரூர நகைச்சுவையாக, மனித உரிமை நாளான டிசம்பர் 10-ஆம் தேதியன்று, வி.சி.ஏ.-வை முழுமையாக முடக்குவதற்கான அடக்குமுறை துவங்கியது. ''ஹிமான்சுவை விரட்டு, பஸ்தாரைக் காப்பாற்று!'', ''ஹிமான்சுவைக் கொன்றொழிப்போம்!'' என்ற முழக்கங்களோடு சல்வாஜுடும் ஆர்ப்பாட்டம் நடத்தியது. தண்டேவாடாவில் உள்ள யாரும் ஹிமான்சு குமாருக்கு நிலமோ, இடமோ அளிக்கக் கூடாது, மீறினால் கொலை

உண்மையை அறியச் சென்ற பத்திரிகையாளர்கள் அறிவுத்துறையினர் மீது போலீசார் தாக்குதல் நடத்தி பொய்வழக்கு போட்டுள்ளனர்.

நாட்டு மக்கள் மீதான போர்: ஒரு இலட்சம் இராணுவப் படைகளைக் குவித்து கொலைகார ப.சி. நடத்தும் காட்டுவேட்டை.






செய்வோம் என போலீசு முன்னிலையிலேயே பகிரங்கமாக மிரட்டல் விடுக்கப்பட்டது. மாவோயிஸ்டுகளால் கடத்திக் கொலை செய்யப்பட்ட சல்வாஜுடும் உறுப்பினர் வழக்கில் பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டு, கோபா குஞ்சம் கைது செய்யப்பட்டார். அவருக்குத் துணையாகச் சென்ற வழக்கறிஞர் ஆல்பன் தாப்போ காவல் நிலையத்தில் வைத்துக் கடுமையாகத் தாக்கப்பட்டார். 25,000 ரூபாயை கோபாவின் கையில் திணித்து வி.சி.ஏ.-வை விட்டு வெளியேற போலீசு மிரட்டியது. அம்மிரட்டலுக்கு அவர் பணிய மறுக்கவே, கடுமையாகத் தாக்கப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளார். முனிசிபல் தேர்தல்கள் என்ற காரணத்தைக் காட்டி, 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனை மீறினால் கைது செய்வோம் என போலீசு மிரட்டியது. வேறு வழியின்றி, ஹிமான்சு குமார் பாத யாத்திரையை ரத்து செய்தார்.

அதிகரிக்கும் நெருக்கடிகளையொட்டி, டிச. 26-ஆம் தேதி முதல் ஹிமான்சு குமார் உண்ணாவிரதம் இருக்கத் துவங்கினார். இதனிடையே, சாம்செட்டி எனும் கிராமத்தில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு புகார் அளித்த நான்கு பெண்களை, குற்றம் புரிந்த போலீசாரே கடத்திச் சென்று வெற்றுப் பத்திரத்தில் கையெழுத்து வாங்கினர். மேற்கொண்டு வாய் திறந்தால் உயிர் மிஞ்சாது என மிரட்டி ஊருக்கு அனுப்பி வைத்தனர். இதனைத் தொடர்ந்து, டிசம்பர் 29-ஆம் தேதியன்று தண்டேவாடாவுக்கு வந்த நந்தினி சுந்தர், உஜ்வல் குமார் ஆகிய அறிவுஜீவிகளைச் சுற்றி வளைத்து, 'பாதுகாப்பு' என்ற பெயரில் சல்வாஜுடும் ஆட்களை துப்பாக்கிகளோடு நிறுத்தி அரசு பீதியூட்டியது. இதன் விளைவாக, அவர்கள் பாதியிலேயே பயணத்தை ரத்து செய்து டெல்லிக்குத் திரும்பினர். அவர்களுக்கு மட்டுமின்றி, வெளி மாநிலங்களிலிருந்து வந்த பல்வேறு அரசியல் சக்திகள், பத்திரிக்கையாளர்களுக்கும் விடுதிகளில் அனுமதி மறுக்கப்பட்டது. டிசம்பர் 31-ஆம் தேதியன்று, ஹிமான்சு குமாரின் வீட்டு உரிமையாளர் தனக்கு நெருக்குதல்கள் தரப்படுவதால், வீட்டைக் காலி செய்யுமாறு உத்தரவிட்டார்.

இந்நிலையில், ஜனவரி 3-ஆம் தேதியன்று மருத்துவத்திற்காக டெல்லிக்கு பயணப்பட்ட சோதி சாம்போ, காங்கர் எனும் இடத்தில் போலீசால் கைது செய்யப்பட்டார். கூம்பட் படுகொலையின் ஒரே சாட்சியான சோதி சாம்போவை அவரது உறவினர்கள் தேடியதாலும், உச்சநீதி மன்றம் அவருக்கு பாதுகாப்பு, மருத்துவ சிகிச்சை வழங்க உத்தரவிட்டுள்ளதாலேயே தடுத்து நிறுத்தியதாக கதையளந்த போலீசு, சோதி சாம்போவை ஹிமான்சு குமார் கடத்தி வைத்திருந்தார் என வழக்கு சோடிக்க முயன்றது. சோதி சாம்போவைச் சந்திக்க முயன்ற பத்திரிக்கையாளர்கள் தடுக்கப்பட்டனர். அதனை எதிர்த்துப் போராடிய பத்திரிக்கையாளர்கள் மீது, உள்ளூர் பத்திரிக்கையாளர்களைத் தாக்கி, கேமராக்களை கொள்ளையடிக்க முயன்றதாக பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஜனவரி 6-ஆம் தேதியன்று, மக்கள் கருத்தறிதல் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வந்த சந்தீப் பாண்டே, மேதா பட்கர் முதலான பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மீது முட்டைகள், தக்காளிகளை வீசி சல்வாஜுடும் ஆதரவாளர்கள் ரகளையில் ஈடுபட்டனர். போலீசின் நெருக்குதல் காரணமாகவும், நிலவும் அசாதாரணமான சூழல் காரணமாகவும் அவர்கள் வந்த வழியே திரும்பிச் செல்ல நேர்ந்தது. மக்கள் கருத்தறிதல் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வந்த பழங்குடி மக்கள் கொத்துக்கொத்தாக கைது செய்யப்பட்டனர். இக் கட்டுரையை எழுதும் இந்த நொடி வரை, அவர்கள் எங்கு சிறை வைக்கப்பட்டிருக்கிறார்களென்பதே தெரியவில்லை. அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் விரல்கள் துண்டிக்கப்பட்ட இரண்டு வயது 'மாவோயிஸ்ட்' மாத்வி முகேசும் அடக்கம்.



**போலீசு எதிரிலேயே சல்வாஜுடும் குண்டர்கள், மேதாபட்கர் முதலானோர் மீது அழுகிய முட்டை – தக்காளிகளை வீசி ரகளை செய்து தாக்கினர்.**

இறுதியாக, வேறு வழியின்றி, ஜனவரி 7-ஆம் தேதி அதிகாலையில் ஹிமான்சு குமார் தலைமறைவானார். தற்பொழுது, தண்டேவாடாவை விட்டும் வெளியேறியுள்ளார். தற்பொழுது, இணையத்தில் வெளியிடப்பட்டுள்ள ஒளிப்படத்தில், ஹிமான்சு குமார் தனது நிலையை விளக்குகிறார். ''அரசு செய்ய வேண்டிய நலப்பணிகளை நாங்கள் செய்து கொண்டிருந்தோம். நாங்கள் என்ன தவறு செய்தோம்? மக்களின் துயரத்தை எடுத்துச் சொன்னோம். சாத்வீகமான முறையில் பாத யாத்திரை செல்ல முயன்றோம். ஒரு ஜனநாயக நாட்டில் நடப்பதற்கு கூட உரிமை இல்லையா? நான் தண்டேவாடாவில் செயல்படுவதை அரசு விரும்பவில்லை. என்னால் பலரும் தாக்குதலுக்குள்ளாவதிலிருந்து தடுக்கும் பொருட்டு, நான் வெளியேறி விட்டேன்'' என வருத்தத்தோடு கூறுகிறார். சட்டப்பூர்வமான வழியில் போராட முயலும் காந்தியச் சட்டகத்தின் குரல் வளையில் ஏறி மிதித்து, மீண்டும் ஒருமுறை தான் யார் எனப் புரிய வைத்திருக்கிறது, அரசு. நக்சல்பாரிகள் வன்முறையாளர்கள், வழி தவறிப் போனவர்கள், எந்தப் போராட்டத்தையும் சட்டத்திற்கு உட்பட்டு நடத்த வேண்டும் என உபதேசிக்கும் அகிம்சாமூர்த்திகள், ஹிமான்சு குமாரின் சத்திய சோதனையிலிருந்து என்ன பாடம் பெறுவது என விளக்க வேண்டும். இதனிடையே, சோதி சாம்போ யாருக்கும் தெரியாமல், டெல்லி அய்ம்ஸ் மருத்துவமனைக்கு போலீசால் கொண்டு வரப்பட்டார். அங்கேயும், யாரும் அவரை சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. மீண்டும் ஜனவரி 19-ஆம் தேதியன்று இரகசியமாக டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளார். தற்பொழுது அவர் எங்கு உள்ளார் என்பதை அரசு அறிவிக்க மறுக்கிறது. அய்ம்ஸ் மருத்துவமனைக்கு எதிரில், ஹிமான்சு குமாருக்கு ஆதரவான அறிவுஜீவிகளும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள். மெழுகுவர்த்திகளைக் கண்டு அரசு அஞ்சுவதில்லை. தேவைப்படுவது தீப்பந்தங்கள்தான்!

● வாணன்

# இது வளர்ச்சியல்ல; இதுதான் ஏகாதிபத்தியம்!

நக்சல் ஒழிப்பு நடவடிக்கை என்ற பெயரில் அரசு நடத்தி வரும் காட்டுவேட்டை (ஆபரேசன் கிரீன் ஹன்ட்) என்பது, மக்கள் மீது மறுகாலனியாக்கத்தைத் துப்பாக்கி முனையில் திணிக்கும் ஒரு பாசிச போர். இதனைப் பத்திரிகையாளர்கள் உள்ளிட்டுப் பலரும் அம்பலப்படுத்தி வருகின்றனர். ஜன-4, ''டைம்ஸ் ஆஃப் இந்தியா'' நாளேட்டில் வெளிவந்துள்ள, பி.யு.சி.எல் அமைப்பைச் சார்ந்தவரும் சட்டிஸ்கர் உயர்நீதி மன்ற வழக்குரைஞருமான சுதா பரத்வாஜின் நேர்காணல் இதனை நிரூபிக்கிறது. அதன் சாரம் வருமாறு:

● சிங்கராம் என்ற இடத்தில் போலி மோதலில் கொல்லப்பட்ட 19 பேர் நக்சலைட்டுகளல்ல, அப்பாவிப் பழங்குடி மக்கள் என்று சொன்ன குற்றத்துக்காக காங்கிரசு எம்.எல்.ஏ கவாசி லக்மாவின் போலீசு பாதுகாப்பை ரத்து செய்தார் மாவட்ட ஆட்சியர். காட்டுவேட்டையை அம்பலப்படுத்துபவர்கள் யாராக இருந்தாலும், அரசு அவர்களைச் சகித்துக் கொள்வதில்லை என்பதற்கு இது இன்னுமொரு உதாரணம்.

● சரணடைந்த நக்சலைட்டுகள் என்று 2007 முதல் சிறை வைக்கப்பட்டிருக்கும் 79 பேரில் பெரும்பான்மையினர் அப்பாவிப் பழங்குடிகளென்றும், சிலர் தன்னுடைய கட்சி உறுப்பினர்கள் என்றும் பாரதிய ஜனதாவின் எம்.எல்.ஏ பகிரங்கமாக அறிவித்த போதிலும், ஒருவர்கூட விடுவிக்கப்படவில்லை.



● காட்டுவேட்டை குறித்து போலீசு அறிக்கைகள் தவிர எதையும் பத்திரிகைகள் பிரசுரிக்கக் கூடாது என்றும், போலீசு அறிக்கைக்கு மாறாக எழுதினாலோ, மாவோயிஸ்டுகளின் அறிக்கைகளைப் பிரசுரித்தாலோ அரசைக் கவிழ்க்கும் சதிக் குற்றத்தின் கீழ் கைது செய்யப்படுவீர்கள் என்று கடந்த செப்டம்பர் மாதம் எல்லாப் பத்திரிகைகளுக்கும் போலீசு நோட்டீசே கொடுத்துவிட்டது. போலீசின் உத்தரவை மீறிய பத்திரிகையாளர்கள் சத்தீஸ்கர் சிறப்புப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த போலீசு ராஜ்ஜியத்தை எதிர்த்து 100-க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் ஜக்தல்புரில் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

● மொத்தத்தில், எந்த வகையில் அதிருப்தி வெளியிட்டாலும் அது கிரிமினல் குற்றம்; அரசுக்கு எதிராக யார் பேசினாலும், எழுதினாலும் அவர்கள் நக்சலைட் என்று முத்திரை குத்தப்படுகின்றனர். மனித உரிமைப் போராளி மருத்துவர் பினாயக் சென், 'சுதந்திர'ப் போராட்ட வீரர் ராம் குமார் அகர்வால், காந்தியவாதி ஹிமான்சு குமார், சுற்றுச்சூழலாளர் ஜெயந்த் போஹிதார் என இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. இதுதான் மெக்கார்தேயிசம்!

● பிலாய் உருக்காலை தொடங்கப்பட்டபோது கூட பழங்குடியினரின் நிலம் எடுக்கப்பட்டது. ஆனால் 96,000 பேருக்கு அரசுத்துறையில் நிரந்தர வேலை கிடைத்தது. இப்போது நிரந்தர வேலையும் கிடையாது, நிவாரணமும் கிடையாது, நிலத்தைக் கொடு என்று மக்களின் சொத்தையும், தேசத்தின் வளங்களையும் பன்னாட்டு நிறுவனங்களுக்குப் பிடுங்கிக் கொடுக்கிறது அரசு. சென்ற ஆண்டு இரும்புத் தாதுவின் விலை டன்னுக்கு 5,800 ரூபாய் என்று உயர்ந்தபோது, அரசுத்துறை எஃகு ஆலைகள் மூடிக்கிடந்தன. ஆனால், பைலதில்லா சுரங்கத்திலிருந்து உயர்தர இரும்புத்தாதுவை ஒரு டன் 400 ரூபாய்க்கு ஜப்பான் எடுத்துச் சென்று கொண்டிருந்தது. இவையெல்லாம் வளர்ச்சி என்பதும் முன்னேற்றம் என்பதும் பொய். இதுதான் ஏகாதிபத்தியம்!

● கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு நிலம் தரமறுத்து தீர்மானம் நிறைவேற்றும் கிராமசபை உறுப்பினர்கள் துப்பாக்கி முனையில் போலீசால் மிரட்டப்படுகிறார்கள். மக்கள் கருத்தறிதல் நிகழ்ச்சிகள் அனைத்தும் போலீசு முற்றுகையின் கீழ்தான் நடத்தப்படுகின்றன. இவற்றையெல்லாம் மீறி நமது வளங்களைக் காக்கப் போராடும் பழங்குடி மக்களுக்கு நாடே நன்றிக் கடன்பட்டிருக்கிறது.

●

# அவலத்தில் அரசு மருத்துவமனை
# போராட்டத்தில் பயிற்சி மருத்துவர்கள்

இலவசத் திட்டங்கள் மூலம் மக்களை ஏய்த்துவரும் தி.மு.க.அரசு, ''கலைஞர் காப்பீடு திட்ட''த்தின் மூலம் ஸ்டார் ஹெல்த் என்ற தனியார் ஏகபோக காப்பீடு நிறுவனத்தின் கொள்ளைக்கு பல கோடிகளை அள்ளிக் கொடுத்துவிட்டு, அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைத் திட்டமிட்டே புறக்கணித்து வருகிறது. இதன் காரணமாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் திருச்சி அரசு மருத்துவமனையில் மாண்டு போன பச்சிளம் குழந்தைகளின் எண்ணிக்கை மட்டும் 1325.

இறந்த குழந்தைகள் பெரும்பாலும் ஆக்சிஜன் சிலிண்டர் இல்லாததாலும், அப்படியே இருந்தாலும் செயற்கை சுவாசக் கருவிகள் (வென்டிலேட்டர்) இல்லாததாலும் மாண்டு போயுள்ளன என்ற உதிரத்தை உறைய வைக்கும் செய்தி கடந்த மாதத்தில் கசியத் தொடங்கியது. விபத்து அவசர சிகிச்சை, பாம்புக்கடி உள்ளிட்ட எல்லா விதமான உயிர் காக்கும் சிகிச்சைகள் தேவைப்படும் பிரிவுகளுக்கும் ஒரேயொரு வென்டிலேட்டர் மட்டுமே இம்மருத்துவமனையில் உள்ளது. திருச்சியில் அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்ட ஓட்டுக் கட்சி பிரமுகர்களின் தனியார் மருத்துவமனைகளின் கொள்ளைக்காகவே, அரசு மருத்துவமனை எவ்வித அடிப்படை வசதியுமின்றி புறக்கணிக்கப்படுகிறது. அரசின் முழுநேர ஊழியர்களான மருத்துவர்கள் மட்டுமின்றி, இம்மருத்துவமனையின் கல்வி நிலையத் தலைவர் (டீன்) பொறுப்பில் உள்ள மருத்துவர் பாலசுப்பிரமணியமும், தங்கம் மருத்துவமனை என்ற தனியார் மருத்துவமனையை நடத்துகிறார். இதனால் மருத்துவர்களே மருத்துவமனையில் இருப்பதில்லை.

காலை ஷிப்டில் செவிலியர்கள், பரிசோதனைக்கூட ஆய்வாளர்கள், பணியாளர்கள் என இம்மருத்துவமனையில் ஏறத்தாழ ஆயிரம் பேர் வேலை செய்தாலும், அடுத்த ஷிப்டுக்கு போதிய ஊழியர் நியமிக்கப்படாததால், பிற்பகலில் எந்தப் பிரிவும் இயங்குவதில்லை. பயிற்சி மருத்துவர்களைக் கட்டாயப் படுத்தி பிற்பகலில் இப்பணிகளைச் செய்ய வைக்கிறது, நிர்வாகம். போதிய அளவுக்கு மருத்துவர்கள்-ஊழியர்களை நியமிக்காமல் நிர்வாகம் ஏய்த்து வருவதோடு, 'அட்மிஷன் டே' என்ற முறைப்படி, ஓய்வின்றி தொடர்ச்சியாக 31 மணி நேரம் கட்டாய வேலையும் எடுபிடி வேலையும் வாங்குவதையும் கண்டு குமுறிய பயிற்சி மருத்துவர்கள், கடந்த ஜனவரி 1-ஆம் தேதி முதலாக, 8 மணி நேர ஓய்வை தாங்களே நடைமுறைப்படுத்தும் போராட்டத்தைத் தொடங்கினர்.




இப்போராட்டத்தை ஆதரித்த பு.மா.இ.மு; திருச்சி அரசு மருத்துவமனையின் அவலம், நிர்வாகத்தின் அலட்சியம், மனித உரிமைகளை மீறி பயிற்சி மருத்துவர்களைக் கொத்தடிமைகளாக நடத்தும் கொடுமை பற்றிய செய்திகள் நாளேடுகளில் வெளிவரும் வகையில் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றது. தொடர் போராட்டம் காரணமாக விசாரணை செய்ய மருத்துவக் கல்வி இயக்குனர் வந்த போது, பு.மா.இ.மு. தலைமையில் பயிற்சி மருத்துவர்கள் முற்றுகையிட்டு கோரிக்கை மனு கொடுத்தனர். நேர்மையான விசாரணை நடத்தக் கோரி மருத்துவமனையெங்கும் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை போலீசை ஏவி நிர்வாகம் கிழிக்க முற்பட்ட போது, பயிற்சி மருத்துவர்களும் சிகிச்சை பெற வந்த பொதுமக்களும் போராடித் தடுத்தனர்.

பொதுமக்கள் ஆதரவுடன் போராட்டம் முன்னேறுவதைக் கண்டு அஞ்சிய நிர்வாகம், பரிசோதனைக் கூடங்கள் முறையாக இயங்கும் வகையில் ஷிப்டு முறையில் போதிய அளவுக்கு ஊழியர்களை நியமிக்கவும், தொடர்ச்சியாக 31 மணி நேரம் வேலை செய்யும் பயிற்சி மருத்துவர்களுக்கு 6 மணி நேர ஓய்வு அளிக்கவும் ஜனவரி 4-ஆம்தேதியன்று உறுதியளித்துள்ளது. உறுதியான போராட்டத்தால் கிடைத்த இம்முதற்கட்ட வெற்றியோடு முடங்கிவிடாமல், வென்டிலேட்டர் முதலான அவசியமான சாதனங்களைப் பொருத்தாமல் இன்று வரை நிர்வாகம் இழுத்தடிப்பதை அம்பலப்படுத்தி, பு.மா.இ.மு. தலைமையில் திருச்சியைச் சுற்றியுள்ள கிராமங்களில் பயிற்சி மருத்துவர்கள் பிரச்சாரம் செய்து வருவதோடு, மக்களைத் திரட்டி அடுத்தக் கட்டப் போராட்டத்தைத் தொடர ஆயத்தமாகி வருகிறார்கள்.

— பு.ஜ.செய்தியாளர்

## கம்யூனிசத் துரோகி ஜோதிபாசு:

# டாட்டா–பிர்லாவின் கூட்டாளி! பாட்டாளிக்குப் பகையாளி!

**சி.பி.எம். கட்சியை, ஆளும் வர்க்க விசுவாச ஓட்டுப் பொறுக்கிக் கட்சியாக மாற்றியமைத்ததுதான் ஜோதிபாசுவின் சாதனை.**

இந்தியப் போலி கம்யூனிச இயக்கம் இன்னுமொரு தலைமைப் பூசாரியை இழந்துவிட்டது. 'வங்கத்து சிங்கம்' என்று சி.பி.எம். கட்சியினரால் சித்தரிக்கப் பட்ட அக்கட்சியின் மூத்த தலைவரான திருவாளர் ஜோதிபாசு, கடந்த ஜனவரி 17-ஆம் நாளன்று தனது 95-வது வயதில் மறைந்து விட்டார்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்)யின் நிறுவனர்களில் ஒருவரான ஜோதிபாசுவுக்கு, 1977 முதல் 2000-வது ஆண்டுவரை, மே.வங்கத்தில் தொடர்ந்து 23 ஆண்டுகளாக ஆட்சி செய்து சாதனை படைத்த முதல்வர் என்ற பெருமையும் உண்டு. போலி கம்யூனிஸ்டுகள் மட்டுமின்றி, கட்சி வேறுபாடின்றி அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவர் என்று எல்லா ஓட்டுக் கட்சியினரும் அவரைப் பாராட்டுகின்றனர். முதலாளித்துவ அரசியல்வாதிகள் மட்டுமின்றி, முதலாளித்துவ ஊடகங்களும் அவரை மாபெரும் தலைவர் என்றும், பொதுவுடமை இயக்கத்துக்கு மட்டுமின்றி நாட்டுக்கே பேரிழப்பு என்றும் ஒப்பாரி வைக்கின்றன.

இதர மாநிலங்களை ஒப்பிடும்போது, நிலச் சீர்திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரே மாநிலம்தான் மே.வங்கம் என்று ஜோதிபாசுவின் ஆட்சியைப் போலி கம்யூனிஸ்டுகள் பெருமையாகக் குறிப்பிடுகின்றனர். இந்நிலச் சீர்திருத்தால் சி.பி.எம். கட்சி ஊழியர்களே ஆதாயமடைந்தனர். குத்தகை விவசாயிகளுக்கு நிலப்பட்டா கிடைத்ததைத் தவிர, வேறொன்றையும் இது சாதிக்கவில்லை. குத்தகை விவசாயிகள் விவசாயம் செய்வதற்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றாமல், போலி கம்யூனிஸ்டுகள் கொண்டுவந்த இந்தப் பெயரளவிலான சீர்திருத்தம், கடைசியில் விவசாயிகளுக்கு ஒரு மண்ணும் செய்யாமல் தோல்வியில் முடிந்தது. வறுமையிலும் பட்டினியிலும் நிற்கும் மாநிலங்களில் முன்னணியில் நிற்கும் மாநிலமாக மே.வங்கம் புதிய சாதனை படைத்தது. இதன் தொடர்ச்சியாகவே 2004-ஆம் ஆண்டில் ஜங்கல்மகால் மாவட்டம், பன்ஷ்பகாரி பஞ்சாயத்தைச் சேர்ந்த அம்லாஷோல் எனும் கிராமத்தில் பழங்குடியினரான 5 பேர் பட்டினியால் மாண்டு போயினர்.

காங்கிரசின் பாசிச கிரிமினல் அரசியலுக்கு எதிராக, அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டப் போவதாக வாக்குறுதி அளித்து 1977-இல் ஆட்சிக்கு வந்த சி.பி.எம். கட்சியும் பாசுவின் ஆட்சியும், அடுத்த சில ஆண்டுகளிலேயே கிரிமினல்மயமாகிப் போனது. மே.வங்கத்தின் நாதியா மாவட்டத்தில் மட்டும் 1977-லிருந்து 1991-வரை 200-க்கும் மேற்பட்ட நக்சல்பாரி புரட்சியாளர்களும் காங்கிரசு கட்சியினரும் சி.பி.எம். குண்டர்களால் கொல்லப்பட்டுள்ளனர். இன்றைய மத்திய அமைச்சரான மம்தா பானர்ஜி 1991-இல் கொல்கத்தா நகரில் பட்டப்பகலில் சி.பி.எம். குண்டர்களால் கொடூரமாகத் தாக்கப்பட்டார். போலி கம்யூனிஸ்டுகளின் ஊழல் கொள்ளைகளை அம்பலப்படுத்திய குற்றத்திற்காக 1988-இல் ''உத்தர் பங்க சம்பத்'' என்ற நாளேட்டின் அச்சகத்தைச் சூறையாடி நாசப்படுத்திய சி.பி.எம். குண்டர்கள், திபகார் மண்டல் என்ற ஊழியரைக் கொன்றொழித்தனர்.



அரசியல் செல்வாக்கையும் மக்களின் ஆதரவையும் இழக்கத் தொடங்கிவிட்ட பிறகு, சி.பி.எம். கட்சி தனது குண்டர் பலத்தில்தான் தேர்தல் வெற்றியைச் சாதித்து வருகிறது. பாசுவின் ஆட்சியில் 1990-இல் நடந்த கொல்கத்தா நகராட்சித் தேர்தல்களின் போது குண்டுவீச்சு, கைத்துப்பாக்கி ஏந்தி மிரட்டல் என சி.பி.எம். குண்டர்கள் வன்முறை வெறியாட்டங்களில் இறங்கி தேர்தல் வெற்றியைச் சாதித்ததைக் கண்டு நாடே கைகொட்டிச் சிரித்தது. அதன் பிறகு நடந்த எல்லாத் தேர்தல்களிலும் இந்த வழியில்தான் வெற்றிகள் சாதிக்கப்பட்டன. தேர்தல் மட்டுமல்ல,

எந்தவொரு மக்கள் போராட்டமானாலும் இக் குண்டர் படை தாக்குதலை ஏவியது. எதிர்க்கட்சிகளின் பல போராட்டங்கள் மிருகத்தனமாக போலீசாலும் சி.பி.எம். குண்டர்களாலும் கொடூரமாக நசுக்கப்பட்டன. இதன் பரிணாம வளர்ச்சி தான், சிங்கூரிலும் நந்திகிராமத்திலும் நடந்த வெறியாட்டங்கள்.

''டாட்டா-பிர்லா கூட்டாளி, பாட்டாளிக்குப் பகையாளி!'' என்று காங்கிரசை எதிர்த்து முழக்கமிட்டு வந்த சி.பி.எம். கட்சி, ஆட்சிக்கு வந்த பின்னர் டாடா, பிர்லா முதலான பெருமுதலாளிகள் மட்டுமின்றி, அந்நிய ஏகாதிபத்திய முதலாளிகளின் நம்பகமான கூட்டாளியாக மாறிப் போனது. இந்தத் திருப்பணியைத் தொடங்கி வைத்து புதிய சாதனை படைத்தவர்தான் திருவாளர் ஜோதிபாசு. 1991-இல் தனியார்மய-தாராளமயக் கொள்கைகள் புகுத்தப்பட்ட பிறகு, மாநிலத்தைத் தொழில்மயமாக்குவது என்ற பெயரில் திருவாளர் பாசு மேலை நாடுகளுக்குப் பறந்து, அங்கு வாழும் இந்திய மேட்டுக்குடியினரையும் ஏகாதிபத்திய முதலாளிகளையும் மே.வங்கத்தில் முதலீடு செய்ய அழைத்தார். ஆனால் போலி கம்யூனிஸ்டுகளின் ஆட்சியில் முதலீடு செய்ய ஏகாதிபத்தியவாதிகள் தயக்கம் காட்டினர். அந்தத் தயக்கத்தைப் போக்கும் வகையில், மே.வங்கத்தில் தொழிலாளர் பிரச்சினை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள உறுதியளித்தார் பாசு. வேலைநிறுத்தங்களும் முற்றுகைப் போராட்டங்களும் அடுத்தடுத்து நடந்து வந்த மே.வங்கத்தில், தொழிலாளர் போராட்டங்களை ஒடுக்கியும் மிரட்டியும் மாநிலத்தை 'அமைதிப் பூங்கா'வாக அவர் மாற்றினார். உழைக்கும் மக்களின் நலன் காக்கும் புரட்சிகர ஆட்சியை நிறுவியுள்ளதாகப் பீற்றிக் கொள்ளப்படும் பாசுவின் ஆட்சியில், தொடர்ச்சியாக ஆலைமூடலும் ஆட்குறைப்பும் நடந்து பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வீதியில் வீசியெறியப்பட்டனர். போலி கம்யூனிஸ்டு முதல்வராக பாசு ஆட்சிக்கு வந்த பிறகு, 163 பெரிய ஆலைகளும் 22,733 சிறு தொழில் நிறுவனங்களும் மூடப்பட்டன. 1983-லிருந்து 1992 வரை ஆலை மூடல் காரணமாக பிழைக்க வழியின்றி 903 தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.


ஜோதிபாசுவின் 'புரட்சி' ஆட்சியின் மகிமை: போராடும் உழைக்கும் மக்களைத் தாக்கும் மே.வங்க போலி கம்யூனிச அரசின் போலீசு.

அந்நிய ஏகாதிபத்திய மூலதனத்துக்கு அனுசரணையாக நடந்து கொள்வதைப் பற்றி 1984-இல் கட்சித் தலைமை அவரிடம் விளக்கம் கேட்டது. அதற்கு பாசு, ''நாம் ஒரு முதலாளித்துவ கட்டமைவில் இயங்குகிறோம். எனவே நாம் அதற்கு எதிராகச் செல்ல முடியாது. சோசலிசம் இப்போதைக்கு சாத்தியமில்லை'' என்று அந்நிய முதலீடுகளை சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்று ஆதரித்தார். பாட்டாளிகளின் தோழனாகச் சித்தரிக்கப்படும் ஜோதிபாசு, முதலாளிகளின் தோழனாகத்தான் இருந்தார். தனது பிறந்தநாளை ஐந்து நட்சத்திர ஓட்டலில் கொண்டாடி முதலாளிகளுடன் சேர்ந்து விருந்துண்டு களிப்பது அவரது வாடிக்கை.

பாசுவின் 'பொற்கால ஆட்சி'யில், சமையல் எண்ணெய் கலப்பட ஊழலால் பெகலாவில் நூற்றுக்கணக்கானோர் கை-கால்கள் முடமாகி, இந்த விவகாரம் பாசு ஆட்சியின் மகிமையை நாடெங்கும் நாறடித்தது. இது தவிர, வங்காள விளக்கு ஊழல், சால்ட் லேக் நில ஊழல், எஸ்.யு.வி. கார் ஊழல் முதலானவை வெளிச்சத்துக்கு வந்து சந்தி சிரித்தது. ஜோதிபாசுவின் முதலாளித்துவ மகன் சந்தன் பாசுவே வங்காள விளக்கு ஊழலில் சிக்கியிருந்தார்.

கொல்கத்தா அருகிலுள்ள சால்ட் லேக் பகுதியிலுள்ள சேரிவாழ் மக்களை வலுக்கட்டாயமாக அடித்து விரட்டிவிட்டு, அப்புறம் போக்கு நிலத்தை பாசுவின் அரசு கையகப்படுத்தி மேட்டுக்குடி அடுக்குமாடி குடியிருப்புப் பகுதியாக மாற்றியது. மேட்டுக்குடியினரும் அதிகாரிகளும் சி.பி.எம். அமைச்சர்களும் விதிமுறைகளை மீறி தமது பினாமிகள் பெயரில் அற்ப விலைக்கு நிலங்களை வாங்கிக் குவித்தனர். எதிர்க்கட்சிகள் இந்த ஊழலை அம்பலப்படுத்தி போராட்டங்களை நடத்தத் தொடங்கியதும், ''இது என்ன பெரிய ஊழலா?'' என்று நியாயவாதம் பேசினார் பாசு.

அந்நிய முதலீடுகளை ஈர்க்க வெளிநாடுகளுக்கு பாசு பறந்த போது, அவருடன் அவரது முதலாளித்துவ மகன் சந்தன் பாசுவும் சென்றார். சந்தன் பாசுவின் நட்சத்திர ஓட்டல் மற்றும் கூட்டுத் தொழில் நிறுவனத்துக்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்துடன்தான் இந்தப் பயணங்கள் அமைந்தன. இந்த விவகாரம் அம்பலமாகி, கொல்

கத்தா குடிமக்கள் கழகம் எனும் அமைப்பு, அரசு நிதியைக் கேடாகப் பயன்படுத்திய குற்றத்திற்காக பாசு பதவி விலக வேண்டும் என்றும், பயணச் செலவுத் தொகையை அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் வழக்கு தொடுக்குமளவுக்கு, இந்த மோசடி விவகாரம் சந்தி சிரித்தது.




''மம்தாவே வெளியேறு! டாடாவே வருக!''
- ஜோதிபாசு கட்டி வளர்த்த டாடாயிஸ்ட் கட்சியினர் சிங்கூரில் நடத்தும் ஊர்வலம்.

ஜோதிபாசுவின் ஆட்சியில் தலைவிரித்தாடிய மனித உரிமை மீறல், போலீசு கொடூரங்களை எதிர்த்து பலமுறை மக்கள் போராடிய பின்னர், 20-க்கும் மேற்பட்ட விசாரணைக் கமிஷன்கள் அமைக்கப்பட்டன. இருப்பினும் இன்றுவரை 4,5 விவகாரங்களில் மட்டுமே விசாரணை முடிந்துள்ளது. இவற்றில் லால்பஜார் போலீசு நிலையத்தில் இத்ரீஸ் மியான் என்ற விசாரணைக் கைதியின் கொட்டடிக் கொலை பற்றிய விசாரணை முடிவுக்குப் பின்னர், 7 போலீசார் மீது மட்டும் தற்காலிக வேலை நீக்கம் என்ற 'புரட்சிகர நடவடிக்கை' எடுக்கப்பட்டது. அடுத்த வாரமே அந்த 7 போலீசாரும் வேலையில் அமர்த்தப்பட்டனர். இது தான் போலி கம்யூனிஸ்டுகளின் தூய்மையான நிர்வாகத்தின் சாதனை!

சி.பி.எம். கட்சியில் இருந்தாலும், அவர் எப்போதுமே நேரு-இந்திரா-ராஜீவ் கும்பலின் பரம்பரை விசுவாசி. பாசிச 'அன்னை' இந்திரா கொல்லப்பட்டபோதும், பாசிச ராஜீவ் கொல்லப்பட்டபோதும் அவர் துடிதுடித்துப் போனார். பாசிச 'அன்னை' இந்திராவின் தேசிய ஒருமைப்பாடு, பிரிவினைவாத எதிர்ப்புக் கொள்கைகளைப் போற்றி ஆதரித்ததோடு,

## செத்துப் போன குரங்குக்கு சிவப்புத் துணி மரியாதை! கேரள போலி கம்யூனிஸ்டுகளின் இந்துத்துவ பக்தி!

கேரளாவின் கொல்லம் மாவட்டம் சாஸ்தம்கோட்டா எனுமிடத்தில் உள்ள தர்மசாஸ்தா கோயிலில் ஏராளமான குரங்குகள் கூட்டமாக வசித்து வருகின்றன. கோயிலுக்கு வரும் பக்தர்களையும் அருகிலுள்ள குடியிருப்புகளிலும் இக்குரங்குகள் தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்தன. இதில் ஒரு மூத்த குரங்கு மட்டும் மற்ற குரங்குகளுடன் சண்டை போட்டு, பக்தர்களைத் தொல்லையிலிருந்து காத்து வந்தது. இதனால் பக்தர்கள் அந்தக் குரங்குக்கு ''சாயிப்பு'' என்று அன்பாகப் பெயரிட்டு அழைத்து, இந்துக் கடவுளான அனுமாரின் அவதாரமாகக் கருதி உணவுப் பொருட்களை அளித்து வந்தார்கள். அக்கோயிலிலுள்ள குரங்குக் கூட்டத்துக்கு சாயிப்புதான் தலைவரைப் போலச் செயல்பட்டு வந்ததாம். அந்தக் குரங்கை மற்றக் குரங்குகள் சண்டையிட்டுக் கடித்துக் குதறியதால், படுகாயமடைந்த சாயிப்பு, கடந்த டிசம்பர் 28-ஆம் தேதியன்று இறந்து விட்டது.



சாயிப்புவின் சாவுச் செய்தியைக் கேட்டதும், அப்பகுதியிலுள்ள பக்தர்கள் கோயிலில் கூடி கண்ணீல்மல்க சாயிப்பு குரங்கை வணங்கினார்களாம். பலர் மலர் மாலைகளை வைத்து அஞ்சலி செலுத்தினார்களாம். இந்து பக்தர்கள் வேதனைப்படும்போது அத்துயரத்தில் பங்கேற்பதுதானே இந்துத்துவத்துவத்துக்கு செய்யும் உண்மையான சேவையாக இருக்க முடியும்? உடனடியாக வலது கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த கேரள நீர்ப்பாசனத்துறை அமைச்சர் பிரேமச்சந்திரன், கொல்லம் மாவட்டம் குன்னத்தூர் தொகுதியின் வலது கம்யூனிஸ்டு எம்.எல்.ஏ.வான குஞ்சுமோன், மற்றும் அக்கட்சியின் உள்ளூர் பிரமுகர்கள் திரண்டுவந்து இந்து பக்தர்களுக்கு ஆறுதல் கூறி, செத்துப்போன குரங்குக்கு சிவப்புத் துணி போர்த்தி இறுதி மரியாதை செலுத்தியுள்ளனர். ''சாயிப்பின் மறைவு எனக்கு மிகுந்த வேதனை அளிக்கிறது'' என்று உருகினார், எம்.எல்.ஏ. ''சாயிப்பைப் பொறுத்தவரை அவர் ஒரு தலைவர். அவருக்கு மரியாதை செலுத்துவது எனது கடமை'' என்று செத்த குரங்கை உயர்திணையாக்கி அரற்றினார், அமைச்சர்.

இந்துவெறியர்களே விஞ்சும் அளவுக்கு, இந்துக்களால் அனுமாரின் அவதாரமாகச் சித்தரிக்கப்படும் குரங்குக்கு இறுதி மரியாதை செய்து போலி கம்யூனிஸ்டுகள் செய்த புரட்சியைப் பார்த்து பக்தர்கள் மெய்சிலிர்த்துப் போனார்களாம்! இந்துக்களின் நம்பகமான காவலானாகக் காட்டிக் கொண்டு, மூடநம்பிக்கையை ஆதரித்து இப்படிக் கீழ்த்தரமாகச் சென்று சீரழிந்து நிற்கும் போலி கம்யூனிஸ்டுகள், அடுத்துவரும் தேர்தல்களில் ''இந்துக்களின் ஆசியும் ஆதரவும் பெற்ற சின்னம் - கதிர் அரிவாள்'' என்று பா.ஜ.க.வுக்குப் போட்டியாக ஓட்டுப் பொறுக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. •

இந்திய அரசின் பிராந்திய மேலாதிக்கத்தையும் விசுவாசமாக ஆதரித்து நின்றார். மைய அரசிடம், தனது மாநிலத்துக்கு கூடுதல் ஒதுக்கீடுகள் கோரி அரசின் சார்பில் திருவாளர் பாசு கடையடைப்புப் போராட்டம் நடத்தினாரே தவிர, பிராந்திய நலன், சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பரவல் முதலானவற்றுக்காக அவர் போராடவில்லை. தேசிய இனங்களின் உரிமைக்கு அவர் குரல் கொடுத்ததுமில்லை. காஷ்மீர் மற்றும் வட கிழக்கிந்திய மாநில மக்களின் தேசிய இன உரிமைப் போராட்டங்கள் மீது ஆளும் வர்க்கங்கள் ஏவிய அரசு பயங்கரவாத அடக்குமுறைத் தீர்வையே அவர் ஆதரித்து நின்றார். மே.வங்கத்தின் கோர்க்காலாந்து போராட்டத்தை காங்கிரசு வழியில் மிருகத்தனமாக ஒடுக்கினார்.




1967-இல் அஜாய் முகர்ஜி தலைமையிலான கூட்டணி ஆட்சியில், ஜோதிபாசு உள்துறை அமைச்சராகவும் துணை முதல்வராகவும் இருந்த போது, நக்சல்பாரி பேரெழுச்சியை மிருகத்தனமாக ஒடுக்கினார். பாசுவின் போலீசு கட்டவிழ்த்துவிட்ட கொலைவெறியாட்டத்தில் 9 பேர் கொல்லப்பட்டு, பலர் படுகாயமடைந்தனர். விவசாயிகள் சங்க முன்னோடிகள் கைது செய்யப்பட்டு, அந்த வட்டாரமெங்கும் போலீசு பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டது. கம்யூனிசத் துரோகி ஜோதிபாசுவின் கோரமுகம் 43 ஆண்டுகளுக்கு முன்னரே அம்பலமானது.

காங்கிரசு எதிர்ப்பு நாடகமாடி வந்த போலி கம்யூனிஸ்டுகள், இப்போது பா.ஜ.க.வின் வகுப்புவாத எதிர்ப்பு நாடகமாடிக் கொண்டு காங்கிரசுக்கு முட்டுக் கொடுத்து ஆதரிக்கும் நிலைக்குச் சென்று விட்டனர். தரகுப் பெருமுதலாளிகள் மட்டுமின்றி, அந்நிய ஏகாதிபத்திய முதலாளிகளின் நம்பகமான கூட்டாளிகளாகவும் மாறிவிட்டனர். ஆளும் வர்க்கப் பாசிச கட்சிகளுடன் சந்தர்ப்பவாதக் கூட்டுச் சேர்வதன் மூலம் தம்மை தக்க வைத்துக் கொள்ளத் துடிக்கின்றனர். மக்கள் ஜனநாயகப் புரட்சியைச் சாதிக்கப் போவதாகச் சவடால் அடித்து வந்த அக்கட்சி, இன்று கடைந்தெடுத்த முதலாளித்துவ ஓட்டுப் பொறுக்கி கட்சியாக மாறிவிட்டது. தொழிலாளி-விவசாயி வர்க்க அடித்தளத்தை ஏற்கெனவே இழந்துவிட்ட அக்கட்சி, இன்று நடுத்தர-மேட்டுக்குடி வர்க்கத்தை மட்டுமே சமூக அடித்தளமாகக் கொண்டுள்ளது. இப்படி கட்சியையும் ஆட்சியையும் சீரழித்து, முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கும் ஆளும் வர்க்கங்களுக்கும் விசுவாச சேவை செய்யும் இன்னுமொரு ஓட்டுப் பொறுக்கி கட்சியாக - அபாயமற்ற எதிர்க்கட்சியாக சி.பி.எம். கட்சியை மாற்றியமைத்ததில் முக்கிய பங்கு வகித்தவர்தான் திருவாளர் ஜோதிபாசு.

நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தை அம்பலப்படுத்தி, இன்றைய அரசியலமைப்பு முறையை வீழ்த்தி, மக்கள் ஜனநாயகத்தை நிலைநாட்டும் புரட்சிக்கான எந்த போராட்டத்தையும் நடத்தாமல், கேடுகெட்ட நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தைக் கட்டிக் காக்கும் ஆளும் வர்க்க சேவையை அவர் விசுவாசமாகச் செய்தார். ஆளும் வர்க்க நலன் பேணும் அரசு எந்திரத்துக்கு இசைவாக ‘இடதுசாரி கூட்டணி’ அரசாங்கத்தை நிறுவி, இதுவே ‘புரட்சிக்கான இடைக்கால அரசு’ என்று கட்சி அணிகளையும் மக்களையும் ஏய்த்து, அவர்களைப் புரட்சிக்கு அணிதிரள விடாமல் தடுத்து திசைதிருப்பினார். மே.வங்கத்தைப் போல இதர மாநிலங்களிலும் ‘இடதுசாரிகள்’ ஆட்சிக்கு வந்து, அதன் பிறகு டெல்லியிலும் நாற்காலியில் அமர்ந்துவிட்டால், புரட்சி நிறைவேறிவிடும் என்று பிரமையூட்டுவதற்கும், புரட்சியை பூசையறையில் வைப்பதற்கும்தான் அவரது ‘இடதுசாரி’ ஆட்சி பயன்பட்டது. புரட்சிப் போராட்டப் பாதையிலிருந்து கட்சி அணிகளை நாடாளுமன்ற போலி ஜனநாயகப் பாதைக்கு இழுத்து வந்து, சி.பி.எம். கட்சியை மைய அரசியல் நீரோட்டத்தைச் சேர்ந்த ஓட்டுப் பொறுக்கிக் கட்சியாக மாற்றியதுதான் அவர் ஆளும் வர்க்கங்களுக்கு ஆற்றிய மகத்தான சேவை. சி.பி.எம். கட்சியை, ஐரோப்பிய சமூக ஜனநாயகக் கட்சிகளைப் போல மாற்றுவதில் அவர் வெற்றி பெற்றார். இதனால்தான் ‘‘அவர் தாராளவாத மார்க்சியவாதி, ஸ்டாலினிய கடுங்கோட்பாட்டு போக்கை நிராகரித்தவர்’’ என்றெல்லாம் அவரை முதலாளித்துவ எழுத்தாளர்களே துதிபாடுகின்றனர். இதனால்தான்தான் ஆளும் வர்க்கங்களால் ‘‘கம்யூனிச காந்தி’’யாக அவர் போற்றப்படுகிறார்.

கம்யூனிசத்தின் பெயரால் இத்தகைய அயோக்கியத்தனங்களை அப்பட்டமாக ரஷ்யாவில் செய்து, முதலாளித்துவத்தை நிலைநாட்டிய சேவைக்காக அன்றைய ரஷ்ய போலி கம்யூனிஸ்டு தலைவர் கோர்பச்சேவுக்கு ஏகாதிபத்திய உலகம் நோபல் பரிசு அளித்து கௌரவித்தது. மறைந்த போலி கம்யூனிசத் துரோகியும், ஆளும் வர்க்கச் சேவகனுமாகிய ஜோதிபாசுவுக்கு இந்திய ஆளும் வர்க்கங்கள் பாரத ரத்னா விருது வழங்க வேண்டியதுதான் இனி பாக்கியிருக்கிறது.

● பாலன்

# பி.டி. கத்தரிக்காய்:

# மறுகாலனியாக்கத்தின் அடுத்த குண்டு!


**பருத்தியை ஆக்கிரமித்த அமெரிக்க மான்சாண்டோ நிறுவனம், ஏழைகளின் காயான கத்தரிக்காயையும் கைப்பற்றத் துடிக்கிறது.**

சென்ற வருடம் அக்டோபர் மாதம் மத்திய அரசின் மரபணு பொறியியல் ஒப்புதல் குழு, பி.டி. கத்தரிக் காயை வணிக ரீதியில் விளைவிக்கலாம் என ஒப்புதல் கொடுத்துள்ளது. இதற்கு நாடெங்கிலும் அறிவுத்துறை யினர், சூழலியவாதிகள், தன்னார்வக் குழுக்கள் முதலா னோரிடத்திலிருந்து எதிர்ப்பு கிளம்பியது. இதையடுத்து மைய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச் சர் ஜெய்ராம் ரமேஷ் மக்களிடையே கருத்துக்களைக் கேட்டு, வரும் பிப்ரவரி மாதம் இருபதாம் தேதி முடி வெடுக்கப்படும் என்றார்.

கொல்கத்தா, புவனேசுவர், அகமதாபாத், ஹைதரா பாத், பெங்களூரு, நாக்பூர், சண்டிகர் என ஏழு நகரங் களில் இந்த கருத்து கேட்கும் வைபவம் நடந்து வரு கிறது. எல்லா இடங்களிலும் தன்னார்வக் குழுக்களால் அணிதிரட்டப்பட்ட தொண்டர்களும், விவசாயிகளும் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

பி.டி கத்தரிக்காய் என்றால் என்ன? பேசில்லஸ் எனப்படும் ஒருவகை பாக்டீரியாவின் மரபணுவை எடுத்து கத்தரிக்காயின் மரபணுவுடன் இணைத்து ஆய்வுக் கூடத்தில் உருவாக்கப்படும் புதிய வகை உயிரிதான் பி.டி. கத்தரி. இதனால் கத்தரியை தாக்கும் பூச்சிகள் பி.டி கத்தரியைத் தாக்காது, விளைச்சல் அமோகமாக இருக்கும் என்றெல்லாம் இதன் ஆதரவு அறிவியலாளர்களும், நிறுவனங்களும் வாதிடுகின்றனர். சூழலிய வாதிகளோ இதனால் ஏற்படும் தீங்குகள், நோய்கள், அதிகம் தண்ணீர் உறிஞ்சுவது, காட்டமான பூச்சி கொல்லிகள் தேவைப்படுவது, புதிய வகை பூச்சிகள் உருவாவது, உயிரியல் சூழல் பாதிக்கப்படுவது முதலானவற்றை முன்வைக்கின்றனர். இது குறித்து பலரும் எழுதியிருப்பதை வாசகர்கள் அறிந்திருக்கலாம்.

அவை உண்மைதான் என்பதை 2002-இல் அறிமுகம் செய்யப்பட்ட பி.டி.பருத்தி விதைகளே நிரூபித்திருக் கின்றன. முக்கியமாக ஆந்திரா, விதர்பாவில் பல நூறு விவசாயிகள் விளைச்சல் இல்லாததனாலும், அதற்குக் கடன் வாங்கி திருப்ப முடியவில்லை என்பதற்காகவும் தற்கொலை செய்திருக்கின்றனர். சில இடங்களில் இந்தப் பருத்தி நன்றாக விளைந்ததாக நிறுவனங்களும், அரசுத் தரப்பும் கூறுகின்றன.




காலம் தோறும் அறிவியல் கண்டுபிடிப்புகளால் நவீனமயமாகி வரும் வாழ்க்கையில் பி.டி விதைகளும் ஓர் அங்கம் என்று வாதிடும் தூய அறிவியல்வாதிகளின் வாதத்தை, ஒரு வாதத்திற்காக ஏற்றுக் கொள்வோம். சரி, இந்த நவீன பி.டி. விதைகளின் சமூக, பொருளாதார, அரசியல் நோக்கமென்ன? இவ்விதைகள் ஏற்கனவே பஞ்சைப் பராரியாக வாழும் விவசாயிகளின் இன்னலைத் தீர்க்க வந்ததா, இல்லை அவர்களிடம் மிச்சமிருக் கும் பொருளாதாரத்தைப் பறிக்க வந்ததா?

அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்டிருக்கும் மான் சாண்டோ நிறுவனம்தான் இந்த பி.டி. விதைகளை ஆய்வின் மூலம் கண்டுபிடித்து சந்தைப்படுத்துகிறது. இரண்டாம் உலகப் போருக்கு பின் ஏகாதிபத்தியங்களும் அவற்றின் அரசியல் ஆசியுடன் பன்னாட்டு நிறுவனங்களும் உலகை எல்லா வழிகளிலும் மேலாதிக்கம் செய்ய முயன்றன. தண்ணீர், விவசாயம் போன்ற இயற்கை சார்ந்த வாழ்க்கையைக் கூட கட்டுப்படுத்தி, அதிக இலாபம் பெறலாம் என பல இரசாயன நிறுவனங்கள் தங்களது இலக்கை மாற்றின. அப்படி மாற்றிக் கொண்ட மான்சாண்டோ நிறுவனம் முழு உலகின் விவசாயத்தையும் தனது பிடிக்குள் கொண்டு வர தீவிரமாக முயல்கிறது. அதற்காகவே மூலதனமிட்டு பிரம்மாண்டமான ஆய்வுகளை இந்நிறுவனம் நடத்துகின்றது.

இங்கே நாம் வலியுறுத்த விரும்புவது, விவசாயத்தின் உற்பத்தியை நவீனப்படுத்தி மேம்படுத்துவது இவர்களின் நோக்கமல்ல. ஆனால், அப்படி ஒரு நோக்கை பிரச்சாரம் செய்து கொண்டு முழு விவசாயத்தையும் தனக்கு அடிமைப்படுத்துவதே இவர்களின் நீண்ட கால இலக்கு. எடுத்துக் காட்டாக, பி.டி. விதைகள் அறிமுகம் செய்யப்பட்ட இந்த ஏழு ஆண்டுகளில் நாட்டுப்புற பருத்தி விதைகள் ஏறத்தாழ இல்லையென்ற சூழ்நிலை உருவாகிவிட்டது. இந்த விதைகளை விட மான்சாண்டோவின் பி.டி. விதைகள் பல மடங்கு விலை அதிகம். இன்றும் கூட இதன் விலை ஒரு கிலோவுக்கு ஆயிரம் ரூபாயைத் தாண்டுகிறது.



மான்சாண்டோவின் தரகன்: மைய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் கொல்கத்தாவில் விவசாயிகளிடம் நடத்தும் பி.டி. கத்தரி கருத்தறியும் நாடகம்.

1947-க்குப் பின் ஓரவளவு சுயேச்சையாக இருந்த விவசாயம் அரசு ஆதரவுடன் இயங்கத் துவங்கியது. பணக்கார விவசாயிகளுக்காகக் கொண்டு வரப்பட்ட பசுமைப் புரட்சித் திட்டம், சிறிய விவசாயிகளுக்குப் பயனளிக்கவில்ல என்றாலும் அவர்களும் அதன் பிடியில் கொண்டு வரப்பட்டனர். இதன் விளைவாக உரம், பூச்சிக் கொல்லி மருந்து அதிகம் குடிக்கும்-செலவு பிடிக்கும் விவசாயத்திற்கு இந்த விவசாயிகள் தள்ளப்பட்டனர். பாரம்பரிய விவசாய அனுபவம்-அறிவு எல்லாம் அழிக்கப்பட்டு, தரகு முதலாளிகளின் அரசு விரும்பும் அடிமை விவசாய முறைக்குப் பிடித்துத் தள்ளப்பட்டனர்.

இதன் விளைவு என்ன? இன்றைக்கு விவசாயிகள் தமது விருப்பப்படி நாட்டுப்புற விதைகளை வாங்கி விவசாயம் செய்ய முடியாது. ஏனெனில், அதன் இருப்பு அழிக்கப்பட்டு பி.டி. விதைகள் மட்டுமே கிடைக்கும் என்ற நிலைமை பருத்தியில் உருவாக்கப்பட்டுவிட்டது.

ஏற்கெனவே அரசியல் ரீதியாக திரளாத விவசாயிகள், தமது தொழிலுக்காக பெரும் நிறுவனங்களைச் சார்ந்து இயங்குவதாக மாற்றப்பட்டுவிட்டனர். பிற்போக்கு நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் சிக்குண்டிருக்கும் விவசாயிகளின் பாமரத்தனம் பெரும் முதலாளிகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்து விட்டது. பருத்தியில் ஆக்கிரமிப்பு வெற்றி கண்ட மான்சாண்டோ நிறுவனம், அடுத்ததாக உணவுப் பயிர்களுக்கு குறிவைத்திருக்கிறது. அதற்கான முதல் அறிமுகம்தான் பி.டி. கத்தரி.

இந்தியாவில் விளையும் காய்கறிகளில் எட்டு சதவீத பங்கைக் கொண்டிருக்கும் கத்தரிக்காய், சரியாகச் சொன்னால் அது ஏழைகளின் காய். எத்தகைய வறட்சியிலும், மழையிலும், கிராக்கியில்லாமல் அதிகம் கிடைக்ககூடியதும், விலை குறைவானதுமான அந்தக் காயைக் கூட விட்டுவைக்க மான்சாண்டோ விரும்பவில்லை. கத்தரியில் ஆரம்பிக்கும் இந்த ஆக்கிரமிப்பு நாளை அரிசி, கோதுமையில் முடியும் நாள் வெகுதொலைவில் இல்லை.

விவசாயத்தை நாசமாக்க வந்துள்ள பி.டி. கத்தரிக்குப் பாடை கட்டி விவசாயிகள் நடத்தும் கண்டன ஊர்வலம்.



இந்தியாவில் சுமார் 2500 வகை நாட்டுப்புற கத்தரி வகைகள் உள்ளன. பீகார், மே.வங்கம், ஒரிசா ஆகிய மூன்று மாநிலங்களும் நாட்டின் கத்தரி உற்பத்தியில் 61 சதவீதத்தை கொண்டிருக்கின்றன. அதிகம் உரம், பூச்சிக் கொல்லிகள் தேவைப்படாமல் விதவிதமான ருசியைக் கொண்டிருக்கும் இந்த ரகங்களை வணிக நோக்கத்திற்காக மான்சாண்டோ அழிக்க நினைக்கிறது. இதன் இந்திய அவதாரமான மகிகோ நிறுவனத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பி.டி. விதையை சந்தைப்படுத்துவதற்கான முயற்சியை இந்திய அரசு வலிந்து செய்கிறது. ஏற்கெனவே அரசின் கீழ் இயங்கும் நிபுணர்கள் குழு இதற்கு ஒப்புதல் கொடுத்து விட்டது.

இப்போது ஊரூராகச் செல்லும் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷும் அந்த நிபுணர்களின் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்கிறார். ஏற்கெனவே சில மாநிலங்கள் இந்த பி.டி. கத்தரிக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கும் நிலையில், அவற்றைச் சரிக்கட்ட இந்தப் பிரச்சாரம் உதவுகிறது. இதற்குத் தோதாக தன்னார்வக் குழுக்களும் இந்த பி.டி. விதையின் தீங்கைத்தான் பிரச்சாரம் செய்கின்றவே அன்றி, விவசாயிகளை அடிமைப்படுத்தும் மான்சாண்டோவின் அரசியல் சதியை பேசுவதில்லை. பி.டி. பருத்தி அறிமுகப்படுத்தப்பட்டபோது நடந்த நாடகம், இப்போது கத்தரி விசயத்தில் மீள நடைபெறுகிறது.

பெயரளவிற்காவது சில மாநிலங்கள் பி.டி. கத்தரிக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கும் நிலையில், தமிழக அரசு மட்டும் மான்சாண்டோவின் அடியாளாக நடந்து கொள்கிறது. கோவை விவசாயப் பல்கலைக் கழகமும் மான்சாண்டோவின் ஆய்வில் பங்கு பெற்று நான்கு பி.டி கத்தரி விதைகளை அறிமுகப்படுத்த காத்திருக்கிறதாம். மத்திய அரசு சொல்லாமலேயே இவற்றைச் சந்தைப்படுத்த தி.மு.க அரசு துடிக்கிறது.

தமிழகத்தில் நூற்றுக்கும் அதிகமான கத்தரி விதைகள் பயன்பாட்டில் இருக்கின்றன. விவசாயிகள் தமது வழமையான சாகுபடியின் ஒரு அங்கமாக நிலத்தின் ஓரத்தில் கத்தரியைப் பயிரிடுவது வழக்கம். குறுகிய கால பணப்பயிராக விளங்கும் கத்தரி, பெரும்பாலும் விவசாயிகளை ஏமாற்றாமல் உதவி வந்துள்ளது.

தமிழகத்திலும் இதுவரை கத்தரிக்காய்க்குத் தட்டுப்பாடோ, அதிக விலை உயர்வோ வந்ததில்லை. இப்போது இதை அடியோடு மாற்ற அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் துடிக்கிறார். பி.டி கத்தரிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வாரை இகழ்ந்து பேசும் இந்த அமைச்சரும், கோவை பல்கலைக் கழகமும் மான்சாண்டோவின் புரோக்கர்களாக மாறிவிட்டனர். மத்திய அரசு என்ன சொல்வது? நாங்களே தயார்! என்று பகிரங்கமாக அறிவிக்கும் இவர்களின் அடிமைப்புத்தி, இதர மாநிலங்களில் காணப்படவில்லை. இதிலிருந்தே தமிழக அரசின் யோக்கியதையை புரிந்து கொள்ளலாம்.

மறுகாலனியாக்கத்தின் அங்கமாக வரும் மான்சாண்டோவின் படையெடுப்பை விவசாயிகள் மட்டுமல்லாமல், அனைத்து பிரிவு உழைக்கும் மக்களும் ஒன்று சேர்ந்து எதிர்க்காமல் நமது விவசாயத்தைக் காப்பாற்ற வேறு வழியில்லை. இதற்கு நேரெதிராக இயங்கும் தன்னார்வக் குழுக்கள் இந்தப் பிரச்சினையை முன்னெடுப்பது, போராட்டத்தைத் திசைதிருப்பி பின்னுக்கு இழுக்கும் சதியாகவே இருக்கும் என்பதைப் போராடும் விவசாயிகள் உணரவேண்டும்.

● சாத்தன்

# தொடரும் புலி ஆதரவாளர்களின் சந்தர்ப்பவாதம்

ஈழப்போரில் பேரழிவும் பின்னடைவும் ஏற்பட்ட பின்னர், தமிழ்நாட்டில் புலிகளின் ஆதரவாளர்கள் விடுத்துவரும் அறிக்கைகளும், அவர்கள் எடுத்துவரும் நிலைப்பாடுகளும் தமிழர்களைப் புல்லரிக்க வைக்கின்றன. ஏழு மாதங்களுக்கு முன் நடந்த நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டி ஜெயலலிதாவின் 'நேர்மையான சந்தர்ப்பவாதமான' ஈழ ஆதரவைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, இரட்டை இலைக்கு தெருவெங்கும் வாக்கு சேகரித்தனர், பெரியார் தி.க.வினர். இதைத் தொடர்ந்து சென்னை இராயப்பேட்டையில் பெ.தி.க. வினரை, தி.மு.க. குண்டர்கள் கடுமையாகத் தாக்கி, பெரியார் சிலையையும் சேதப்படுத்தினர். பல பெ.தி.க. தொண்டர்கள் மீது பொய்வழக்கு போடப்பட்டு அலைக்கழிக்கப்பட்டனர். இவை எல்லாம் இப்போது மறப்போம் மன்னிப்போம் என்பதாகிவிட்டன. அண்மையில், இராயப்பேட்டையில் பெரியார் தி.க. நடத்திய பொங்கல் விழாவிற்கு, தங்கள் மீது தாக்குதலை நடத்திய 'ஈழத் துரோகிகளான' தி.மு.க.வின் பொறுப்பாளர்களிடமே மேடை அமைப்பு போன்றவற்றிற்கு நன்கொடை பெற்றுக்கொண்டு, அவர்களோடு சேர்ந்து கோலாகலமாகப் பொங்கல் விழாவை நடத்தி முடித்துள்ளனர். ''அது அரசியல்; இது தமிழரின் விழா'' என்று நாக்கைச் சுழற்றி இதற்கு விளக்கமும் அளிக்கின்றனர்.



தேர்தல் முடிந்தவுடன் தி.மு.க. அரசு, கோவையில் உலகத்தமிழ் செம்மொழி மாநாடு அறிவித்தது. ''நம் வீட்டில் மிகப்பெரும் சோகம் நடந்துள்ளது. இந்தக் கொண்டாட்டங்கள் அவசியமா? ஓராண்டுக்குத் தள்ளி வைக்கக் கூடாதா?''என்றெல்லாம் 'சென்டிமென்டாக' உருகினார் த.தே.பொ.கட்சியின் பெ.மணியரசன். ஆனால் தமிழ் இனவாதியும், பெ.ம.வின் நட்புசக்தியுமான பேராசிரியர் க.நெடுஞ்செழியன், அதே மாநாட்டில் பொறுப்பேற்றதை அவர் விமர்சிக்கவில்லை. ஈழத்தில் நடந்த கொடுமைகளுக்கு எதிராக மனம் குமுறிய இன்னொரு 'புரட்சிகர தமிழ்த்தேசியர்' இன்குலாப், தனக்கு அரசு அளித்த கலைமாமணி விருதைத் திருப்பித் தந்து 'தனது கவுரவத்தைக் காத்துக் கொண்டார்' என அவருக்கு இதே தமிழ் இனவாதிகள் சான்றிதழ் கொடுத்திருந்தார்கள். ஆனால் 'பொருள்' அற்ற கலைமாமணியை உதறிய இன்குலாப், ஈழத்தமிழின அழிப்பை நடத்திய மத்திய அரசின் செம்மொழி ஆய்வு மையத்தில், தனது திட்டம் ஒன்றுக்காக அண்மையில் இரண்டரை இலட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டதை ஏன் திருப்பிக் கொடுக்கவில்லை என்று எந்தத் தமிழ்த் தேசியரும் கேள்வி எழுப்பவில்லை.

இவற்றை 'நேர்மையான சந்தர்ப்பவாதம்' என்பதா? 'நேர்மையற்ற சந்தர்ப்பவாதம்' என்பதா?

# ஆஸ்திரேலியாவின் நிறவெறி! இந்தியாவின் 'சகிப்புத் தன்மை'!

**ஆஸ்திரேலியாவின் வெள்ளை நிறவெறியை எதிர்க்காமல் இந்திய அரசு அடக்கி வாசிக்கிறது.**

''ஆஸ்திரேலியாவுக்குப் படிக்கச் சென்ற இந்திய மாணவர்கள் மீதான வெள்ளை நிறவெறித் தாக்குதல்'' சென்ற மாதம் முழுவதும் இந்திய ஊடகங்களில் முக்கியச் செய்தியாகத் தொடர்ந்து இடம் பெற்றிருந்தது. பஞ்சாபைச் சேர்ந்த நிதின் கார்க் என்ற 21 வயது வணிகவியல் பட்டதாரி மாணவர், அவர் பகுதி நேரமாக வேலை செய்து வந்த உணவு விடுதிக்குச் சென்று கொண்டிருந்தபோது ஒரு கும்பலால் வழிமறித்துக் குத்திக் கொலை செய்யப்பட்டார். கொலையாளிகள் யார் என்று இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

நிதின் கார்க் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து கண்டனங்கள் எழுந்த போதிலும், அடுத்த ஒரு வாரத்திலேயே ஜஸ்பிரீத் சிங் என்ற டாக்சி ஓட்டுனரைத் தீ வைத்துக் கொளுத்த ஒரு கும்பல் முயன்றிருக்கிறது. தீக்காயங்களுடன் அவர் உயிர் தப்பியிருக்கிறார். இந்தியர்கள் மீதான தாக்குதலுக்காக சென்ற ஆண்டில் மட்டும் 1400 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. தாக்கப்படும் பலர் போலீசில் புகார் கொடுப்பதில்லை என்பதால், தாக்குதலின் எண்ணிக்கை உண்மையில் இதை விட மூன்று மடங்கு அதிகமாக இருக்கும் என்று ஆஸ்திரேலியாவில் உள்ள இந்திய மாணவர்கள் கூறுகின்றனர்.

நிதின் கார்க் கொலையைத் தொடர்ந்து, இது நிறவெறித்தாக்குதலாக இருக்க வாய்ப்பு இருக்கிறது என்று முதன் முறையாக விக்டோரியா மாகாணத்தின் தலைமை போலீசு கமிசனரே ஒப்புக் கொண்டிருக்கிறார். எனினும் இவையனைத்தும் வழிப்பறி, ரவுடித்தனம் போன்ற வழமையான குற்றங்களேயன்றி நிறவெறித் தாக்குதல்கள் அல்ல என்கிறது ஆஸ்திரேலிய அரசு.

ஆஸ்திரேலியாவுக்குப் பிழைக்கப்போன டாக்சி டிரைவர்கள் போன்ற அடித்தட்டு வர்க்கங்களைச் சேர்ந்த இந்தியர்களின் மீது இத்தகைய தாக்குதல்கள் நடக்கும் போதும், வளைகுடா நாடுகள் மற்றும் மலேசியாவில் இதைவிடக் கொடூரமாக இந்தியத் தொழிலாளிகள் நடத்தப்படும்போதும் அவற்றைக் கண்டு கொள்வதற்குக் கூட மறுக்கும் இந்திய அரசும், இந்திய ஊடகங்களும் சமீபகாலமாகக் குமுறிக் கொந்தளிப்பதற்குக் காரணம், அடி வாங்குபவர்களின் வர்க்கமும் சாதியும்தான். தற்போது தாக்கப்படுபவர்கள், இலட்சக்கணக்கில் பணம் கட்டி அங்கே படித்து விட்டு, பின்னர் ஆஸ்திரேலியக் குடியுரிமை வாங்கி அங்கேயே ''செட்டில்'' ஆக விரும்பும், உயர் நடுத்தர வர்க்க, உயர்சாதி இந்தியர்கள் என்பதனால், ஆங்கிலத் தொலைக்காட்சி ஊடகங்கள் அளவுக்கு அதிகமாகச் சாமியாடுகின்றன. பாலிவுட் திரைப்பட இயக்குநர் மொகித் சூரி, இந்தத் தாக்குதல்களை மையமாக வைத்துப் படமெடுப்பதற்குத் திரைக்கதையே தயாரித்து விட்டார்.

இத்தகைய சூழ்நிலையில் ''கடுமையான'' கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டு விட்டது இந்திய அரசு. சில மாதங்களுக்கு முன் ஈழத்தில் நடைபெற்ற இனப்படுகொலை குறித்து சாதாரணக் கண்டனத்தைக் கூடத் தெரிவிக்க மறுத்த இந்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சர் கிருஷ்ணா, ''இது அப்பாவி இந்தியர்கள் மீது நடத்தப்பட்டுள்ள கொடூரத் தாக்குதல் மட்டுமல்ல, மனித குலத்தின் மீது இழைக்கப்பட்டுள்ள கொடுங்குற்றமும் ஆகும்'' என்று வருணித்தார்.



நிறவெறிக் கொடுமைக்கு எதிராக மேட்டுக்குடி இந்திய மாணவர்கள் ஆஸ்திரேலியாவில் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

பார்ப்பதற்குக் கடும் கண்டனம் போலத் தெரிந்தாலும், நிறவெறித் தாக்குதல் என்று குற்றம் சாட்டுவதற்குக் கூடப் பயப்படுகின்ற இந்திய அரசு, கண்டனம் என்ற பெயரில் உதிர்த்துள்ள நகைச்சுவைத் துணுக்குதான் இது .

இத்தாக்குதல்களைத் தொடர்ந்து, ஆஸ்திரேலிய இந்தியர்களுக்கு வெளியுறவுத்துறை கொடுத்துள்ள வழி காட்டுதலே இதனை நிரூபிக்கிறது;

‘‘தீவிரமான குற்றத்தடுப்பு நடவடிக்கைகளை ஆஸ்திரேலிய அரசு மேற்கொண்ட போதிலும் தாக்குதல்கள் தொடர்கின்றன. ஆஸ்திரேலியாவில் ஆகப்பெரும்பான்மையான இந்தியர்களுடைய அனுபவம் நேர்மறையானதே என்றபோதிலும், கீழ்க்கண்ட தற்காப்பு நடவடிக்கைகளை இந்தியர்கள் மேற்கொள்வது நல்லது. மக்கள் நடமாட்டம் அதிகமில்லாத பகுதிகளுக்குத் தனியாக செல்லாதீர்கள். எங்கே போகிறீர்கள், எப்போது திரும்புவீர்கள் என்பதை யாரிடமாவது சொல்லாமல் வெளியே போகாதீர்கள். மடிக்கணினி போன்ற விலை உயர்ந்த பொருட்களை மற்றவர்களுக்குத் தெரிவது போல எடுத்துச் செல்லாதீர்கள். ஆபத்து என்றால் யாருக்குத் தகவல் சொல்லவேண்டும் என்பதை எழுதி சட்டைப் பையில் வைத்திருங்கள்’’ என்று நீள்கின்றன, இந்திய அரசின் வழிகாட்டுதல்கள்.



இந்திய சாதிவெறியையும் ஆஸ்திரேலிய நிறவெறியையும் எதிர்க்காமல், பெருமுதலாளிகளின் இலாபவெறி தடையின்றித் தொடரக் கைகுலுக்கும் இந்திய-ஆஸ்திரேலியப் பிரதமர்கள்.

நிலைமை இவ்வளவு மோசமாக இருந்தபோதிலும், ஆஸ்திரேலிய அரசிடம் இந்திய அரசு அடக்கி வாசிப்பதற்குக் காரணம் இருக்கிறது. அமெரிக்கா அமைத்துள்ள ஆசிய-பசிபிக் பிராந்தியத்துக்கான இராணுவக் கூட்டணியில் ஆஸ்திரேலியாவுடன் இந்தியாவும் அங்கம் வகிக்கிறது என்பதுடன், அணு ஆயுதப் பரவல் தடையில் கையெழுத்திடாமலேயே, யுரேனியத்தைப் பெறுவதற்கும் இந்திய அரசு, ஆஸ்திரேலியாவைத் தாஜா செய்து வருகிறது. மேலும், ஆஸ்திரேலியாவில் கல்வி நிறுவனங்களைத் தொடங்கும் வாய்ப்பு இந்தியக் கல்வி வியாபாரிகளுக்கு இப்போது கிடைத்துள்ள சூழலில், சவடாலுக்காகக் கூட நிறவெறி எதிர்ப்பு பேசி வருமானத்தைக் கெடுத்துக் கொள்ள இந்திய ஆளும் வர்க்கங்கள் விரும்பவில்லை.

இந்திய ஊடகங்கள் சாமியாடுவதை ஆஸ்திரேலிய அரசு சகித்துக் கொள்வதற்கும் காரணம் உள்ளது. அந்நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் சரக்குகளில் நான்காவது இடத்தில் இருக்கிறது கல்வி. ஆண்டொன்றுக்கு 15.4 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிலான வருமானத்தை கல்வி வியாபாரத்தின் மூலம் ஈட்டுகிறது ஆஸ்திரேலியா. இதில் இந்திய மாணவர்களின் பங்கு 2 பில்லியன் டாலர்கள். தற்போது இந்தியாவிலும் தனது கல்வி வியாபாரத்தைத் தொடங்கவிருக்கிறது. வெள்ளைக் கனவான்கள் கண்ணியம் காப்பதற்குக் காரணம் இதுதான்.

மற்றபடி, ஆஸ்திரேலிய ஆளும் வர்க்கத்தின் வெள்ளை நிறவெறியை நிரூபிப்பதற்கு அதிகம் சிரமப் படவேண்டிய அவசியமில்லை. ஆஸ்திரேலியப் பழங்குடிகளைத் துப்புரவாக வேட்டையாடி ஒழித்து அந்த கண்டத்தையே கைப்பற்றிக் கொண்டது மட்டுமின்றி, பழங்குடி மக்களின் மொழி மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகளையும் தடை செய்தது அரசு. அம்மக்களின் குழந்தைகள் மூலம் அந்தப் பண்பாட்டின் எச்சங்கள் கூட மிஞ்சி இருக்கக் கூடாது என்பதற்காக, 5 வயதுக்கு உட்பட்ட பழங்குடியின குழந்தைகளை அவர்களுடைய பெற்றோரிடமிருந்து பலவந்தமாகப் பறித்தது. இந்த நடவடிக்கைகளில் நேரடியாகப் போலீசாரே ஈடுபடுத்தப்பட்டனர். இந்தப் பிள்ளை பிடிக்கும் கொடுமை 1970-ஆம் ஆண்டு வரை தொடர்ந்திருக்கிறது என்பது ஆஸ்திரேலிய ஆளும் வர்க்கத்தின் யோக்கியதைக்குச் சான்று.

வெள்ளை நிறவெறி ஆஸ்திரேலியப் பிரதமரின் கொடும்பாவியை எரித்து இந்தியாவில் நடந்த ஆர்ப்பாட்டம்.



இந்திய ஆளும் வர்க்கத்தைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. தீண்டாமைப் படுகொலைகள் கூட சாதாரணக் கொலைக்குற்ற வழக்குகளாகவே இங்கு பதியப்படுகின்றன. தீண்டாமையோ இந்துக் கலாச்சாரத்தின் அங்கமாகவே கருதப்

படுகிறது. இந்நிலையில் வெள்ளை நிறவெறியைப் பற்றி வரம்பு மீறிப் பேசினால், தீண்டாமையும் சர்வ தேசப் பிரச்சினையாகச் சந்திக்கு வந்துவிடும் என்ற அச்சமும் இந்திய அரசுக்கு இருக்கிறது.

உள்நாட்டில் வேலை தர வக்கில்லாததால் வெளிநாடு செல்ல இந்தியர்களை ஊக்குவிப்பதும், அந்த அந்நியச் செலாவணிக்காசை அண்டி நிற்பதும் இந்திய ஆளும் வர்க்கங்களின் பொருளாதாரத் தேவை. மக்கள் தொகை அதிகரிக்காத ஆஸ்திரேலியாவுக்கோ, ஆசிய நாடுகளிலிருந்து மலிவான கூலிக்கு ஆட்கள் தேவை. இந்தியாவில் வர்க்க முரண்பாடுகளைத் திசை திருப்புவதற்கு இந்திய ஆளும் வர்க்கங்களுக்கு சாதி எப்படிப் பயன்படுகிறதோ, அப்படித்தான் நிறவெறியும் அங்கே பயன்படுகிறது. முதலாளித்துவப் பொருளாதார நெருக்கடி காரணமாக கல்வி, வேலை வாய்ப்புகளை இழந்து வரும் வெள்ளை இளைஞர்களின் கோபம் தனக்கெதிராகத் திரும்பாமல், ஆசிய நாட்டினருக்கும், கருப்பினத்தவருக்கும் எதிராகத் திரும்பும் அளவில், வெள்ளை நிறவெறி ஆஸ்திரேலிய முதலாளி வர்க்கத்துக்கும் பயன்படுகிறது. சாதி வெறியாகட்டும், நிறவெறியாகட்டும் எல்லாமே தமது தேவைக்கு உகந்த அளவில் தொடரவேண்டும் என்பதே முதலாளி வர்க்கத்தின் விருப்பம்.

கடந்த 3 ஆண்டுகளில் இந்தியர்களுக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்துக் கொண்டே வருவது பற்றிக் கேட்டபோது, ''கடந்த மூன்றாண்டுகளில் ஆஸ்திரேலியாவுக்கு வர விரும்பும் இந்திய மாணவர்களின் எண்ணிக்கையும் 30,000 இலிருந்து 1,00,000 ஆக உயர்ந்திருக்கிறதே'' என்று பதிலளித்தார் இந்தியாவுக்கான ஆஸ்திரேலிய ஹை கமிசனர் பீட்டர் வர்கீஸ். நிதின் கார்க்கிற்கு விழுந்த கத்திக்குத்தை விடவும் வலிமையானது இந்தக் குத்து. இருப்பினும் இந்தக் குத்தெல்லாம் என்.ஆர்.ஐ. அம்பிகளின் தோலைக் கூடத் துளைக்க முடியாது.

• அஜித்

# வீட்டுப் பணியாளர்களின் கொத்தடிமை வாழ்க்கை

**அவலத்தில் உழலும் வீட்டுப் பணியாளர்கள் அமைப்பு ரீதியாகத் திரண்டு போராடுவதே உடனடி தேவை.**

அதிகாலையிலேயே எழுந்து ஓட்டமும் நடையுமாக நடுத்தர - மேட்டுக்குடி வர்க்கத்தினர் வீடுகளுக்குப் பாத்திரங்கள் விளக்கி, வீடு பெருக்கக் கிளம்பிச் செல்லும் கண்ணம்மா (பெயர் மாற்றப்பட்டுள்ளது)-வின் கதை இது. எட்டுவயதில் வீட்டு வேலைகள் செய்ய ஆரம்பித்த கண்ணம்மா (வயது 43) இப்போது சென்னை ராயப்பேட்டை பகுதியில் நான்கு வீடுகளில் தினமும் வேலை செய்கிறார். காலை ஆறு மணிக்கு ஆரம்பிக்கும் இவரது ஒருநாள் வாழ்க்கை, மதியம் கிடைக்கும் இரண்டு மணி நேர ஓய்வுக்குப் பின்னர், மீண்டும் வேலை எனத் தொடர்கிறது. வீடு திரும்ப தினமும் இரவு 9 மணி ஆகிவிடுகிறது. நான்கு வீடுகளில் கடினமாக உழைத்தாலும் கிடைக்கும் சம்பளமோ, வீட்டுவாடகை, மளிகைச் செலவு போன்றவற்றிற்குப் போதுமானதாக இல்லை.

கண்ணம்மாவைப் போல, அடுத்தவர்களின் வீட்டு வேலைகளைச் செய்யும் வீட்டுப் பணியாளர்களின் எண்ணிக்கை இந்தியா முழுக்க 9 கோடிக்கும் மேல் இருக்கும் என்கிறது ஒரு கணக்கெடுப்பு. இதில் 20 சதவீதத்திற்கும் மேல் குழந்தைத் தொழிலாளர்கள்.

எங்கிருந்து இவர்களெல்லாம் வருகின்றனர்? கிராமப்புறங்களில் அழிக்கப்பட்டு வரும் விவசாயம், பல குடும்பங்களை நகரை நோக்கி விரட்டுகின்றது. நகரங்களில் கிடைக்கும் வேலைகளை ஆண்கள் செய்தாலும், அதில் கிட்டும் வருமானம், குடும்பத்தினர் அனைவரும் சாப்பிடுவதற்கே போதுமானதாக இல்லாததால், பெண்கள் வீட்டுவேலைகளுக்குச் செல்லத் தயாராகின்றனர். பன்னாட்டு நிறுவனங்களுக்குக் காடுகளையும் மலைகளையும் கிராமங்களையும் தாரைவார்த்த தனியார்மய உலகமயக் கொள்கை, அங்கிருக்கும் இலட்சக்கணக்கான பழங்குடியினரை விரட்டியடித்து வருகிறது. அவர்களில் கணிசமான பேர்கள் இந்தப் பணிகளுக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

நாளொன்றுக்கு 12 மணி நேர கடுமையான வேலை:
அவலத்தில் உழலும் வீட்டுப் பணியாளர்கள்.



நாளொன்றுக்கு சராசரியாக 12 மணிநேரத்திற்கும் மேலாக வேலை செய்யும் வீட்டுப் பணியாளர்களுக்கு உடற்சோர்வு, மயக்கம், தோல் எரிச்சல், ஒவ்வாமை, முதுகுவலி போன்ற தொழில்சார்ந்த நோய்கள், மாதம் ஒருமுறையாவது முடக்கிப் போட்டுவிடும். அதனால் வேலைக்கு வர இயலாத நாட்களுக்கு பல வீடுகளில் சம்பளத்தைப் பிடித்துவிடுவதை, ஏன் என்று கேட்கமுடியாது. கேட்டால் 'நாளையிலிருந்து நின்றுகொள்' எனச் சொல்லிவிட்டு, வேறு ஆட்களை வேலைக்கு வைத்துக் கொள்வார்கள். சிகிச்சைக்கென மருத்துவரிடம் போனாலோ குறைந்தது ரூ. 100 ஆகிவிடும் என்பதால், பெரும்பாலும் கைப்பக்குவத்திலேயே வைத்தியம் பார்த்துக் கொள்கின்றனர். இவர்களை விடக் குறைவான ஊதியத்துக்கு வேலை செய்ய ஆட்கள் நிறைய இருப்பதால், சம்பளத்தை உயர்த்தச் சொல்லிப் பேரம் பேசுவது கூட இவர்களின் வேலைக்கு வேட்டு வைத்துவிடுகிறது.

வீட்டுப்பணிகளில் ஈடுபடுத்தப்படும் குழந்தைகள் நிலையோ பரிதாபகரமானது. 8 அல்லது 9 வயதிலேயே பெற்றோரை விட்டுப் பிரிந்து, வேலைசெய்யும் வீட்டில் வாழ்வதும், தன் வயதொத்த அதே வீட்டாரின் குழந்தைகளுக்குக் கிடைக்கும் எவ்வித வசதிகளும் தங்களுக்கில்லா ஏக்கத்திலும், வீட்டு எஜமானர்கள் இழுக்கும் இழுப்புக்கெல்லாம் வேலை செய்து, ஓய்வென்பதையோ, சிறுவயதுக்குரிய விளையாட்டுக்களையோ காணமுடியாமல் வளரும் சோகம், மிகக் கொடுமையானது. பெரியவர்களைவிட மிகக் குறைந்த கூலி பெற்றுக் கொண்டு, உழைத்து ஓய்ந்துபோகும் சிறுவர், சிறுமியரின் வேலைகளில் தென்படும் சிறுசிறு தவறுகளுக்கெல்லாம் அடி, உதை அல்லது கேவலமான வசைகள் என்பன சர்வசாதாரணம்.

நொய்டா (உ.பி.) போன்ற திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நகரங்களில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளில், வீட்டுப் பணியாளர் தங்குவதற்கென்றே சமையலறையை ஒட்டினாற்போல் ஓர் அறை ஒதுக்கிக் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் பீகார், ஜார்க்கண்ட், தமிழ்நாடு எனப் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பணியாளர்கள் கோழிக்கூடு போன்ற சிறிய அறைகளில் தங்கிக் கொண்டு நடுத்தர - மேட்டுக்குடி வர்க்கத்தினரின் வீடுகளில் வேலை செய்கின்றனர். இவர்கள் அவசரத்திற்கு உறவினர்களிடம் பேசக் கூட அவ்வீட்டுத் தொலைபேசியைப் பயன்படுத்த முடியாது. மிச்சமீதியைத் தான் உண்ணமுடியும். நண்பர்களையோ, உறவினர்களையோ சந்திக்க வீட்டைவிட்டு வெளியே செல்ல முடியாது எனப் பல நிபந்தனைகளுடன், யாருமே வாழத் தகுதியற்ற வெளிச்சமோ காற்றோட்டமோ இல்லாத அறைகளில் கொத்தடிமைகளாக வாழ்கின்றனர். வெளியுலகே தெரியாமல், தனிமையில் வாழும் இப்பெண்கள் சில சமயங்களில் மனநோயாளிகளாகவும் மாறியுள்ளனர். எப்போது வேண்டுமானாலும் வேலையிலிருந்து நீக்கப்படலாம் எனும் நிச்சயமற்ற நிலையில்தான் பணியில் நீடிக்கின்றனர்.

பெற்றோரைப் பிரிந்து, கல்வியை இழந்து
வீட்டு வேலை செய்யும் குழந்தை: மாளாத் துயரம்



அருகிலுள்ள மேட்டுக்குடியினர் வீடுகளில் வேலை செய்துவிட்டு வீடு திரும்பும் வீட்டுப்பணியாளர்களான பல பெண்களின் கொஞ்சநேர நிம்மதியையும், அரசு நடத்தும் டாஸ்மாக் சாராயக் கடைகள் பறித்து விடுகின்றன. வீட்டுவேலைக்குப் போகும் பெண்களிடையே நடத்தப்பட்ட ஆய்வில், அவர்களின் கணவன்மாரில் 70 சதவீதம் பேர் குடிக்கு அடிமைகள் என்பதும், 60 சதவீதப் பெண்கள் வீட்டுக்குவந்தால், குடிகாரக் கணவர்களின் சித்திரவதையை அனுபவிக்கின்றனர் என்றும் தெரிய வந்துள்ளது.

காலையிலேயே வேலைக்குக் கிளம்பிப்போய், வீடு திரும்ப இரவு 8 மணிக்கும் மேலாகிவிடுவதால், தங்கள் குழந்தைகளைப் பராமரிக்க இப்பெண்களுக்கு நேரமிருப்பதில்லை. இது, அவர்களின் வளரும் குழந்தைகளின் ஆளுமையையும், கல்வியையும் சீரழிக்கிறது. சரியாகப் படிக்க இயலாத குழந்தைகள் 10 அல்லது 12 வயதானதும் இதே வேலைக்கு வந்துவிடுகின்றனர்.

இந்த சேவைக்காக மாநிலம் விட்டு மாநிலம் செல்வதும் அதிகரித்துள்ளது. டெல்லி போன்ற மாநகரங்களில் வீட்டு வேலை செய்வதற்கென்றே சேலம் மாவட்டத்தில் இருந்து ஆயிரக்கணக்கான பெண்கள் வந்து குவிந்திருக்கின்றனர். சட்டமன்ற உறுப்பினர் ரவிக்குமார் குறிப்பிட்டுள்ளபடி, விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் இருந்து கேரளத்திற்கு இவ்வேலைகளுக்கென 5 ஆயிரம் ரூபாய் வரை முன்பணம் கொடுத்து பெண்களை அனுப்பி வைக்கும் தரகர்கள் ஏராளமானோர் உள்ளனர். இவ்வாறு செல்லும் பெண்களில் பலர் பாலியல் வன்முறையால் கேரளாவில் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த வேலைகளுக்கு வீடுகளுக்கு தகுந்த ஆட்களை அனுப்புவதற்கென பெருநகரங்களில்

பல கங்காணிகள் பெருந் தொழில் நிறுவனங்களாக உரு வெடுத்துள்ளனர். இவர்களிடம் பெயரைப் பதிவு செய்தவர் களை மேட்டுக்குடியினரின் வீடுகளுக்கு வேலைக்கு அனுப் பும் நிறுவனம், இவர்களுக்கு தர வேண்டிய சம்பளத்தை வீட்டு உரிமையாளர்களிடம் பெற்றுக் கொண்டு, அதில் கணிசமான தொகையைச் சுரண் டிக் கொண்டுதான் வீட்டுப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குகிறது.

சென்னை போன்ற நகரங்க ளில், இவர்களுக்கு கிடைக்கும் அற்ப சம்பளத்துக்குள் குடிசை களில்தான் குடியிருக்க முடி கிறது. நகரை அழகுபடுத்தும் திட்டங்கள், இக்குடிசைகளை விட்டுவைப்பதில்லை. கூவம், பக்கிங்காம் கால்வாய் ஓரங் களில் குடியிருந்து வரும் இவர் களை, நகருக்கு வெளியே துரத் தும் பணி ஆரம்பித்து விட்டது. செம்மஞ்சேரி போன்ற புறநகர்ப்பகுதிகளுக்கு அகற்றப் படவிருக்கும் இப்பணியாளர்கள், தினமும் நகருக்குள் வந்து செல்வது என்பது இன்னமும் வாழ்வை சிக்கலாக் கியுள்ளது.



''நான்கு வீடுகளில் பாத்திரங்கள் கழுவுவதால் கைகள் தோலுரிந்து புண்ணாகிறது. இடுப்பு வலியுடன் மூட்டுவலியும் சேர்ந்து வதைக்கிறது. வேலைக்கும் உத்தரவாதமில்லை'' என்று வேதனையுடன் கூறும் இலட்சுமியம்மாள்.

இந்த அவல வாழ்வு வாழும் பெண்களை 'திருடர் களாகப்' பார்க்கும் பொதுக்கருத்தை ஆளும் வர்க்கம் உருவாக்கி வைத்துள்ளது. பல அடுக்குமாடிக் குடியிருப் புகளில் வேலைக்கு செல்பவர்களின் கைரேகை, குடும் பப் பின்னணி போன்றவற்றை அருகிலுள்ள போலீசு நிலையத்தில் பதிந்து வைக்க வேண்டும் என்று போலீசு கட்டாயப்படுத்துகிறது. சில பத்திரிக்கையாளர்களோ, வீட்டு வேலைக்காரிகளை, வீட்டு எஜமானர்களை மயக் கும் சக்களத்திகளாகச் சித்தரித்து துணுக்குகளை எழுது கின்றனர்.

ஏட்டளவில் இருக்கும் இந்தியத் தொழிலாளர் நலச் சட்டங்கள் கூட வீட்டுப் பணியாளருக்கென்று இல்லை. மேலும், இவர்கள் சங்கமாக அணிதிரட்டப்படாமலும் உள்ளனர். இவர்களுக்குச் சட்ட ரீதியாகத் தொழில் அங் கீகாரம் தரக் கோரி பல ஆண்டுகளாக கோரிக்கைகள் எழுப்பப்பட்டு வந்துள்ளன.

உலகமயமாக்கம் தீவிரப்படுத்தப்பட்டபோது, இச் சேவைப்பணியில் ஈடுபடுவோர் இலட்சக்கணக்கணக் கில் பெருகியதால், இவர்களுக்கு சட்டப் பாதுகாப்பு தேவை என சர்வதேச அளவில் கோரிக்கைகள் எழுந்தன. பல தன்னார்வ நிறுவனங்கள் இதனை வாய்ப் பாகப் பயன்படுத்தி, பல குழுக்களை இப்பெண்களி டையே உருவாக்கி, இக்கோ ரிக்கையை எழுப்ப வைத்தன. தமிழ்நாடு அரசும், 2007-இல் வரைவு சட்டம் ஒன்றை அறிமு கப்படுத்தியது. இதன்படி, இச் சேவையில் ஈடுபடுவோர், வீட்டுப்பணியாளர்கள் நலவா ரியம் ஒன்றில் இணைக்கப்படு வர். ஆனால் தமிழ்நாடு அர சின் சட்டம், குறைந்தபட்சக் கூலியை இன்றுவரை வரைய றுக்கவில்லை. 2005-இலேயே கேரள, கருநாடக அரசுகள் உரு வாக்கியுள்ள சட்டத்தின்படி, 8 மணிநேர வேலைக்கு மாதத் துக்கு ரூ. 1800-மும், வேலை செய்யும் வீட்டில் 4 பேருக்கு மேலிருந்தால் ரூ. 2200-உம் குறைந்தபட்ச ஊதியமாக நிர் ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு இவர்களுக்காக ஆரம்பித்திருக்கும் நலவாரியம் பற்றிய செய்தியோ, அரசின் இணையதளத்தில் மட்டும் தான் உள்ளது. அந்த வாரியம், எங்கே இயங்குகின்றது எனும் தகவலைக் கூட அரசு விளக்கமாக அறிவிக்க வில்லை. கண்ணகி நகர் போன்ற சென்னைப் புறநகரில் தங்கி இருந்து, வீட்டுவேலை செய்யும் பெண்கள் தங்களைப் பதிவு செய்ய வேண்டுமானால், ஒருநாள் வேலைக்கு செல்லாமல் காஞ்சிபுரம் போய் தேடி அலைந்து வாரியத்தில் பெயர் பதிய வேண்டும் எனும் நிலைதான் உள்ளது. இதிலிருந்தே அரசுக்கு இந்தப் பணியாளர்கள் மீதான அக்கறை என்ன என்பது தெரி கிறது.

வேலை உத்திரவாதம், மருத்துவ வசதி, குறைந்த பட்ச விடுமுறைகள், தங்கள் குழந்தைகளின் கல்வி, ஆயுள் காப்பீடு போன்ற உடனடித் தேவைகளை இப் பணியாளர்கள் போராடிப் பெற வேண்டியுள்ளது. பிழைப்புக்கான இடத்தின் அருகிலேயே குடியிருப்பு வசதி, ஈ.எஸ்.ஐ. மருத்துவ வசதி, சேமநலநிதி போன்ற வையும் இவர்களுக்குச் சட்டப்படி அளிக்கப்பட வேண் டும். இதற்காக இத்தொழிலாளர்கள் அனைவரும் சங்க மாக ஓரணியில் திரள வேண்டும். கடுமையான உழைப் புச் சுரண்டலுடன் சட்டபூர்வ உரிமைகளையும் உலகம யம் பறித்துவரும் இன்றைய நிலையில், அல்லற்பட்டு வரும் இப்பணியாளர்கள் அமைப்பாகத் திரண்டு, மறுகாலனியாதிக்கக் கொள்கைகளுக்கு எதிராக இதர பிரிவு உழைக்கும் மக்களுடன் இணைந்து போராடு வதன் மூலம் மட்டுமே, தமது நலனையும் விடுதலை யையும் சாதிக்க முடியும்.

● கதிர்

# கிரிமினல் போலீசுக்கு வரம்பற்ற அதிகாரம்: இது எந்த வகையில் நியாயம்?

**"சீருடையில் உள்ள போலீசார்தான் நாட்டிலேயே அமைப்பு ரீதியில் திரண்டுள்ள மிக மோசமான கிரிமினல் கும்பல்." – நீதிபதி முன்ஷி**

போலீசுக்காரர்கள், குறிப்பாக உயர் போலீசு அதிகாரிகள் வக்கிரமான, கிரிமினல் குற்றச் செயல்களில் ஈடுபடுவதும், தண்டனை ஏதுமின்றித் தப்பித் திரிவதும் மட்டுமல்ல; அவர்களால் பாதிக்கப்பட்டவர்களே துன்புறுத்தப்படுவதும், கிரிமினல் போலீசார் மேலும் மேலும் பதவி உயர்வும் விருதுகளும் பெறுவதும் கூட புதிதில்லை.

சில பத்தாண்டுகளுக்கு முன்பு, ஆந்திரா உயர்நீதிமன்றத்தில் விசாரணை நடந்து கொண்டிருந்தபோது, தலைமை நீதிபதி முன்ஷி வெளிப்படையாகச் சொன்னார்: ''சீருடையில் உள்ள போலீசார்தான் நாட்டிலேயே அமைப்பு ரீதியில் திரண்டுள்ள மிக மோசமான கிரிமினல் கும்பல்''. ஐதராபாத் நகரத் தெருவில் கணவனோடு சென்று கொண்டிருந்த ரமீஷா பீவி என்ற இசுலாமியப் பெண்ணைப் பாலியல் வன்முறை செய்த போலீசு கும்பல், போலீசு நிலையத்துக்குக் கொண்டு போய் கணவனை சித்திரவதை செய்து சிறையில் அடைத்தது. ஐதராபாத் - செகந்திராபாத் இரட்டை நகரங்களை ஒரு வாரம் நிலைகுலையச் செய்த போராட்டங்களுக்குப் பிறகு வழக்குப் பதிவு செய்யப்பட்டு நடந்த விசாரணையில், ரமீஷா பீவி ஒரு விபச்சாரி என்றும், அவளது கணவனை விபச்சாரத் தரகனென்றும் நிரூபிக்க முயன்றது போலீசு கும்பல். இதற்காக விபச்சாரத் தரகு கும்பலோடு சேர்ந்து சதி செய்து பொய்ச் சாட்சியங்களை உருவாக்கியது. இதைக் கண்டுபிடித்த நீதிபதி முன்ஷி போலீசுத் துறையையே கிரிமினல் கும்பல் என்றார்.

ரமீஷா பீவி வழக்கு போலீசின் கிரிமினல் குணத்துக்கு ஒரு வகை மாதிரி என்றால், அரியானா மாநிலம் சண்டிகரில் நடந்த மாயா தேவி வழக்கு அதன் வக்கிரப் புத்திக்கு வேறொரு வகைமாதிரியாகும். திருமணத்துக்கு காரில் சென்று கொண்டிருந்த குழுவைச் சேர்ந்த பெண் மாயாவை வெளியே இழுத்துப் போட்டது ஒரு போலீசு கும்பல். தடுக்கப் போன ஒரு இளைஞரை நடுத்தெருவில் நாயைப் போலச் சுட்டுக் கொன்றது. மாயாவை நிர்வாணப்படுத்தி தெருவில் இழுத்துப் போய், கும்பல் பாலியல் வன்முறை செய்ததோடு, அவரது பிறப்பு உறுப்பில் போலீசு 'லத்தி'யைச் செருகித் துன்புறுத்தியது. இத்தனைக்கும் மாயாவோ அவரது குடும்பமோ, போலீசின் இந்தச் செயல்களுக்குக் காரணமாக எந்த குற்ற நடவடிக்கையிலும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை.

ரமீஷா பீவி, மாயாதேவி வழக்குகளில் கண்டவாறு அன்றாடம் வந்து குவியும் போலீசின் வக்கிரமான, கிரிமினல் குற்றச் செய்திகளால் முதலாளியச் செய்தி ஊடகம் மரத்துப் போய்க் கிடக்கிறது என்றே சொல்லலாம். என்றாலும், அதையே குலுக்கி எழுப்பியிருக்கிறது, அரியானாவில் தற்போது மீண்டும் உயிர் பெற்றுள்ள ஒரு வழக்கு.

•••


சாம்பு பிரதாப்சிங் ரத்தோர், அரியானா மாநில கூடுதல் போலீசு தலைமை இயக்குனராக இருந்தவன்; அரியானா மாநில டென்னிசு விளையாட்டு சங்கத் தலைவன். அம்மாநில பஞ்சகுலா நகர கிறித்தவ ஆங்கிலப் பள்ளியில் பத்தாம் வகுப்புப் படித்த 14 வயதே நிரம்பிய இளம் விளையாட்டு வீராங்கனை ருச்சிகா என்ற சிறுமியைத் தனது அலுவலகத்தில் வைத்து 1990-ஆம் ஆண்டு பாலியல் வன்முறைக்குப் பலியாக்கி விட்டான். அக்குற்றத்தில் இருந்து தப்பிக்க, அடுக்கடுக்கான கிரிமினல் குற்றங்கள் புரிந்தான்; பின்னர், அம்மாநிலத் தலைமைப் போலீசு அதிகாரியாகி அப்பொறுப்பிலிருந்து ஓய்வும் பெற்றான். பாலியல் குற்றத்துக்காக 19 ஆண்டுகளுக்குப் பிறகு, ஆறு மாத சிறையும் ஒரு ஆயிரம் ரூபாய் அபராதமுமே பெற்றான்; அதிலிருந்தும் பிணையில் வந்து சுதந்திரமாக திரிகிறான். இந்த அக்கிரமத்தைக் கண்டுதான் முதலாளியச் செய்தி ஊடகம் சூடாகிப் போயுள்ளது.

கிரிமினல் டி.ஜி.பி. ரத்தோர்:
அவன் குற்றங்களில் துணை நின்று வழக்கில் வாதாடும் மனைவி.



ருச்சிகா மீதான பாலியல் வன்முறையை அவளது வகுப்

புத் தோழி ஆராதனா நேரில் கண்டிருக்கிறார். இம்மாதிரியான அக்கிரமத்துக்கு ஆண்டுக்கு ஆயிரக்கணக்கில் பலியாகும் இந்தியப் பெண்கள் கண்ணீரும் கம்பலையுமாக மௌனித்திருக்கையில், தன் தோழி ஆராதனாவின் துணையோடு அந்தக் காம வெறியனுக்கு எதிராகப் போராடி நீதியை நிலைநாட்டத் துணிந்தாள் ருச்சிகா. அன்றிலிருந்து போலீசு மிருகம் ரத்தோரின் அடுத்தடுத்த கிரிமினல் நடவடிக்கைகளால் ருச்சிகா மற்றும் அவளது குடும்பம் மட்டுமல்ல, ருச்சிகாவின் தோழி ஆராதனாவும் அவளது குடும்பத்தினரும் கூட 'நரக வேதனை'க்குள் தள்ளப்பட்டனர்.



இன்னொரு கிரிமினல் டி.ஜி.பி.-கே.பி.எஸ்.கில்: 1500 இளைஞர்களை போலி மோதலில் கொன்றவன். பொது நிகழ்ச்சியில் பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரியை மானபங்கம் செய்தவன்.

தன் குடும்பத்தின் மீது ரத்தோர் தொடர்ந்து தொடுத்து வந்த தாக்குதல்கள் காரணமாக, *1994* ஜனவரியில் நஞ்சு உண்டு ருச்சிகா தற்கொலை செய்து கொண்டாள். ருச்சிகா குடும்பத்தினர் ரத்தோருக்கு எதிரான போராட்டத்தைக் கைவிட்ட நிலையில், ருச்சிகாவின் தோழி ஆராதனா குடும்பத்தினர் போராட்டத்தைத் தொடர்ந்தனர். இதனால் ரத்தோரின் ஆத்திரமும் தாக்குதலும் ஆராதனா குடும்பத்துக்கும் எதிராகத் திரும்பியது.

ஒரு *14* வயதுச் சிறுமி உயர் போலீசு அதிகாரியால் பாலியல் வன்முறை செய்யப்பட்டு, அதற்கு நேரடிச் சாட்சியம் இருந்தும், அந்த கிரிமினல் போலீசு வெறிநாய் மீது கிட்டத்தட்ட *20* ஆண்டுகளாக எந்த நடவடிக்கையும் இல்லை. பதவி உயர்வுகள் பெற்று, வழக்கமான விருதுகள், சன்மானங்கள், பாராட்டுக்கள், விருந்துகளோடு பதவி ஓய்வு பெறுகிறான். இறுதியில், வெறும் ஆறுமாதம் சிறைத் தண்டனை (அதுவும் பிணையில் சுதந்திரமாக வெளியில் போகவும் மேல் முறையீடு செய்யவும் அனுமதியோடு). பாலியல் வன்முறைக்கான சட்டப்படி அதிகபட்ச தண்டனைக்கான இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை கூட விதிக்கப்படவில்லை.

சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் போலீசு வெறியனால் துன்புறுத்தப்பட்டனர்; பாலியல் வன்முறைக்குப் பலியான சிறுமி தற்கொலைக்குத் தள்ளப்பட்டாள். பாலியல் வன்முறை தவிர, அதிகபட்சம் மரண தண்டனை பெருமளவு பதினோரு கிரிமினல் குற்றங்கள் புரிந்துள்ளான் ரத்தோர். அவன் புரிந்த குற்றங்களுக்கான சாட்சியங்கள்-தடயங்கள் எல்லாவற்றையும் அழித்துள்ளான். அரசு ஊழியராக இருந்து தனக்கு எதிரான சாட்சியங்களை மிரட்டிக் கலைத்துள்ளான். அரசு பதவியைக் கேடான நோக்கத்துக்குப் பயன்படுத்தியுள்ளான். தற்கொலை செய்து கொண்ட ருச்சிகாவின் பிரேத பரிசோதனை அறிக்கையை, தில்லுமுல்லு செய்து மாற்றி எழுத வைத்திருக்கிறான்.

இவ்வாறு போலீசு மிருகம் அடுக்கடுக்கான கிரிமினல் குற்றங்கள் செய்து கொண்டிருந்த அதேசமயம், எந்தக் கட்சி ஆட்சியாக இருந்த போதும் அவனது செல்வாக்கும் ஆதரவும் பெருகிக் கொண்டே போனது.

காங்கிரசின் கட்சி மாறி புகழ் பஜன்லால் அவனுக்குக் கூடுதல் தலைமை போலீசு பொது இயக்குநராகப் பதவி உயர்வு கொடுத்தார். பின்னர் அரியானா விகாசு கட்சி - பாரதீய ஜனதா கட்சியின் கூட்டணி ஆட்சியில், பா.ஜ.க. மந்திரி சம்பத் சிங் போலீசு மந்திரியாகவும் பான்சிலால் முதலமைச்சராகவும் இருந்தபோது கிரிமினல் ரத்தோர் மாநிலத் தலைமை போலீசு பொது இயக்குநராக மேலும் பதவி உயர்வு பெற்றான். ருச்சிகா வழக்கில் சி.பி.ஐ. விசாரணை தொடங்கியபோது, கூடுதல் தலைமைப் போலீசு பொது இயக்குநராக நியமிக்கப்பட்டான். லோக் தளக் கட்சியின் ஓம் பிரகாஷ் சௌதாலா முதலமைச்சரான பிறகு மீண்டும் மாநிலத் தலைமை போலீசு பொது இயக்குநராக்கப்பட்டான். பின்னர், எல்லா அரசு மரியாதைகள், சலுகைகள், உரிமைகள், ஊதியங்களோடு ஓய்வு பெற்றான்.

•••

இங்கே அடிப்படையான சில கேள்விகள் எழுகின்றன. இவ்வளவு கிரிமினல் குற்றங்கள் புரிந்த ஒரு போலீசு வெறிநாயால், இதுவரை எந்தவித சிறு தண்டனையுமின்றி எப்படிச் சுதந்திரமாக வாழ முடிகிறது? கிரிமினல் போலீசு அதிகாரியை எதிர்த்து நீதிக்காக எழுந்து நின்ற வங்கி மேலாளர் மற்றும் அரசு ஊழியர் ஆகிய நடுத்தரக் குடும்பங்களுக்கே இதுதான் கதி என்றால் சாதாரண ஏழை-எளிய மக்களின் நிலை என்ன? நீதியான, அமைதியான, சுதந்திரமான வாழ்க்கையை இவர்களால் எண்ணிப் பார்க்கவும் முடியுமா? நாட்டிலேயே திறமை வாய்ந்தது, தொழில் சுத்தமானது, எந்த வழக்கானாலும் உண்மையை வெளிக்கொண்டுவரத் தகுதியான ஒரே புலனாய்வுத் துறை என்று அனைத்துப் பிரிவு அரசியல்-சமூக அமைப்புகளாலும் கைகாட்டப்படும் சி.பி.ஐ. மற்றும் அதிஉயர்ந்த நீதி தேவதையின் கருவறையாக அடையாளம் காட்டப்படும், நம்பிக்கை வைக்கப்படும் உச்சநீதிமன்றம் ஆகியவற்றின் இலட்சணம்-யோக்கியதையே இதுதான் என்றால், இனி இந்நாட்டு மக்கள் எந்தச் சட்ட-நீதி அமைப்பின் மீது நம்பிக்கை வைக்க முடியும்?

ருச்சிகா வழக்கு விவரங்களை முழுமையாக அறிந்திருக்கும் ஆங்கிலம் அறிந்த நடுத்தர-மேட்டுக்குடி



ருச்சிகா மீதான பாலியல் வன்முறையை நேரில் கண்ட வகுப்புத் தோழி ஆராதனா: தோழிக்காக உறுதியுடன் போராடி வருகிறாள்.

அறிவுஜீவிகள் ஆடிப் போயிருக்க வேண்டும். ஆனால், அவர்களில் ஒரு பிரிவு, இன்னமும் இந்த நாட்டின் அரசியல்-சட்ட-நீதி அமைப்பின் மீது நம்பிக்கையூட்டும் வகையில் இந்த வழக்கைப் பார்க்கிறார்கள். எல்லாம் சட்டநீதி முறைப்படிதான் நடந்துள்ளன; தங்கள் முன் வைக்கப்பட்ட வழக்கு விவரங்கள் - சாட்சியங்கள் - வாதங்களின்படிதான் நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன; அதுதான் அவர்களின் வரம்பு என்று வாதிடுகிறார்கள். வேண்டுமானால், மீண்டும் நீதிமன்றங்களை அணுகி புதுப்புது வழக்குகள் போட்டு, தங்கள் எண்ணப்படி நீதியைப் பெற முயற்சிக்கலாம் என்று வாதிடுகிறார்கள்.

இன்னும் சில அறிவுஜீவிகள் நாட்டின் அரசியல் சட்டம் - நீதி அமைப்பு முறை முற்றிலும் தோற்றுப் போய்விட்டது என்பதை ஒப்புக் கொள்ளும் அதே வேளையில், இந்த அமைப்பைச் சீர்திருத்த வேண்டும்; அரசியல், சட்ட, நீதித்துறையில் ரத்தோர் போன்ற சில கேடானவர்களால்தான் இப்படி நேர்ந்துவிட்டது; ரத்தோர் போன்ற புல்லுருவிகள் இத்துறைகளில் நுழைந்து விடாமல் தடுப்பதற்காக சட்டங்களையும் விதிகளையும் மேலும் கறாராகவும் கடுமையாகவும் மாற்றியமைக்கலாம்; அத்தகைய கருப்பு ஆடுகளை அடையாளங் கண்டு கடுமையாகத் தண்டிக்கவும் வேண்டும். இத்துறைகளில் பணியாற்றுவோரைக் கண்காணிக்கும் - நெறிப்படுத்தும் நடுநிலையாளர்களை கொண்ட ஆணையங்களை அமைக்கலாம்; நல்லொழுக்கத்தையும் நாட்டுப்பற்றையும் போதிப்பக்கலாம் என்றெல்லாம் பண்டிதத்தனமாகிப் பரிந்துரைக்கிறார்கள்.

ஆனால், போலீசுத் துறையில் ரத்தோர்கள் விதிவிலக்குகள் அல்ல. சமீபத்திய சில சான்றுகளைப் பார்த்தால் இந்த உண்மை துலக்கமாக தெரியும்.

- ராஜஸ்தான் மாநிலத் துணைத் தலைமை போலீசு பொது இயக்குநர், ஒரு மலைவாழ் பெண்ணை புதுதில்லிக்கு அருகே கடத்தி வைத்து பாலியல் வன்முறை செய்திருக்கிறான். அவன் மீது வழக்குப் பதிவு செய்து 13 ஆண்டுகளாகத் தலைமறைவாக இருப்பதாகவும், போலீசு அவனைத் தேடி வருவதாகவும், ரத்தோர் விவகாரம் வெளியான பிறகு அவன் மீதான நடவடிக்கையைத் தீவிரப்படுத்தும்படியும் அம்மாநில போலீசுத் துறை அமைச்சர் ஆணையிட்டிருக்கிறார்.

- ஒரிசா மாநில தலைமைப் போலீசு பொது இயக்குநரின் மகன், ஒரு ஜெர்மன் நாட்டு சுற்றுலாப் பயணியை பாலியல் வன்முறை செய்த வழக்கில் ஏழாண்டு சிறைத் தண்டனை பெற்று ராஜஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டிருந்தான். அவன் தாயான தன் மனைவி சாகக் கிடப்பதாகக் கூறி அந்த அதிகாரி சொந்தப் பிணையில், பரோலில் கொண்டு வந்து தலைமறைவாகும்படி செய்து விட்டார். செய்தி ஏடுகளில் பரபரப்பாக பேசப்பட்டவுடன் இடைநீக்கம் செய்யப்பட்டு, அது அடங்கியவுடன் அவர் மீண்டும் அதே பதவியில் அமர்ந்துள்ளார். பல மாதங்களாக அந்த டி.ஜி.பியின் கிரிமினல் மகனைத் தன் பாதுகாப்பில் வைத்துப் பராமரித்தே வருகிறார்; எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

- அவ்வளவு ஏன், நமது தமிழ்நாட்டில் போலி மோதல் (போலி என்கவுண்டர்) புகழ் தேவாரம் மீது, வீரப்பன் தேடுதல் வேட்டையின் போது மலைவாழ் பெண்களை பாலியல் வன்முறை செய்தது உட்பட சித்திரவதை கொலை வழக்குகள், புகார்கள் எதுவுமே விசாரித்துத் தண்டிக்கப்படவில்லை.

- மராட்டிய மாநிலம் மும்பையின் இரகசிய உலக தொழில்முறை குற்றக் கும்பல்களிடமும் வீடு மற்றும் வீட்டுமனைத் தொழில் குற்றக் கும்பல்களிடம் இலஞ்சம் வாங்கிக் கொண்டு ஒன்றுக்கு எதிராக மற்றொன்றின் முக்கிய புள்ளிகளை போலி மோதல்கள் (போலி என்கவுண்டர்கள்) மூலம் படுகொலைகள் செய்து கோடி கோடியாக சொத்துக்களைக் குவித்தார்கள், பல போலீசு அதிகாரிகள். இப்படிப்பட்ட போலீசு அதிகாரிகளில் சிலர், கிரிமினல் குற்றக் கும்பல் ஒன்று சமீபத்தில் ஏற்பாடு செய்த புத்தாண்டு களிவெறியாட்ட விருந்தில் கலந்து கொண்டு குடித்துக் கும்மாளமிட்டு ஆடிய வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளன.

- குஜராத்தில் பயங்கரவாதிகளை என்கவுண்டரில் கொன்றதாகக் கூறி இசுலாமிய இளைஞர்களைப் பிடித்து நேருக்கு நேர் சுட்டுக் கொன்று, பெண்களைப் பாலியல் வன்முறைக்குப் பலியாகியிருக்கிறது, போலீசு அதிகாரிகளின் கும்பல். அதுமட்டுமல்ல; விருதுகளுக்காகவும் பதவி உயர்வுக்காகவும் ஆந்திரா, மராட்டியம், ராஜஸ்தான், குஜராத், உ.பி. மற்றும் தில்லி போலீசார், பயங்கரவாதிகள் - தீவிரவாதிகள் - கொள்ளையர்கள் - கிரிமினல் குற்றக் கும்பல்களுடன் மோதல் என்ற பெயரில் சிறைக் கைதிகளைப் பணத்துக்குப் பரிமாறிக் கொள்வதையும் ஒரு தொழிலாக்கிக் கொண்டுள்ளார்கள் என்ற உண்மையும் வெளியாகியுள்ளது.

— இப்படி பொதுவில் போலீசுக்காரர்கள், குறிப்பாக உயர் போலீசு அதிகாரிகள் புரியும் கிரிமினல் குற்ற வழக்குகள் பலவாகவும், நாளும் அதிகரித்தவாறும் இருந்த போதும், பெரும்பாலும் அவ்வழக்குகள் பதிவு செய்யப்

படுவதோ, விசாரணை மற்றும் தண்டனை எதுவும் வழங்கப்படுவதோ இல்லை. நாட்டின் சட்ட-நீதி அமைப்பு முழுவதும் அவர்கள் என்னதான் குற்றம் புரிந்தாலும், தண்டனையின்றித் தப்பித்துக் கொள்ளும் வகையிலே கட்டமைக்கப்பட்டுள்ளது.

முதலாவது, அரசு அதிகார வர்க்கத்தினர், பதவியிலிருக்கும் அரசியல்வாதிகள், போலீசு அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் கிரிமினல் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக அப்பட்டமாகத் தெரிய வந்தாலும், அரசாங்க அனுமதியின்றி அவர்கள் மீது வழக்குப் போட முடியாது. அரசியல்வாதிகள் மற்றும் அதிகார வர்க்கத்தினரைத் தகுந்த முறையில் ''கவனிப்பதன்'' மூலம் பல நூற்றுக் கணக்கான வழக்குகளிலும் அரசாங்க அனுமதி வழங்குவதை தடுத்து விசாரணை - தண்டனை இன்றி கிரிமினல் போலீசுக்காரர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள்.

இரண்டாவதாக, போலீசுக்காரர்கள் - இராணுவத்தினர் மீது வழக்குப் பதிவு செய்து, தண்டிக்கப்பட்டால், முறையே போலீசு மற்றும் இராணுவத்தினரின் தார்மீக பலம் குன்றிப் போய்விடும் என்று அவர்களின் உயரதிகாரிகள், ஆட்சியாளர்கள் மற்றும் அரசியல் - பண்டிதப் பெருச்சாளிகள் கூச்சல் போடுகிறார்கள். எனவே, என்னதான் கிரிமினல் குற்றம் புரிந்திருந்தாலும், போலீசுக் காரர்கள் தண்டிக்கப்படக் கூடாது என்பது பொது மரபாகவும் எழுதப்படாத விதியாகவும் பொது நிர்பந்தமாகவும் நிலைநாட்டப்பட்டுள்ளது.

மூன்றாவதாக, அரசியல்வாதிகள் - போலீசு - அதிகார வர்க்கத்தினரின் கிரிமினல் கூட்டைத் தகர்க்க வேண்டும்; போலீசுத் துறை சீர்திருத்தப்பட வேண்டும்; போலீசாரை கண்காணித்து நெறிப்படுத்த வேண்டும் என்று பல்வேறு ஆணையங்கள் (கமிஷன்கள்) பரிந்துரைத்தும், வெவ்வேறு அரசியல் கட்சிகளின் அரசாங்கங்கள் மத்தியிலும் மாநிலங்களிலும் அமைந்த போதும், இந்தப் பரிந்துரைகள் எதன் மீதும் நடவடிக்கை எடுக்க மறுத்து வருகின்றன.

நான்காவதாக, போலீசின் மனித உரிமை மீறல் குற்றங்களை விசாரித்து, பரிந்துரைகள் செய்யும் அமைப்புகளான தேசிய மனித உரிமை ஆணையம், பெண்களுக்கான தேசிய ஆணையம் மற்றும் சிறுபான்மையினருக்கான மனித உரிமை ஆணையம் போன்றவற்றை ஆட்சிக்கு வந்த எல்லா கட்சிகளின் அரசாங்கங்களும் திட்டமிட்டுப் புறக்கணித்து, செயலிழக்கச் செய்துவிட்டன. இந்தக் கமிசன்களின் வரம்புகளே பல் பிடுங்கப்பட்ட தன்மையோடுதான் வரையறுக்கப்பட்டுள்ளன. அதாவது, இந்தக் கமிசன்களின் விசாரணைக்கு போலீசுக்காரர்கள் ஒத்துழைக்க மறுத்தாலோ, குற்றங்கள் நிரூபிக்கப்பட்ட நிலையிலும் குற்றவாளிகளைத் தண்டிக்கவோ மேற்படி ஆணைகளுக்கு அதிகாரம் கிடையாது.

ஆக, சாதாரண (சிவிலியன்) குடிமக்கள் கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்டால் அவர்கள் மீது சட்டபூர்வமாகவோ, சட்ட விரோதமாகவோ எந்தவித நடவடிக்கை எடுக்கவும் (போலீசுடன் மோதல் என்ற பெயரில் சுட்டுக் கொல்லவும்) எல்லாவித உரிமையும் வசதி வாய்ப்பும் போலீசுக்கு உண்டு. ஆனால், போலீசு அதிகாரிகள் மோசமான கிரிமினல் குற்ற நடவடிக்கையில் ஈடுபட்டாலும் அவர்கள் மீது புகார் கொடுப்பது வழக்குப் பதிவு செய்வது உட்பட எந்தவித நடவடிக்கை மேற்கொள்வதற்கும் சாதாரண (சிவிலியன்) குடிமக்களுக்கு உரிமை கிடையாது. இதுதான் இந்த நாட்டின் சட்ட - நீதி அமைப்பு முறை.

எல்லாவற்றுக்கும் மேலாக, பயங்கரவாத, தீவிரவாத, சமூக விரோத, கிரிமினல் மஃபியா கும்பல் எதிர்ப்பு என்ற பெயரில், போலீசார் என்னதான் சட்ட விரோத கிரிமினல் நடவடிக்கையில் ஈடுபட்டாலும் எவ்வித கேள்வியும் எழுப்ப முடியாது; அப்படிப்பட்ட போலீசு கிரிமினல் குற்றவாளிகள் மாபெரும் வீரதீர நாயகர்களாகப் போற்றப்பட்டு, விருதுகளும் பதவி உயர்வுகளும் பெறுகிறார்கள்.

பஞ்சாபில் 1500-க்கும் மேற்பட்ட இளைஞர்களை சந்தேகப்படத்தக்க பயங்கரவாதிகள் என்று கருதி விசாரணை ஏதுமின்றி சுட்டுக் கொன்றான், அம்மாநில தலைமை போலீசு பொது இயக்குநர் கே.பி.எஸ்.கில். அவன் ஒரு பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரியை பொது நிகழ்ச்சியில் வைத்து மானபங்கம் செய்தபோதும், பஞ்சாபில் அவன் ஆற்றியதாகக் கூறப்பட்ட வீரதீர கதாநாயகத்தனத்துக்காக அவன் தண்டிக்கப்படவில்லை. குற்றம் நிரூபிக்கப்பட்டாலும் உச்சநீதிமன்றம் அவனுக்கு நன்னடத்தைக் கண்காணிப்புக் கால ''தண்டனை'' மட்டுமே விதித்து சுதந்திரமாகத் திரிய விட்டது.

ரத்தோர்கள், கில்கள் போன்ற உயர் போலீசு கிரிமினல்களின் குற்றங்களை, தண்டனையின்றி அவர்கள் தப்பித்துக் கொள்வதைப் பற்றி வெளிச்சம் போட்டுக் காட்டும் செய்தி ஊடக அறிவாளிகள், வக்கணையாகப் பேசும் அறிவுஜீவிகள், மனித உரிமைப் போராளிகள் - இவர்களில் அத்தனை பேரும் ஒரு குறிப்பிட்ட வரம்புக்கு மேல் தமது பார்வையைச் செலுத்த மறுக்கிறார்கள்.

● எந்தவொரு சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகள், நெருக்கடிகள் முற்றினாலும் ஒடுக்குமுறைச் சட்டங்களை மேலும் கடுமையாக்கி இரும்புக் கரங்கொண்டு ஒடுக்குவதற்காக போலீசுக்கு எல்லை இல்லாத அளவுக்கு அதிகாரங்கள் குவிக்கப்படுகிறது.

● இப்படிச் செய்யும்போது, தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தை சொந்த நலன்களுக்காக முறைகேடாகப் பயன்படுத்தி, அதற்கு எதிராக போலீசு மீது எந்தவித நடவடிக்கை மேற்கொள்வது, நீதிமன்றங்களிலேயே கூட முறையீடு செய்வது, போலீசு யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியம் - கட்டாயம் ஏதும் கிடையாது என்ற பாதுகாப்புக் கவசமளிக்கப்படுகிறது.

● இவ்வாறு வரம்பற்ற அதிகாரம் வழங்கப்படும் வகையிலாக சிறப்பான - சோதித்தறியப்பட்ட தனிச் சிறப்பான தகுதி ஏதும் போலீசுக்காரர்களுக்கு இருக்கிறதா? இந்த அதிகாரங்களைத் தமது சொந்த ஆதாயங்களுக்காக முறைகேடாக அவர்கள் பயன்படுத்த மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?

● **ஆர்.கே.**

# “நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் அனைத்தையும் அரசுடைமையாக்கு!” — பு.மா.இ.மு.வின் பிரச்சாரம்–ஆர்ப்பாட்டம்



கருப்புப் பட்டியலில் உள்ள தமிழகத்தின் 16 தனியார் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்ற மைய அரசின் அறிவிப்பைத் தொடர்ந்து, கல்விக் கொள்ளையர்களுக்கு எதிரான மாணவர்களின் போராட்டம் மீண்டும் குமுறி எழுந்து அடங்கியிருக்கிறது. தங்களது எதிர்கால வாழ்வு இருண்டு போயுள்ளதை அறிந்த மாணவர்கள், தலைநகர் சென்னை மட்டுமின்றி, தமிழகமெங்கும் தன்னெழுச்சியாகத் திரண்டு கல்லூரிகளின் நாற்காலி - மேசைகளை அடித்து நொறுக்கி தீயிட்டும், சாலை மறியல் போராட்டங்களில் ஈடுபட்டும் தமது குமுறலை வெளிப்படுத்தியுள்ளனர். பல்கலைக் கழகங்களுக்கு காலவரையற்ற விடுமுறை அளிக்கப்பட்டு, விடுதிகளிலிருந்து கட்டாயமாக மாணவர்கள் வெளியேற்றப்பட்டு போராட்டம் முடக்கப்பட்டுள்ளது.

நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களுக்கான வழிகாட்டல் குறித்து உச்சநீதி மன்றத்தில் வழக்குரைஞர் விபல் சர்மா தொடர்ந்த வழக்கை விசாரித்த உச்சநீதி மன்றம், இது குறித்து மைய அரசிடம் விளக்க அறிக்கை கேட்டது. அதனடிப்படையில் அமைக்கப்பட்ட பேராசிரியர் தாண்டன் கமிட்டி, நாட்டிலுள்ள 126 தனியார் பல்கலைக் கழகங்களில் 38 மட்டுமே விதிமுறைப்படி இயங்குகிறது; 44 பல்கலைக் கழகங்கள் சுமாராக உள்ளதால், இவற்றுக்கு மூன்றாண்டு அவகாசம் அளிக்கலாம்; எஞ்சியுள்ள 44 பல்கலைக் கழகங்கள் மிக மோசமானவை, அவற்றின் அங்கீகாரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று அறிக்கை சமர்பித்தது. மோசமான பல்கலைக் கழகங்களின் பட்டியலில், 16 பல்கலைக் கழகங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. மைய அமைச்சர் ஜெகத்ரட்சகனின் பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், திராவிடர் கழக வீரமணியின் பெரியார் - மணியம்மை விஞ்ஞான தொழில்நுட்பக் கழகம், (அ)நீதிக் கட்சியின் தலைவர் ஏ.சி.எஸ்.-இன் டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கழகம், சாதிக் கட்சி நடத்தும் டாக்டர் சேதுராமனின் மீனாட்சி பல்கலைக் கழகம் உள்ளிட்ட பல கருப்புப் பண கல்விக் கொள்ளையர்களின் நிறுவனங்களும் இதில் அடங்கும்.

அறுக்க மாட்டாதவன் கையில் ஆயிரம் கருக்கறுவாள் என்ற கதையாக, நாடெங்கிலும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களைக் கண்காணிக்க 51 அரசு நிறுவனங்கள் இருந்த போதிலும், அவை அனைத்தும் இந்த கொள்ளையையும் மோசடியையும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டுதான் நிற்கின்றன. உயர்கல்வி தொடர்பான அரசின் கொள்கையும் சட்டதிட்டங்களும் இவற்றை ஊக்குவிப்பதாகவே உள்ளன. கடந்த பத்தாண்டுகளில் பல்கலைக் கழக மானியக் குழுவும், மனிதவள மேம்பாட்டுத் துறையும் தனியார் கல்விக் கொள்ளைக்கு அனுமதி வழங்கிய வேகத்தைப் பார்த்தாலே, அவை இந்திய மாணவர்களின் நலனுக்கு எதிராக இருப்பதை அறிய முடியும். சட்ட விதிகளை வளைத்து தனியார் கல்விக் கொள்ளைக்கு கதவை அகலத் திறந்துவிடுவதைத் தவிர அரசிடம் வேறு கொள்கை இல்லை என்பது புரியும்.

தனியார் கல்வி நிறுவனங்கள் தொடங்குவது இந்திய அரசியலமைப்புச் சட்டம் குடிமகனுக்கு வழங்கியுள்ள உரிமை என்று ஏற்கெனவே தீர்ப்பளித்த உச்சநீதி மன்றம், இப்போது அளித்துள்ள இடைக்காலத் தீர்ப்பில், நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களின் கருத்தைக் கேட்டு இறுதி முடிவு எடுக்கலாம் என்று கூறி கல்விக் கொள்ளையர்களைக் காப்பாற்றியுள்ளது. மாணவர்கள் தங்கள் கல்வியை இதே கல்விக் கூடங்களில் தொடரலாம் என்றும், இக்கல்வி நிறுவனங்கள் நிகர்நிலைப் பல்கலைக் கழகத் தகுதி பெறும் முன் இணைக்கப்பட்டிருந்த பல்கலைக் கழகங்களின் பட்டங்கள் தற்போதைக்கு மாணவர்களுக்கு வழங்கப்படும் என்றும் மைய அரசு அறிவித்துள்ளது. கல்வி வியாபாரிகளின் பகற்கொள்ளையும் மோசடியும் வெட்ட வெளிச்சமான பின்னரும்,



அரசு இப்பகற்கொள்ளையர்கள் மீது எந்த நடவடிக்கை யும் எடுக்கவில்லை.

இவ்வளவுக்கும் பிறகும் வேறெந்த மாணவர் அமைப்பும் போராட முன்வராத நிலையில், ''பகற் கொள்ளையடிக்கும் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் அனைத்தையும் அரசுடைமையாக்கு! மைய அமைச்சர் ஜெகத்ரட்சகன், ஏ.சி.எஸ்., கி. வீரமணி முதலான கல் விக் கொள்ளையர்களைக் கைது செய்து சிறையிலடை! அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்! சூட்கே சுக்குச் சோரம்போன கல்வி அதிகாரிகள்-அமைச்சர் களைக் கைது செய்! தனியார்மய-தாராளமயக் கொள் கையை முறியடிக்க உழைக்கும் மக்களுடன் இணைந்து போராடுவோம்!'' என்ற முழக்கங்களுடன் கடந்த 27.1.10 அன்று சென்னை அரசு பொது மருத்துவமனை அருகே பு.மா.இ.மு. எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. கல்விக் கொள்ளையர்களுக்கும் தனியார்மயத்துக்கும் எதிராக நடந்த இந்த ஆர்ப்பாட்டம், மாணவர்களிட மும் பெற்றோர்களிடமும் புதிய நம்பிக்கையை விதைத் துள்ளது. கல்விக் கொள்ளையர்களுக்கு எதிராக பு.மா. இ.மு. தொடர்ந்து பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகி றது.

— பு.ஜ.செய்தியாளர்கள்



கோவையில்...



சென்னையில்...


சேலத்தில்...

# "நக்சல் எதிர்ப்பு நரவேட்டைப் போரை முறியடிப்போம்! மறுகாலனியாக்க எதிர்ப்புப் போரில் அணிவகுப்போம்!"

## – தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் சூறாவளிப் பிரச்சாரம்

''பழங்குடியினர் - மீனவர்கள் - விவசாயிகள் மீதான போர்தான், அரசு தொடுத்துள்ள நக்சல் ஒழிப் புப் போர்!'' என்ற மைய முழக்கத்துடன் பல்லாயிரக் கணக்கில் துண்டுப் பிரசுரங்கள், கொலைகார இந்திய ஆட்சியாளர் நடத்தும் காட்டுவேட்டை போரின் உள் நோக்கத்தைத் திரைகிழிக்கும் வெளியீடு, சுவரொட்டி கள் ஆகியவற்றுடன் பேருந்துகள்-இரயில்கள், ஆலை வாயில்கள், சந்தைகள், கடைவீதிகளில் பிரச்சாரம், தெருமுனைக்கூட்டங்கள், அதன் தொடர்ச்சியாக அரங் கக் கூட்டங்கள்,கலை நிகழ்ச்சிகள் - என தமிழகமெங் கும் ம.க.இ.க. வி.வி.மு. பு.மா.இ.மு. பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் கடந்த ஒரு மாத கால மாக வீச்சாகப் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின் றன. ஆளும் கும்பல் நடத்திவரும் காட்டுவேட்டை எனும் நக்சல் வேட்டையின் நோக்கத்தையும், மறுகா லனியாதிக்க எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெ டுத்துச் செல்ல வேண்டிய அவசியத்தையும் உணர்ந்து இப்பிரச்சார இயக்கத்தை வரவேற்று, உழைக்கும் மக்களும் ஜனநாயக சக்திகளும் உற்சாகத்துடன் நன் கொடை அளித்து ஆதரித்து வருகின்றனர்.

23.1.10 அன்று சென்னையிலும் 24.1.10 அன்று கோவை மற்றும் சேலத்திலும் இவ்வமைப்புகள் சார் பில் பல்வேறு ஜனநாயக சக்திகள்-அமைப்புகளை அணிதிரட்டி அரங்கக் கூட்டங்கள் நடைபெற்றன. தமிழ்நாடு வணிகர் சங்கப் பேரவைத் தலைவர் திரு. வெள்ளையன், மூத்த கல்வியாளர் தோழர் ச.சீ. இராசகோபாலன், மூத்த வழக்குரைஞர் தோழர் திருமலைராசன், கர்நாடக உயர்நீதி மன்ற வழக்கு ரைஞர் தோழர் பாலன், சென்னை உயர்நீதிமன்ற வழக் குரைஞர் திரு. அரங்க. சம்பத்குமார் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றி, இக்கொலைவெறி யாட்டப் போரை வீழ்த்த அணிதிரள வேண்டிய அவசி யத்தை விளக்கினர்.

இவ்வரங்கக் கூட்டங்களில் பல நூற்றுக்கணக்கில் புரட்சிகர-ஜனநாயக சக்திகள் திரண்டனர் என்றால், இப்பிரச்சார இயக்கம் நெடுகிலும் இப்புரட்சிகர அமைப்புகளின் தோழர்கள் சந்தித்த மக்களோ பல இலட்சம். நக்சல் எதிர்ப்பு நரவேட்டைப் போரை முறியடிக்கவும், மறுகாலனியாதிக்க எதிர்ப்புப் போரை முன்னெடுத்துச் செல்லவும் இப்பிரச்சார இயக்கம் தமிழக மக்களின் பேராதரவுடன் தொடர்ந்து முன்னேறி வருகிறது.

— பு.ஜ.செய்தியாளர்கள்



# ஒபாமா: கழுதையின் மூக்கு வெளுத்தது!

**பயங்கரவாதி புஷ்ஷுக்கும் 'ஜனநாயகவாதி' ஒபாமாவுக்கும் ஏகாதிபத்திய மேலாதிக்கக் கொள்கையில் வேறுபாடு கிடையாது.**

அமெரிக்காவின் அமைதிப் புறா, பொருளாதார நெருக்கடியிலிருந்து அமெரிக்காவை மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகையும் கடைத்தேற்ற வந்த ''மாற்றத்தின் நாயகன்'' , என்றெல்லாம் சித்தரிக்கப்பட்ட பாரக் ஒபாமா, அமெரிக்க அதிபராகப் பதவியேற்று ஓராண்டு முடிந்து விட்டது. அவர் அதிபர் பதவிக்குப் போட்டியிட்ட போதும், தேர்தலில் வெற்றி பெற்று அதிபராகப் பதவியேற்றபோதும் அமெரிக்க ஊடகங்கள் அவரைத் தலையில் வைத்துக் கொண்டாடின. ''ஆம், நம்மால் முடியும்!'' என்ற அவரது தேர்தல் முழக்கத்தை ஒட்டுமொத்த அமெரிக்காவும் ஜபித்தது.

அமெரிக்காவில் மட்டுமன்றி, இங்கேயும் சிலர் ஒபாமா காய்ச்சல் தலைக்கேறிச் சுற்றிக் கொண்டிருந்தனர். 'புரட்சிப் புயல்' வைகோ, ஒபாமாவைப் புகழ்ந்து ஒரு புத்தகத்தை எழுதி, அதனை அவரிடமே கொடுத்து கையெழுத்து வாங்கி வந்தார். முதலாளித்துவ ஊடகவியலாளர்களும், கருணாநிதியின் வாரிசு கனிமொழி முதல் தலித்திய எழுத்தாளர்கள் வரை அனைவரும், கருப்பின மக்களுக்காகப் போராடிய மார்டின் லூதர் கிங்கின் கனவு பலித்துவிட்டது - எனக் கூறிப் புளகாங்கிதம் அடைந்தனர். ஆப்கானில் அமெரிக்கப் படையை திரும்ப அழைப்பார், ஈராக் போரை முடித்து அந்நாடு சுதந்திரமடையச் செய்வார், பொருளாதாரச் சீரழிவில் அனைத்தையும் இழந்து தவித்துக் கொண்டிருந்த அமெரிக்கர்களைக் காப்பாற்றுவார் என பலரும் நம்பிக்கையூட்டினர்.




ஆனால் இன்று ஒரு வருடம் முடிந்த பின்பு, இந்த நம்பிக்கைகள் அனைத்தும் பொய்த்துப் போய்விட்டது. இவரைப் பற்றி அமெரிக்க பத்திரிக்கைகள் கேலிச்சித்திரம் போடாத நாளே கிடையாது என்கிற அளவுக்கு அவர் காரியக் கோமாளியாகிவிட்டார். ''ஆம், நம்மால் முடியும்!'' என்கிற இவரது மந்திரச் சொல் துவங்கி, இவர் வாயைத் திறந்து பேசும் ஒவ்வொரு வார்த்தையும் கேலி செய்யப்படுகிறது. சமீபத்தில் ''வாஷிங்டன் போஸ்ட்'' என்ற பத்திரிக்கை நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பில் முக்கால்வாசி அமெரிக்கர்கள் ஒபாமாவின் செயல்பாடுகளால் அதிருப்தியடைந்திருப்பது தெரியவந்துள்ளது. இதற்கு முன்பு எந்தவொரு அமெரிக்க அதிபரும் இவ்வளவு குறைவான மக்கள் ஆதரவைப் பெற்றதில்லை - ஜார்ஜ் புஷ்ஷைத் தவிர.

ஆப்கானில் செருப்படி வாங்கிக்கொண்டு புஷ் வெளியேறிய பின்னர், அதிபராகப் பதவியேற்றவுடன் ஒபாமா செய்த முதல் வேலை, ஆப்கானில் போரைத் தொடர்ந்து நடத்தப்போவதாக அறிவித்ததுதான். அது மட்டுமல்லாமல், ஆப்கானில் அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் உத்தரவிட்டார். ஆப்கான் போரைப் பாகிஸ்தான் வரை நீட்டித்துச் சென்றார்.

ஒபாமாவின் இந்த 'இமாலயச் சாதனையை'ப் பாராட்ட நினைத்த நோபல் கமிட்டியினர் அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசை வழங்கிக் கவுரவித்தனர். ''நீங்கள் இதுவரை செய்த செயல்களுக்காக இந்த நோபல் பரிசு தரப்படவில்லை, இனிமேல் செய்யப்போவதற்காக முன்கூட்டியே உங்களுக்கு இந்தப் பரிசைத் தருகிறோம்'' எனக் கூறினார்கள் நோபல் கமிட்டியினர். எதிர்காலத்தில் செய்யவிருக்கும் 'நல்ல' செயல்களுக்காக நோபல் பரிசு பெற்ற நபர், உலக வரலாற்றிலேயே ஒபாமா ஒருவராகத்தான் இருக்கக் கூடும்.

இப்படி உலகைக் காக்க வந்த ஒபாமாவின் அடுத்த பணி, சொந்த நாட்டு மக்களைக் காப்பது. பொருளாதாரச் சீரழிவில் சிக்கிய மக்களைக் காப்பாற்றுவதற்கு ஒபாமா கொண்டுவந்த தீர்வு ''பெயில் அவுட் பேக்கேஜ்''. வீடிழந்து, வேலையிழந்து, இதுவரை சம்பாதித்தது அனைத்தையும் இழந்து நடுத்தெருவில் நின்ற

ஆயிரக்கணக்கான அமெரிக்கர்களுக்கு ஒபாமா எதுவும் செய்யவில்லை. மாறாக, பொருளாதாரச் சீரழிவிற்குக் காரணமாக இருந்து, அதன் மூலம் பல லட்சம் கோடி களைக் கொள்ளையடித்த முதலாளிகளுக்கு ''பெயில் அவுட் பேக்கேஜ்'' என்ற பெயரில், மக்களின் வரிப் பணத்தை வாரிக் கொடுத்தார். வேலையிழப்பைத் தடுக் கப் போகிறேன்; ஒருவாரத்தில் பல லட்சம் வேலைகளை உருவாக்கப் போகிறேன் என ஒபாமா அளித்த வாக்கு றுதிகளெல்லாம் வெற்று வாய்ச் சவடால்களாகப் போய் விட்டன. வேலையிழப்பு அங்கே தொடர்கதையாகிவிட் டது. 2010-ஆம் வருடம் பிறந்தது முதல் இதுவரை 20 வங் கிகளுக்கு மேல் அமெரிக்காவில் திவாலாகிவிட்டன.

மருத்துவமனைகள் முற்றிலும் தனியார்மயமாகி விட்ட அமெரிக்காவில், மருத்துவத்துக்கு ஆகும் செல வுகள் மிக மிக அதிகம். மருத்துவக் காப்பீடு இல்லாமல் போனால் சாதாரண வியாதிக்கே கூட மக்கள் தங்களது சேமிப்பு முழுவதையும் இழக்க வேண்டிவரும். அமெ ரிக்காவில் மருத்துவக் காப்பீடு இல்லாத மக்களின் எண் ணிக்கை 4 கோடிக்கும் அதிகம். மருத்துவ வசதிகள் மறுக்கப்பட்டவர்களாக உள்ள இவர்களைக் காப்பாற்று கிறேன் என்ற பெயரில், மருத்துவநலச் சீர்திருத்த மசோதா ஒன்றை ஒபாமா கொண்டு வந்தார். இது 'உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞரின் காப்பீட்டுத் திட்டம்' போன்றதொரு மோசடித் திட்டம் என்பது வெகு சீக்கிரத்தில் அம்பலமாகி விட்டது.

இவ்வாறு தொடர்ந்து சரிந்து வந்த தனது பிம்பத்தை முட்டுக் கொடுத்து தூக்கி நிறுத்த ஒபாமா தேர்ந்தெடுத்த வழி - நமது முன்னாள் அரசவைக் கோமாளி அப்துல் கலாமின் வழி!; அது வேறொன்றும் இல்லை - நாடு முழுவதும் பள்ளிகளுக்குச் சென்று குழந்தைகளுடன் உரையாடுவது, அவர்களுக்கு அறிவுரை சொல்வது. ஆனால் ஒபாமாவின் அறிவுரைகளை ஆரம்பத்தில் பொறுத்துக்கொண்ட மாணவர்கள், இப்போது ஒபாமா பேசுகிறார் என்றாலே ஓடி ஒளிந்து கொள்ள ஆரம்பித்து விட்டனர். இதற்கிடையே, இஸ்லாமியர்களின் ஆதர வைப் பெற அவர்களுக்குக் கரிசனமாகப் பேசுவது, குரா னிலிருந்து வாசகங்களைப் பயன்படுத்துவது எனப் பல






வேலைகளைச் செய்து பார்த்தார். ஆனால், அவை யாவும் பலிக்காமல் போய்விட்டன.

இவற்றின் எதிரொலியாக அண்மையில் மாசாசூட்ஸ் -இல் நடந்த செனட்டருக்கான இடைத்தேர்தலில் ஒபாமா கட்சி படுதோல்வியடைந்தது. அதிகம் அறிமு கமில்லாத குடியரசுக் கட்சியின் வேட்பாளர் பெற்றுள்ள அமோக வெற்றி, ''இது நம்ம ஆளு!'' என்று ஒபா மாவை ஆதரித்து நின்றவர்களின் முகத்தில் கரியைப் பூசி யுள்ளது.

அண்மையில் ஹெய்தி நாட்டில் ஏற்பட்ட நிலநடுக் கப் பேரழிவால் பல்லாயிரக்கணக்கான கருப்பின மக் கள் கொல்லப்பட்டு, பலர் படுகாயமடைந்து தத்தளித் துக் கொண்டிருந்த போது, அருகிலுள்ள அமெரிக்க ஒபாமா அரசு உடனடியாக உதவ முன்வரவில்லை. வெகுதொலைவில் உள்ள ஐஸ்லாந்து நாடுதான் உடன டியாக வந்து உதவியது. இப்போது ஆக்கிரமிப்பு நோக் கத்துடன் அமெரிக்கத் துருப்புகள் அந்நாட்டில் நிவாரண உதவி என்ற பெயரில் குவிக்கப்பட்டுள்ளன.

ஒபாமா செய்த ஒரே நல்ல காரியம், ஒடுக்கப்பட்ட இனத்தின் அரசியல்வாதியால் ஏகாதிபத்தியத்தின் கோர முகத்தை மாற்றியமைத்துவிட முடியாது, அதன் தன் மையை தனிமனிதரின் ஆளுமை மயிரளவும் மாற்றி விடாது என்பதை நிரூபித்துக் காட்டியதுதான். ஒரு அரசி யல் தலைவர், எந்த வர்க்கத்துக்குச் சேவை செய்கிறார், அவர் எந்த வர்க்கத்தின் அரசியல் பிரதிநிதி என்று பரி சீலிக்காமல், சாதி-மத-இன அடைப்படையில் பிழைப் புவாதத்துடன் ஆதரிப்பது எவ்வளவு பெரிய முட்டாள் தனம் என்பதை ஒபாமா எதிர்மறையில் நிரூபித்துக் காட்டிவிட்டார். கடந்த ஓராண்டில் ஒபாமாவின் நிலைப்பாடும், செயல்பாடும் புஷ் காலத்திய செயல் பாடுகளிலிருந்து வேறுபடவில்லை. அமெரிக்க அதிப ராக புஷ் இருந்திருந்தால் அவர் என்னவெல்லாம் செய் திருப்பாரோ, அதையேதான் ஒபாமாவும் செய்துள்ளார். தலித்தியத் தலைவி மாயாவதியைப் போல, ஆளும் வர்க்கங்களுக்குச் சேவை செய்து தனது முகத்திரையை வெகுவிரைவிலேயே கிழித்துக் கொண்ட கருப்பின அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு நாம் நன்றி சொல்லத் தான் வேண்டும்.

● மணி

### பாக்ராம்:

# அமெரிக்கப் பயங்கரவாதத்தின் புதிய கொலைகார முகம்

**அமெரிக்காவின் பயங்கரவாத இரகசிய சிறைக் கொடுமைகள் அடுத்தடுத்து அம்பலமாகி வருகின்றன.**

அரசு பயங்கரவாதம் கொடியது. அதிலும் உலகப் பொது எதிரியான அமெரிக்க அரசு பயங்கரவாதம் மிகக் கொடியது. கியூபா எல்லையை ஒட்டியுள்ள குவாண்டனோமோ சிறை, ஈராக்கின் அபு கிரைப் சிறை, அமெரிக்கப் போர்க் கப்பல்கள் என்ற பெயரில் உள்ள 'மிதக்கும் சிறைச்சாலைகள்' முதலானவற்றில் தொடரும் காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைகளும் இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமைகளும் அடுத்தடுத்து அம்பலமாகி அமெரிக்கப் பயங்கரவாதம் உலகெங்கும் காறி உமிழப்படுகிறது. இவையும் போதாதென்று, இப்போது ஆப்கானில் பாக்ராம் எனுமிடத்தில் இன்னுமொரு கொடிய இரகசிய சிறைச்சாலையை அமெரிக்கா நடத்திவரும் உண்மையும், அங்கு நடக்கும் கொடுமையும் மெதுவாகக் கசியத் தொடங்கியுள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்த ஆஃபியா சித்திகி என்ற பெண் மருத்துவரை உங்களுக்கு நினைவிருக்கிறதா? அவர் அமெரிக்காவில் நரம்பியல் துறையில் மருத்துவ உயர் கல்வி கற்றவர். அமெரிக்காவிலிருந்து திரும்பிய அவர் 2003-ஆம் ஆண்டில் அமெரிக்க உளவுப் படையினரால் கடத்திச் செல்லப்பட்டு, ஆப்கானில் உள்ள பாக்ராம் இரகசிய சிறையில் அடைக்கப்பட்டு, அமெரிக்க ஆக்கிரமிப்பு பயங்கரவாதப் படையினரால் ஐந்தாண்டுகளுக்கும் மேலாக கொடூரமாக வதைக்கப்பட்டார். (பார்க்க: புதிய ஜனநாயகம், செப். 2008).

பாக்ராம் இரகசிய சிறைக் கொடுமைகளை எதிர்த்து, அமெரிக்க அதிபர் மாளிகை அருகே மனித உரிமை அமைப்பினர் நடத்தும் ஆர்ப்பாட்டம்.




ஆஃபியா சித்திகி வதைக்கப்பட்ட பாக்ராம் இரகசிய சிறையானது, குவாண்டனோமோ சிறையைவிட இரு மடங்கு பெரியது. இது ஆப்கானின் தலைநகரான காபூலுக்கு வடகிழக்கே 49 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. விமானத் தளம் என்று வெளியுலகுக்குக் காட்டப்படும் பாக்ராமிலுள்ள இரகசிய சிறைச்சாலை, மிகக் கொடிய பயங்கரவாத சித்திரவதைக் கூடம். அமெரிக்க கொலைகார உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வினால் சட்டவிரோதமாக இயக்கப்படும் மிகக் கொடிய இச்சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு வதைக்கப்படும் கைதிகளின் எண்ணிக்கை அரசாங்க இரகசியமாகப் பாதுகாக்கப்படுகிறது. கடந்த 2002 முதல் இந்த சிறையில் ஏறத்தாழ 2000-க்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன.

பயங்கரவாதக் குற்றம் சாட்டி யேமன், துனிசியா மற்றும் ஆப்கான் நாட்டவரைக் கைது செய்து, பாக்ராம் கொடுஞ்சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகக் கூறி நான்கு ஆட்கொணர்வு வழக்குகள் அமெரிக்காவில் தொடுக்கப்பட்டுள்ளன. இவர்கள் பாகிஸ்தான், தாய்லாந்து, ஐக்கிய அரபு அமீரகக் குடியரசு, பின்னர் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் அமெரிக்க உளவுப் படையினரால் அடைத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர். இந்த வழக்குகள் தவிர சி.ஐ.ஏ.வினால் கடத்திச் செல்லப்பட்ட கைதிகளின் நிலையை அறிவிக்கக் கோரி அமெரிக்காவில் மேலும் இரு ஆட்கொணர்வு வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. இதன் பிறகே, பாக்ராம் இரகசிய சிறை பற்றியும் அங்கு நடக்கும் கொடுமைகள் பற்றியும் செய்திகள் வெளிவரத் தொடங்கின.

அல் காய்தா, தாலிபான் தீவிரவாதி என்று முத்திரை குத்தப்பட்டோ, அல்லது பயங்கரவாதி என்ற சந்தேகத்தின் பேரிலோ கைது செய்யப்படுபவர்கள் அமெரிக்கச் சிறைகளில் அடைக்கப்படுவதில்லை. நீதி மன்றங்களிலும் முன்னிறுத்தப்படுவதில்லை. அவர்கள் பாக்ராம் சிறைகளில் அடைக்கப்படுகின்றனர். பத்திரிகையாளர்களோ வழக்குரைஞர்களோ இங்கு அனுமதிக்கப்படுவதுமில்லை. பாக்

ராம் சிறையில் அனைத்துலக மனித உரிமை விதிகளுக்கு எதிராக குழந்தைக ளும் சிறுவர்களும் கூட அடைத்து வைத்து வதைக்கப்பட்டு வருகின்றனர். முகம் தெரியாத, பெயர் தெரியாத கைதிகள் ஆண்டுக் கணக்கில் அச்சிறையில் வதை படுகின்றனர்.

பாக்ராம் சிறையில் அடைக்கப்பட் டுள்ள கைதிகளின் எண்ணிக்கை எவ்வள வு, கைதிகளின் பெயர்கள் என்ன என்ற எந்த விவரமும் யாருக்கும் தெரியாது. இத னால் எந்த வழக்குரைஞரும் கைதிகளின் சார்பாக ஆஜராக முடிவதில்லை. அமெ ரிக்க குடியுரிமைக் கழகம் (ஏ.சி.எல்.யு.) பாக்ராம் சிறைக் கொடுமை பற்றியும் அங் குள்ள கைதிகளின் விவரங்களைக்கேட் டும் 'சுதந்திர தகவல் அறியும் சட்டத்தின்' கீழ் மனு செய்து கோரியது. அக்கோரிக் கையை அமெரிக்க நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. இந்த இரகசிய சிறைச்சாலை பற்றியும் அங்கு நடக்கும் கொடுமைகள் பற்றியும் எந்த விவரமும் வெளிவராமல் அமெரிக்க வல்லரசு திட்டமிட்டு தடுத்து வருகிறது. உலகின் பல்வேறு நாடுகளது மனித உரிமை அமைப்புகள், ஆப்கான் அதிபர் கர்சாய் மற்றும் அந்நாட் டின் சுதந்திர மனித உரிமைக் கமிசன் ஆகியவற்றுடன் பலமுறை தொடர்பு கொண்டு கைதிகள் பற்றி விசாரித்த போதிலும், இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை.



அமெரிக்கப் பயங்கரவாத வதைமுகாம்: விமானத்தளம் என்ற பெயரில் இயக்கப்படும் பாக்ராம் இரகசிய சிறைச்சாலை.

குவாண்டனோமோ சிறைக் கொடுமையை ஒப்பிடும் போது, பாக்ராம் சிறை மிகக் கொடியது. 2002-ஆம் ஆண் டில் பாக்ராம் சிறையிலிருந்து குவாண்டனோமோ சிறைக்கு மாற்றப்பட்ட ஓமர் டேஹயஸ் என்ற கைதி, ''இரவு முழுவதும் சித்திரவதையால் அவதிப்படும் கைதிகளின் மரண ஓலம் அந்த சிறையெங்கும் எதிரொ லிக்கும்'' என்று கூறுகிறார். பத்திரிகையாளர்கள் முன் அவர் அச்சிறைக் கொடுமைகளை விவரிக்கும்போதே, அவரது உடல் அச்சத்தால் நடுங்குகிறது.

ஆடைகளை உரித்து அம்மணமாக்குவது, அம்மண நிலையிலேயே சித்திரவதை செய்வது, நிரந்தரமாக சங் கிலியால் பிணைத்து வைப்பது, பேரொலியைத் தொடர்ந்து எழுப்பி செவிடாக்குவது, தொடந்து மன உளைச்சலை ஏற்படுத்துவது, கைகளைக் கட்டிவிட்டு ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சி கண்களைக் கூசவைத்து குருடாக்குவது, தனிமைச் சிறையில் நிரந்தரமாக அடைத்து வைப்பது, நாய்களை ஏவி அச்சுறுத்துவது, முஸ்லிம்களின் மத அடையாளமாகக் கருதப்படும் தாடி யைச் சிரைத்து அவமானப்படுத்துவது, கொளுத்தும் வெய்யிலில் அம்மணமாக சுடுமணலில் தள்ளி வதைப் பது, பெண் கைதிகள் மீது பாலியல் வன்முறையை ஏவுவது, சிறையிலுள்ள மலக்குழியில் அம்மணமாக கைதிகளைத் தள்ளி வதைப்பது - என அங்கு நடக்கும் கொடுமைகளைக் கேட்டால் முதுகெலும்பே சில்லிட் டுப் போகும்.

குவாண்டனோமோ சிறைக் கொடுமைகள் பற்றிய செய்திகள் மெதுவாகக் கசியத் தொடங்கியதும், அங்கு படிப்படியாக கைதிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட் டது. ஜனவரி 22-ஆம் தேதி முதலாக குவாண்ட னோமோ சிறை மூடப்படும் என்று ஒபாமா அரசு அறி வித்துள்ளது. அதேசமயம், ஒதுக்குப்புறமாக ஆப்கானில் அமைந்துள்ள பாக்ராம் இரகசிய சிறையில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு, சித்திரவதையும் கேள் விமுறையின்றி நடக்கிறது. குவாண்டனோமோ சிறையை மூடப்போவதாக வாக்குறுதி அளித்து ஆட் சிக்கு வந்த ஒபாமா, பாக்ராம் சிறையை விரிவுபடுத்த ஏறத்தாழ 2500 கோடிரூபாய் ஒதுக்கியுள்ளார்.

பயங்கரவாதி புஷ்ஷுக்கும் 'ஜனநாயகவாதி' ஒபாமா வுக்கும் உலக மேலாதிக்கக் கொள்கையில் எவ்வித வேறுபாடும் கிடையாது. இப்போது மேலும் அதிகமான அமெரிக்கப் படைகள் ஆப்கானில் குவிக்கப்பட்டுவரும் நிலையில், பாக்ராம் சிறையில் கைதிகளின் எண்ணிக் கையும், கேள்விமுறையற்ற சித்திரவதைகளும் தீவிரமா கும் என்பதையே காட்டுகின்றன. ''குவாண்ட னோமோ, அபு கிரைப் சிறைச்சாலைகள் மட்டுமல்ல, பாக்ராம் சிறையும் இன்னும் இரகசியமாக இயக்கப்பட் டுவரும் பல்வேறு சிறைச்சாலைகளும் மூடப்பட வேண் டும்; ஆக்கிரமிப்பு வெறிபிடித்த அமெரிக்கா இந்நாடு களிலிருந்து வெளியேற வேண்டும்'' என்ற கோரிக்கை யுடன் பல்வேறு அமைப்புகள் போராட்டங்களை நடத்தி வருகின்றன. இனியும் தனது கொலைகார கோர முகத்தை மறைத்துக் கொள்ள முடியாதபடி, நாகரிக உல கின் காட்டுமிராண்டியான அமெரிக்காவின் பயங்கரவா தம் அடுத்தடுத்து அம்பலமாகி வருகிறது. அமெரிக்க மேலாதிக்கப் பயங்கரவாதிகளை சவக்குழியில் தள்ளிப் புதைக்கும் மகத்தான பணியை, அனைத்துலக உழைக் கும் மக்கள் நிறைவேற்ற வேண்டியதுதான் இனி பாக் கியிருக்கிறது.

● குமார்

# பணமூட்டைகள் உருவாக்கும் செய்திகள்

## பணத்துக்காக 'செய்திகளை' உருவாக்கும் அளவுக்கு முதலாளித்துவ இதழியல் சீரழிந்து விட்டது.

மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதாகவும், இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் ''நான்காவது தூணாக''ச் செயல்படுவதாகவும் செய்தி ஊடகங்களைப் பெருமையாகக் குறிப்பிடுகின்றனர். எனினும், இன்று அவற்றின் நிலைமையோ, அத்தகைய முதலாளித்துவ செய்தி ஊடகங்களில் பணியாற்றி வருபவர்களால் கூட சகிக்க முடியாத அளவிற்கு போய் விட்டது.

புரட்சிகர இயக்கங்கள் நடத்தும் மக்கள் திரள் போராட்டங்கள் ஒன்றைக்கூட வெளியிடாது இருட்டடிப்பு செய்யும் பத்திரிக்கைகள், சு.சாமி போன்ற அரசியல் தரகர்கள் உளறிக் கொட்டுவதையெல்லாம் நான்கு பத்தி செய்தியாக்குகின்றன. சினிமாக் கழிசடைகளிடமிருந்தும், சின்ன எம்.ஜி.ஆர். போன்ற திடீர்ப் பணக்காரர்களிடமிருந்தும் 'கவர்' வாங்கிக் கொண்டு செய்திகளை உற்பத்தி செய்கின்றன. இலங்கைத் தூதர் அம்சாவிடம் சீமைச் சாராயம் முதல் தங்கச் சங்கிலி வரை பெற்றுக்கொண்டு, சிங்களப் பேரினவாதத்தின் ஊது குழலாகச் சில தமிழ்ப் பத்திரிக்கைகள் செயல்பட்டன.

தமிழகம் மட்டுமல்ல; நாடெங்கும் முதலாளித்துவப் பத்திரிக்கைகள் இவ்வாறு செய்திகளைத் திட்டமிட்டுத் தயாரித்து மக்களிடையே பொதுக்கருத்தை உருவாக்குகின்றன. கடந்த ஆண்டு அக்டோபரில் மராட்டிய மாநில சட்டமன்றத் தேர்தலையொட்டி அங்குள்ள பத்திரிக்கைகளில் வெளிவந்த செய்திகளை அலசி ஆராய்ந்திருக்கும் பிரபல பத்திரிக்கையாளரான சாய்நாத், காங்கிரசுக் கட்சிக்கும் பத்திரிக்கைகளுக்கும் இடையில் நடந்த திரைமறைவு பேரங்களை அண்மையில் அம்பலப்படுத்தியுள்ளார்.




''பணம் வாங்கிய இந்தியச் செய்தி'' நாளேட்டைப் படிக்கும் காங்கிரசுப் பெருச்சாளி: பணமூட்டைகள் உருவாக்கும் செய்திகளை அம்பலப்படுத்தி வெளியான கருத்துப்படம்.

அந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரசு கட்சியின் அசோக் சவான், மீண்டும் முதலமைச்சரானார். தேர்தல் பிரச்சாரத்தின்போது அவருக்கு பெரிய அளவில் பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்யப்பட்டு வந்தது.

''லோக்மத்'' எனும் மராத்தி தினசரியில் சிறப்பு செய்தியாளர் பெயரில், தலைப்பு செய்தியாக 'ஆற்றல்மிக்க இளம் தலைவர் அசோக்ராவ் சவான்' என்ற செய்தி, மிகக் குறுகிய காலத்தில் ஏகப்பட்ட சாதனைகளைப் புரிந்துள்ள முதல்வரென சவானைப் பாராட்டி மகிழ்ந்தது. இதே செய்தி ஒருவரி கூட மாறாமல் ''மகாராஷ்டிரா டைம்ஸ்''-இலும் வந்தது. ஒரே மாதிரி இரண்டு பேர் சிந்திக்கக் கூடாதா என்ன? இதே செய்தி மூன்று நாட்களுக்கு முன்னர், தலைப்பை மட்டும் மாற்றிக் கொண்டு மராத்தி தினசரி ''புதாரி''யில் ஆசிரியர் பெயரில் வந்தது. ஆசிரியர் பெயரில்லாமல் வந்த மகாராஷ்டிரா டைம்சில் விளம்பரம் என்ற வார்த்தையே இல்லை. இவ்வாறு விளம்பரமே செய்தி எனும் பெயரில் அப்பட்டமாக வருவதை 'கவரேஜ் இதழியல்' (கவரில் பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது) என்று அழைக்கின்றனர்.

மராட்டிய தேர்தல் செய்திகளை ''இந்து'' நாளேடு ஆய்வு செய்தபோது, சவானைப் பற்றி 47 பக்க செய்திகள் லோக்மத் செய்தித்தாளின் வெவ்வேறு பதிப்புகளில் வந்துள்ள விவரம் தெரியவந்தது. செப்டம்பர் 10-ஆம் தேதியன்று 'அசோக பர்வம்' எனும் பெயரில் நான்கு பக்க இணைப்பு ஒன்றை லோக்மத் வழங்கியது. வாக்குபதிவு நாளான அக்டோபர் 13-ஆம் தேதி வரை தினமும் வந்த இந்த இலவச இணைப்புக்கு 'விகாஸ் பர்வம்' (முன்னேற்றத்தின் காலகட்டம்) என்று தலைப்பிட்டு, மராட்டிய மாநிலம், காங்கிரஸ் ஆட்சியின் கீழ் அடைந்த முன்னேற்றத்தை தினமும் 'செய்தி'யாக்கியது.

நந்தேடு மாவட்டத்தின் போகோர் சட்டமன்ற தொகுதியில் ஒரு இலட்

சம் வாக்குகள் வித்தியாசத்தில் சுயேச்சை வேட்பாளரை சவான் வென்றார். தனது தேர்தல் விளம்பரச் செலவாக மொத்தம் ரூ. 11,379 மட்டும்தான் செலவிடப்பட்டதாக அவர் தேர்தல் கமிசனில் கணக்குக் காட்டியிருக்கிறார்.

பத்திரிக்கையில் வெறும் ஆறு விளம்பரங்கள் மட்டுமே அவர் வெளியிட்டதாகவும், அதற்கான செலவு ரூ. 5,379 என்றும், கேபிள் டிவியில் விளம்பரம் தந்ததற்கு மீதித் தொகை செலவானதாகவும் அவரின் 'கணக்கு' சொல்கிறது. அந்த பத்திரிகை விளம்பரங்களும் நந்தேடில் இருந்து வரும் மிகச் சிறிய நாளேடான ''சத்திய பிரபா''வுக்கு மட்டும் தரப்பட்டதாகச் சொல்கிறது, கணக்கு.

ஆனால், பெரிய பத்திரிக்கைகளில் 'முக்கிய செய்தியாக' வந்த விளம்பரங்களுக்கு உண்மையில் பல கோடி ரூபாய் செலவாகியிருக்கும். லோக்மத் பத்திரிக்கையின் 13 பதிப்புகளிலும் நான்கு பக்க வண்ண இலவச இணைப்பு தர வேண்டுமானால் சந்தை நிலவரப்படி 1.5 கோடியிலிருந்து 2 கோடி வரை செலவாகியிருக்கும் என பத்திரிக்கைத் துறையை சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

சவானுக்காக இந்த இலவச 'செய்தி'ச் சேவையை செய்ய உதவியவர், காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ராஜேந்திர தர்தா. ஏற்கெனவே, சவான் அமைச்சரவையில் உள்துறை அமைச்சராக இருந்த இவர், லோக்மத் பத்திரிக்கையின் பங்குதாரரும் கூட.

பணத்தை வாங்கிக் கொண்டு 'செய்தி' வெளியிடுவதைப் பற்றி தேர்தலுக்கு பின்னர் விவாதங்கள் நடைபெற்றன. சில பத்திரிகையாளர்கள் அவ்வப்போது கவர் வாங்கி செய்து வந்த ஈனத்தனமான செயலானது, விளம்பரத்தைச் செய்தியாக வெளியிடுவதன் மூலம் பல கோடி ஊழலாக வளர்ந்திருப்பது தெரிய வந்துள்ளது.

பத்திரிக்கைகளில் விளம்பரக் கட்டணம் எவ்வளவென்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆனால் 'செய்திக் கட்டுரை' எனும் பெயரில் வரும் செய்திக்கு கட்டணம் எவ்வளவு? ஒவ்வொரு செய்தியும் நம்பத்தக்கதா, அல்லது பணப் பரிவர்த்தனையால் உருவாக்கப்பட்டதா - என வாசகர்களிடையே சந்தேகங்கள் எழத் தொடங்கிவிட்டன. சவான் போன்றவர்கள் கொடுக்கும் தேர்தல் செலவுக் கணக்குகளின் நம்பகத்தன்மையும் தேர்தல் கமிசனுக்குத் தெளிவாகவே தெரியும். பல கோடி ரூபாய் மதிப்பிலான 'செய்திக் கட்டுரை'யை உருவாக்கிய சவான், மொத்தமே ரூ. 7 லட்சத்துக்கும் குறைவாகத்தான் தேர்தலில் செலவு செய்திருக்கிறார் (!) என்பதையும் அந்தக் கமிசன் நம்பித்தான் ஆகவேண்டும். (சட்ட மன்ற தேர்தலில் ஒரு வேட்பாளரின் அதிகபட்ச செலவு பத்து லட்ச ரூபாய்க்குள் இருக்க வேண்டும் என்பது தேர்தல் கமிசனின் விதி.)

இந்தச் செய்தி விளம்பர மோசடி, அம்மாநிலத்தின் சி.பி.எம். அணியினர் தாக்கல் செய்த தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு மூலமும், இந்து பத்திரிக்கை நடத்திய ஆய்வின் மூலமும் வெளிவந்துள்ளது. இருப்பினும், விளம்பரம் எனும் வார்த்தை இடம் பெறாததால் 'செய்தி விளம்பரமும்' சட்டப்படி செய்திதான் என்பதால், இக்குற்றத்தை நிரூபிக்கவும் முடியாது.

இந்தியா முழுவதும் செய்திகளை இவ்வாறுதான் முதலாளித்துவ ஊடகங்கள் உருவாக்குகின்றன. தொலைக்காட்சி, பத்திரிக்கை என அனைத்தையும் மாறன் சகோதரர்கள், ஆந்திர ரெட்டிகள் போன்ற திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகள் கட்டுப்படுத்துகின்றனர். இவர்கள் உருவாக்குவதுதான் செய்தியாக மக்களிடம் திணிக்கப்படுகிறது.


''கவர்'' வாங்கிக் கொண்டு, முதல்வர் சவானைத் துதிபாடி
ஒரே விளம்பரத்தை ''செய்தி'' என்ற பெயரில்,
வெவ்வேறு மராத்தி பத்திரிகைகள் வெளியிட்டுள்ளதற்கான ஆதாரம்.

அரியானா முதல்வரான பூபிந்தர்சிங் ஹூடா, ''எனது மாநிலத்தின் பிரபல நாளேடு எதிர்த்தரப்பினரிடம் கவர் வாங்கிக் கொண்டு தொடர்ந்து எனக்கெதிராகப் பொய்ச் செய்திகளை வெளியிட்டு வந்தது. உங்களுக்கு வேண்டுமானால் பணம் தருகிறேன், தயவுசெய்து உண்மைகளை வெளியிடுங்கள் என்று நான் அப்பத்திரிகை அதிபரிடம் கூறிய பிறகே அதை நிறுத்தினர்'' என்கிறார். மகாராஷ்டிர காங்கிரசு செய்தித் தொடர்பாளரான உசைன் தல்வாய், ''நீங்கள் பணம் கொடுக்காவிட்டால் எந்தச் செய்தியும் வெளிவராது'' என்று உண்மையைப் போட்டு உடைக்கிறார். ஆந்திராவின் நலகொண்டாவைச் சேர்ந்த வலது கம்யூனிஸ்டு பிரமுகரான சுதாகர் ரெட்டி, ''செய்தி வெளியிட விளம்பரம் தருமாறு பத்திரிகைகள் பேரம் நடத்தின. எனது நண்பர்கள் சிலர் விளம்பரம் கொடுத்த பின்னரே சில செய்திகள் வந்தன'' என்கிறார். வாராங்கல்லைச் சேர்ந்த லோக்சத்தா கட்சியின் பிரமுகரான கோதண்டராம ராவ், ''நான் ரூ. 50,000 கொடுத்த பிறகே ஈநாடு நாளேட்டில் என்னைப் பற்றிய மூன்றரைப் பக்க செய்தி வெளியிடப்பட்டது'' என்கிறார். கிழக்கு டெல்லியின் காங்கிரசு எம்.பி.யான சந்தீப் தீக்ஷித் ''ஒரு பிரபல தொலைக்காட்சி நிறுவனத்தினர், ராகுல் காந்தி எனது

தொகுதியில் நடத்தும் தேர்தல் பிரச்சாரத்தை ஒன்றரை மணி நேரம் நேரடி ஒளிபரப்பு செய்ய இரண்டரை லட்ச ரூபாய் கேட்டனர்'' என்கிறார்.

பணமூட்டைகளால் உருவாக்கப்படும் செய்திகளைப் பற்றி சாய்நாத் அம்பலப்படுத்தியதைத் தொடர்ந்து, பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தினர் இது போன்ற கவர் பண்ணும் செய்திகளை வெளியிடக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். 50 ஆண்டு காலம் பத்திரிக்கை துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற மராத்திய பத்திரிகையாளர் கோவிந்த் தல்வால்கர் ''மையப் புலனாய்வுத் துறை விசாரிக்க வேண்டிய மிகப் பெரிய ஊழல் இது. என்னுடைய நீண்ட பணிக் காலத்தில் இதழியல் இந்தளவுக்குத் தரம் தாழ்ந்து போனது கிடையாது'' என மனம் நொந்து இந்து பத்திரிகையில் எழுதுகிறார். ''இது, பத்திரிகையாளர்களின் யோக்கியதைக்கே பெரும் அச்சுறுத்தும் அபாயமாக மாறி விட்டது. பத்திரிகைகளில் வெளியாகும் ஒவ்வொரு வார்த்தையும் பணத்தால் ஏலம் விடப்படுகிறது'' என்று பல பிரபல பத்திரிகையாளர் குமுறுகின்றனர். உண்மைதான். இதுவரை பெயரளவில் நிலவி வந்த நேர்மையும் ஒழுக்கமும் கைகழுவப்பட்டு, எப்படி வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம் என்ற ஏகாதிபத்திய - மறுகாலனியாதிக்கப் பிழைப்புவாதப் பண்பாடு சமுதாயத்தில் புரையோடிப்போய்க் கிடக்கிறது. இதற்கு முதலாளித்துவ பத்திரிகைகளும் அதன் செய்தியாளர்களும் விதிவிலக்கில்லை.

பணமூட்டைகளும் திடீர்ப்பணக்கார அரசியல் ரவுடிகளும் அரசு பயங்கரவாத போலீசும் உருவாக்கும் இத்தகைய பொய்ச்செய்திகளை அம்பலப்படுத்துவது மட்டுமல்ல; இதற்கு அடித்தளமாக உள்ள இன்றைய மறுகாலனியாதிக்க அரசியல்-சமூகக் கட்டமைவைத் தகர்ப்பதும்தான் இன்றைய உடனடித் தேவையாக உள்ளது.

● கதிர்

# கொத்தடிமைத்தனத்திற்கு எதிராகக் குமுறி எழும் தொழிலாளர் போராட்டம்

புதுச்சேரி - தட்டாஞ்சாவடி தொழிற்பேட்டையில் கடந்த 40 ஆண்டுகளாக லியோ பாஸ்ட்னர்ஸ் எனும் போல்ட்-நட் தயாரிக்கும் ஆலை இயங்கி வருகிறது. ஐந்தாண்டுகளுக்கொரு முறை அரசின் சலுகைகள்-மானியங்களைப் பெறுவதற்காக நிறுவனத்தின் பெயரை வெவ்வேறு பெயர்களில் மாற்றிக் கொண்டு மக்களின் வரிப்பணத்தை விழுங்கிவரும் இந்நிறுவனம், தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக நசுக்கியும் சுரண்டியும் கொழுத்து விரிவடைந்துள்ளது. இங்கு பணியாற்றும் தொழிலாளிகளுக்கு பணிநிரந்தரமோ, சட்டபூர்வ தொழிற்சங்க உரிமைகளோ கிடையாது. 1993 மற்றும் 1996-ஆம் ஆண்டுகளில் தொழிற்சங்கம் அமைக்க முயற்சித்த 'குற்ற'த்துக்காகவும், நிர்வாகத்தின் அடக்குமுறையை எதிர்த்துக் கேட்டதற்காகவும் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். குமுறிக் கொண்டிருந்த தொழிலாளர்கள், பு.ஜ.தொ.மு.வில் இணைப்புச் சங்கமாகத் திரண்டனர்.

இதைக் கண்டு பீதியடைந்த நிர்வாகம்,தொழிலாளர்களின் வீடுகளுக்கு மொட்டைக் கடிதம் அனுப்பி மிரட்டுவது, ஊதிய உயர்வு அளிக்காமல் பல்லாண்டுகளாக ஏய்ப்பது, பணிமூப்புக் காலத்தை ஆவணப்படுத்த மறுப்பது, வேலைக்கு வரவில்லை- ஆயுதபூசை விழாவில் ஆபாச நடனமாடினர் என்றெல்லாம் பொய்க்குற்றம் சாட்டி வேலைநீக்கம் செய்வது - என அட்டூழியங்களைக் கேள்விமுறையின்றி அரங்கேற்றி வருகிறது. இக்கொடுமைகளை எதிர்த்து, இவ்வட்டாரமெங்கும் உழைக்கும் மக்களிடம் துண்டுப் பிரசுரங்கள், தெருமுனைக் கூட்டங்கள் மூலம் தொடர் பிரச்சாரத்தை மேற்கொண்ட பு.ஜ.தொ.மு., அதன் தொடர்ச்சியாக கடந்த 28.10.09 மற்றும் 6.11.09 ஆகிய தேதிகளில் பெருந்திரளான தொழிலாளர்களை அணிதிரட்டி எழுச்சிமிகு ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. அதன் பிறகு, 12.11.09 அன்று தொழிலாளர் துறை செயலருக்கு மனு கொடுக்கும் வகையில் தொழிலாளர்களைத் திரட்டி மிகப் பெரிய பேரணியை பகுதிவாழ் உழைக்கும் மக்களின் பேராதரவுடன் நடத்தியது. பல்வேறு இணைப்புச் சங்கங்களும், குடும்பத்தோடு தொழிலாளர்களும், மாணவர்கள்-இளைஞர்களும் பங்கேற்ற இந்த ஊர்வலம், புதுவை மாநிலத் தொழிலாளர்களிடம் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியது.



லியோ பாஸ்ட்னர்ஸ் நிர்வாகத்தின் கொத்தடிமைத்தனத்தையும் அடக்குமுறைகளையும் எதிர்ப்பதோடு, மறுகாலனியாக்கத்தின் வேட்டைக்காடாக புதுவை மாநிலம் மாற்றப்பட்டு தொழிலாளர்களின் சட்டபூர்வ உரிமைகள் பறிக்கப்பட்டு வருவதற்கு எதிராகவும் கடந்த இரு மாதங்களாக தொழிலாளர்களை அணிதிரட்டிப் பிரச்சாரம் செய்துவரும் பு.ஜ.தொ.மு., அடுத்த கட்டப் போராட்டத்துக்குத் தயாராகி வருகிறது. ஏற்கெனவே இந்துஸ்தான் லீவர், பவர் சோப்ஸ், கோத்ரெஜ் சாராலீ, மெடிமிக்ஸ் முதலான ஆலைகளில் போர்க்குணமிக்க போராட்டங்களின் மூலம் நிர்வாகத்தைப் பணியவைத்துள்ள பு.ஜ.தொ.மு., லியோ பாஸ்ட்னர்ஸ் நிறுவனத்திலும் வெற்றியைச் சாதிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

— பு.ஜ.செய்தியாளர்கள்,
புதுவை.


Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி



நடைபெற்றது. திருவரங்கத்தில் கருவறை நுழைவுப் போராட்டம், திருவையாறில் தமிழ்த் தீண்டாமைக்கு எதிரான போராட்டம், தில்லையில் சிற்றம்பல மேடையில் தமிழில் பாட நடத்திய போராட்டம் முதலானவற்றைக் குறிப்பிட்டு, அந்த வழியில் நந்தனார் நுழைந்த தெற்கு வாயிலை அடைத்து தீட்சிதர்கள் எழுப்பியுள்ள தீண்டாமைச் சுவரைத் தகர்த்தெறிவோம்! என்று இப்பொதுக்கூட்டத்தில் உறுதிபட அறிவித்தார், ம.க.இ.க.மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன். தீட்சிதப் பார்ப்பனர்களால் நந்தனார் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டது பற்றியும், நடராசர் கோயிலில் கருவறைக்கு எதிரே நந்தனாருக்கு ஆளுயர சிலை இருந்ததையும், அதை தீட்சிதர்கள் அகற்றிவிட்டதையும் ஆதாரங்களுடன் குறிப்பிட்டு, மீண்டும் அதே இடத்தில் நந்தனார் சிலையை நிறுவப் போராடுவோம் என்று சூளுரைத்தார், ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் ராஜு.

இக்கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய பா.ம.கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் திரு.வி.எம்.எஸ்.சந்திரபாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் மா.செ.சிந்தனைச் செல்வன் ஆகியோர் நியாயமான, அவசியமான இப்போராட்டத்தை வாழ்த்தினர். பார்ப்பனிய சதியைத் திரைகிழித்து ம.க.இ.க. மையக் கலைக்குழு நடத்திய "புதிய நந்தன்" எனும் நாடகமும், புரட்சிகர கலைநிகழ்ச்சியும் தீண்டாமைச் சுவரைத் தகர்க்க வேண்டிய அவசியத்தை உணர்த்தி, உழைக்கும் மக்களைப் போராட அறைகூவியழைத்தன.

ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; ஆகிய நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளின் முன்முயற்சியால் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் ஒருங்கிணைத்து நடத்திய இந்தப் பிரச்சார இயக்கமும் பொதுக்கூட்டமும், சிதம்பரம் நடராசர் கோயிலில் நமது முப்பாட்டன் நந்தனார் நுழைந்த தெற்கு வாயிலை அடைத்து பார்ப்பன தீட்சிதர்கள் எழுப்பியுள்ள தீண்டாமைச் சுவர் தகர்க்கப்படுவது உறுதி என்ற நம்பிக்கையை தமிழக மக்களிடையே நிலைநாட்டியுள்ளது.

- பு.ஜ.செய்தியாளர்கள்.


## தற்போது விற்பனையில்...



**துரோகிகளின் மவுனத்தில் துடிக்கும் முள்ளிவாய்க்கால்**

வெளியீடு: புதிய கலாச்சாரம்

விலை: ரூ. 20


**இந்தியாவின் இதயத்தின் மீதான போர்**

-அருந்ததி ராய்

(ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்)

வெளியீடு: ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு.

விலை: ரூ. 15




**கச்சத்தீவு: மறைக்கப்படும் வரலாறு பறிக்கப்படும் மீனவர் உரிமைகள்**

-டி.அருள் எழிலன்

வெளியீடு: கீழைக்காற்று

விலை: ரூ. 10






**RESIST OPERATION GREEN HUNT**

-A Collection of Essays

Published by: PALA-PLF-RSYF-NDLF

Price: Rs.30

**கிடைக்குமிடங்கள்:**

**புதிய கலாச்சாரம்,**
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை, (15-வது தெரு அருகில்),
அசோக் நகர், சென்னை- 600 083.
தொலைபேசி: 044-2371 8706

அஞ்சலில் பெற,
கூரியர் கட்டணம் ரூ.30
சேர்த்து அனுப்புக.

**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
10, அவுலியா தெரு,
எல்லீசு சாலை,
சென்னை- 600 002.
தொலைபேசி: 044- 2841 2367

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# காட்டு வேட்டை: நாட்டு மக்கள் மீதான போர்தான் இந்த நக்சல் ஒழிப்புப் போர்!


கடந்த நவம்பர் 19-ஆம் தேதியன்று மாவோயிஸ்டு தேடுதல் வேட்டை என்ற பெயரில், ஆந்திராவின் எல்லையை ஒட்டியுள்ள கோரபுட் மாவட்டத்தில் உள்ள நாராயணப்பட்னா வட்டத்தின் பல கிராமங்களைச் சூறையாடிய போலீசார், பலரைக் கைது செய்ததோடு, பெண்கள் மீது பாலியல் வன்முறையை ஏவினர். இதற்கு நியாயம் கேட்க, மறுநாளன்று நாராயணப்பட்னா போலீசு நிலையம் முன்பாகத் திரண்ட நிராயுதபாணிகளான ஏறத்தாழ 100 பழங்குடியினர் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்திய போலீசார், முன்னறிவிப்பின்றி துப்பாக்கிச் சூடு நடத்தி இருவரைக் கொன்றொழித்தனர். மாவோயிஸ்டு தீவிரவாதிகளின் சாஸி முலியா ஆதிவாசி சங்கம் (சி.எம்.ஏ.எஸ்.) என்ற அமைப்பு, பழங்குடியினரைத் திரட்டி வந்து போலீசு நிலையத்தைத் தாக்கி அழிக்க முற்பட்டதால், துப்பாக்கிச் சூடு நடத்தியதாக நியாயம் கற்பிக்கிறது அரசு. இந்த அமைப்பு இன்று நேற்றல்ல, நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே, கனிம வளமிக்க நாராயணப்பட்னா பகுதியை உள்நாட்டு-வெளிநாட்டு ஏகபோக முதலாளிகளுக்குத் தாரைவார்த்துவிட்டு, பழங்குடியின மக்களை இப்பகுதியிலிருந்து வெளியேற்றுவதை எதிர்த்துப் போராடி வருகிறது. பொதுவுடமை இலட்சியத்தை ஏற்கும் இந்த அமைப்புக்கும் மாவோயிஸ்டுகளுக்கும் தொடர்பில்லை. அதனாலென்ன? போலீசு அடக்குமுறையை எதிர்ப்பவர்கள் எல்லோரும் மாவோயிஸ்டு பயங்கரவாதிகள்தாம் என்கின்றன அரசும் போலீசும்.



காட்டு வேட்டை எனும் அரசுப் பயங்கரவாதப் போரை எதிர்த்து டெல்லியில் பழங்குடியினர் நடத்தும் ஆர்ப்பாட்டப் பேரணி. உள்படம்: ஒரிசா அரசால் சுட்டுக்கொல்ல உத்தரவிடப்பட்டுள்ள பழங்குடியினத் தலைவர் நச்சிகா லிங்கா.

இப்படுகொலையை எதிர்த்தும், நீதி விசாரணை கோரியும் ஒரிசாவின் நான்கு மாவட்டங்களில் பல்வேறு கட்சிகள் இணைந்து கடையடைப்புப் போராட்டம் நடத்தின. அதைத் தொடர்ந்து ரிசர்வ் போலீசுப் படையும் "கோப்ரா" அதிரடிப் படையும் நாராயணப்பட்னாவில் குவிக்கப்பட்டுள்ளன. சி.எம்.ஏ.எஸ். அமைப்பு தடைசெய்யப்பட்டு, அதன் தலைவர்களுள் ஒருவரான நச்சிகா லிங்காவைச் சுட்டுக் கொல்ல ஒரிசா அரசு உத்தரவிட்டுள்ளது. பொய்வழக்கு சோடிக்கப்பட்டு சி.எம்.ஏ.எஸ். அமைப்பின் முன்னணியாளர்களும், பெண்கள்-சிறுவர்கள் உள்ளிட்ட பழங்குடியின மக்களும் நூற்றுக் கணக்கில் கைது செய்யப்பட்டு தாக்குதல்களும் தொடர்வதால், அவர்கள் காடுகளில் தலைமறைவாகியுள்ளனர். பகலில் போலீசு எந்நேரமும் வந்து கைது செய்யும் என்பதால், காடுகளில் ஒளிந்து கொண்டு இரவுதான் கிராமத்துக்குத் திரும்புகிறார்கள். இதனால் விவசாயம் செய்ய முடியாமல் வறுமையும் பட்டினியும் அச்சமும் அவர்களைப் பிடித்தாட்டுகிறது.

நாராயணப்பட்னா படுகொலைக்கு எதிராக, ஒரிசா முதல்வரின் கொடும்பாவியை எரித்து ஆர்ப்பாட்டம்.



கடந்த டிசம்பர் 9-ஆம் தேதியன்று டெல்லியைச் சேர்ந்த மனித உரிமை அமைப்பினரும் அறிவுத்துறையினரும் நாராயணப்பட்னாவுக்கு 9 பேர் கொண்ட மகளிர் உண்மையறியும் குழுவாக வந்தபோது, போலீசாராலும் "சாந்தி சமிதி" எனும் குண்டர் படையினராலும் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டு துரத்தியடிக்கப்பட்டனர். இவை அத்தனையும் நாராயணப்பட்னா போலீசு நிலையம் முன்பாகவே நடந்துள்ளது. சட்டிஸ்கருக்கு ஒரு "சல்வாஜுடும்" என்றால், ஒரிசாவுக்கு ஒரு "சாந்தி சமிதி"! ஆளும் பிஜு ஜனதா தளக் கட்சியின் தலைவர்களே இக்குண்டர்படையைக் கட்டியமைத்துள்ளனர்.

போர்க்களப் பகுதியைத் தவிர, நாட்டின் எந்தப் பகுதிக்கும் மக்கள் சுதந்திரமாகச் சென்று வரலாம் என்ற உரிமை ஒரிசாவில் பறிக்கப்பட்டு விட்டது. எனில், ஒரிசா போர்க்களமா? ஆம். இது போர்க்களம். காடுகள் மலைகள் நிறைந்த, கனிம வளமிக்க வங்கத்திலிருந்து ஆந்திரா வரையுள்ள மாநிலங்களில் ஒரு லட்சம் துணை இராணுவப் படைகள் குவிக்கப்பட்டு, தமது மண்ணைக் காக்கப் போராடும் பழங்குடியினர் மீது காட்டு வேட்டை எனும் போர் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. கடந்த டிசம்பர் 17-ஆம் நாளன்று தலைநகர் டெல்லியில், நாட்டு மக்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள இப்பயங்கரவாதப் போரை எதிர்த்து, பல மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு அமைப்புகளின் சார்பில் ஒடுக்கப்பட்ட மக்கள் மிகப்பெரிய ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியுள்ளனர்.

இந்நிலையில், இந்தியாவின் மானம் காக்க, மண்ணைக் காக்க போராடும் உழைக்கும் மக்களோடும் நக்சல்பாரி புரட்சியாளர்களோடும் நாம் அணிதிரளப் போகிறோமா? அல்லது, உள்நாட்டு-வெளிநாட்டு ஏகபோக முதலாளிகளின் சூறையாடலுக்காக நடத்தப்படும் காட்டுவேட்டை போர் தொடர அனுமதிக்கப் போகிறோமா?